www.padippakam.com

# இந்தியாவின் தேசிய இனச் சிக்கலும் ஆளும் வர்க்கங்களும்



சுனிதிகுமார் கோஷ்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் தேசிய இனச் சிக்கலும் ஆளும் வர்க்கங்களும்

**சுனிதி குமார் கோஷ்**

**அலைகள் வெளியீட்டகம்**
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.
தொலைபேசி : 4815474

படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின்
தேசிய இனச் சிக்கலும்
ஆளும் வர்க்கங்களும்

(C) சுனிதி குமார் கோஷ்

தமிழாக்கம் : திருமலை

முதல் பதிப்பு : மே, 1997

வெளியீடு :
அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

அட்டை முகப்பு : மாரிமுத்து

பக்கங்கள் : 76

விலை : ரூ. 20—00

அச்சிட்டோர் :
அலைகள் அச்சகம்,
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

படிப்பகம்

www.padippakam.com



# முன்னுரையின் சில பகுதிகள்

தற்போது எழுதிக் கொண்டு இருக்கும் **இந்தியாவின் தேசிய இனச் சிக்கலும், வங்காளத்தைத் துண்டாக்கலும்** என்ற புத்தகத்தின் முதல் பகுதிதான் இப்புத்தகம் ஆகும். அப்புத்தகம் இன்னும் முழுமையாகவில்லை. முழுமையாக முடியும் வரை இந்தப் பகுதி வெளியிடாமல் காத்திருக்க தேவையில்லை. இந்தியாவின் தேசிய இனச் சிக்கல் என்பது இன்றைய பெரும் அரசியல் நிகழ்ச்சிகளில் ஒன்றாக உள்ளது. இதுபற்றி விரிவான கலந்துரையாடலும், விவாதமும் தேவைப்படுகின்றது.

90 கோடிகளுக்கு மேல் மக்கள் தொகையுடைய இந்தியாவானது ஒரு பல்தேசிய அரசு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும். தங்களின் சொந்த மொழி, வாழ்க்கை முறைகள், மரபுகள், பண்பாடு, தனித்தன்மையுடன் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழ்ந்து கொண்டு இருக்கும் இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் மிகவும் பழமையானவை ஆகும். அவற்றில் சில உதித்து எழுந்து கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் பல விழித்தெழ உள்ளன. பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை உணர்தல் என்பது தேசிய இனங்களுடைய இன்றைய வரலாற்றுக் கடமையாகும். அவைகளின் இறுதி ஒற்றுமையானது முழுமையான சுதந்திரம், சனநாயகம், சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே நிகழ முடியும்.

இன்றைய பிரச்சினையினுடைய பன்முகச் சிக்கல்களைப் புரிந்து கொள்ள அதை அதனுடைய வரலாற்று நிலையில் வைத்துப் பார்த்தால்தான் புரிந்து கொள்ள முடியும். இந்தப் பிரச்சினையை இவ்வளவு மோசமாகச் செய்த உடனடியான கடந்தகால நிகழ்ச்சிகளைப் பற்றிய சுருக்கமான வரைவை தருவதற்கு இந்தப் புத்தகத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளது .....

படிப்பகம்

www.padippakam.com



இந்திய ஆட்சியாளர்கள் பொருளாதார அரசியல் முடிவுகளை எடுப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் இந்தியாவின் விவசாய செயல்பாடுகள், ரூபாயின் மதிப்பைக் குறைத்தல், ஏகாதிபத்திய மூலதனத்திற்கான கதவுகளைத் திறந்து விடுதல், இறக்குமதிக்கான தடைகளை நீக்குதல், தொழிற்சாலைகள் மீதான அரசுக் கட்டுப்பாடுகளைத் திரும்பப் பெறுதல், அரசு தொழில் நிறுவனங்களைத் தனியார் மயமாக்குதல் போன்ற இந்தியச் சமூக அமைப்பை உருவாக்கக் கூடிய, இந்திய மக்களின் வாழ்வில் தாக்கத்தை உருவாக்கக் கூடிய அனைத்து முக்கிய முடிவுகளுமே ஏகாதிபத்திய நாடுகளின் தலைநகரங்களில் குறிப்பாக வாஷிங்டனில் தான் எடுக்கப்படுகின்றன. அவ்வாறு எடுக்கப்பட்ட முடிவுகள் புதுதில்லி மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இது ஒரு நாட்டின் பொருளாதாரத்தை ஏகாதிபத்திய பொருளாதாரத்திற்கு அடகு வைப்பதாகும். தனது பொருளாதாரத்தை அடகு வைத்த நாடுகளின் அடிப்படை நிகழ்வுகளை தீர்மானிப்பது காலனியத்தின் அல்லது அரைக் காலனியத்தின் சாராம்சமாகும். இந்தியத் திட்டக் குழுவின் முன்னாள் உறுப்பினர் திரு. ஜே. டி. சேத்தி, ''நேருவின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள அனைத்தும், தொடக்கத்திலிருந்தே சார்புத் தன்மையுடையதாகவே இருந்தது. ஆனால், சுயசார்பு தொழில் மயமாக்கல் என்று விளம்பரப்படுத்தப்பட்டது''[2] என்று சரியாகவே கூறியுள்ளார். நேருவின் விளக்கப்படி இந்தியா ஓர் வாடிக்கை நாடுதான். எனவே ஒரு நாட்டின் சார்புத் தன்மையை அல்லது சார்பற்ற நிலையை அதன் பெரிய பரப்பளவை வைத்துத் தீர்மானிக்க முடியாது. கூடாது. அப்படியானால் இங்கிலாந்து இரு நூறு ஆண்டுகள் இந்தியாவை ஆண்டிருக்க முடியாது.

மார்க்ஸிய—லெனினியவாதிகள் அனைத்து ஒடுக்கப்பட்ட நாடுகளின்—பெரிய, சிறிய நாடுகளின் சுதந்திர உரிமையை உயர்த்திப் பிடிக்கின்றனர். பிரிந்து போவதை உள்ளடக்கிய சுயநிர்ணய உரிமையை, தங்களுக்கான சொந்த நாடுகளை உருவாக்கிக் கொள்ளும் உரிமையை, ஆதரிக்கின்றனர். ''ருஷ்யாவில் நாம் நமது சோசலிசத்திற்கான புரட்சிகரப் போராட்டத்துடன் தேசிய இனப் பிரச்சினைக்கான புரட்சிகரத்திட்டத்தையும் கட்டாயம் இணைத்துக் கொள்ள வேண்டும்''[3] என்று லெனின் கூறினார். மேலும், ''சார் ஆட்சியினால் ஒடுக்கப்பட்ட அனைத்து நாடுகளும் பிரிந்து சென்று சுதந்திரமடைவதற்கான கோரிக்கையை ருஷ்ய பாட்டாளி வர்க்கம் முன் வைக்கவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இல்லையெனில், சோசலிசத்திற்கான நமது புரட்சிகரப் போராட்டம், ஜனநாயகத்திற்கான, தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கான புரட்சிகர நடைமுறைகளோடு இணைக்கப் படாத நிலையில், வெறும் முழக்கமாகவே அமைந்துவிடும்''[4] என்றும் கூறினார்.

'தேசப்பற்று முற்போக்கானதாகவும் அதே சமயம் பிற்போக்கானதாகவும் இருக்கும்' என மாவோ கூறினார். சீனாவையும் மற்றைய நாடுகளையும் அடிமைப்படுத்த வேண்டுமென்ற நோக்குடைய ஜப்பானிய தேசப்பற்று பிற்போக்கானதே. ஆனால் ஜப்பானிய ஆக்கிரமிப்பை முறியடிக்க தேசபக்தியுள்ள சீன மக்களைத் திரட்டியது முற்போக்கானதாகும். ''சீனக் கம்யூனிஸ்டுகள் தேசபக்தியை உலகத் தேசியத்துடன் இணைக்க வேண்டும். எனவே தேசிய விடுதலைப் போராட்டங்களில் தேசபக்தியென்பது உலகத் தேசியமாக அமைய வேண்டும்.''[5] ''ஒடுக்கப்பட்ட நாடுகளின் பூர்ஷ்வா தேசியம் ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு பொதுவான ஜனநாயக உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கும். இவ்வுள்ளடக்கத்தை நாம் நிபந்தனையின்றி ஆதரிக்க வேண்டும்.''[6] என்றார் லெனின்.

மார்க்ஸிய — லெனினியவாதிகளின் இறுதி நோக்கம் தேசங்கள் முழுமையாக ஒன்றிணைவதுதான். ஆனால் அத்தகைய இணைப்பு சுதந்திரம் மற்றும் ஜனநாயக அடிப்படையில்தான் நடைபெற முடியும். ஒடுக்குமுறைக்கெதிராகவும், பிரிந்து செல்லும் உரிமைக்காகவுமான அனைத்து ஒடுக்கப்பட்ட நாடுகளின் எழுச்சியானது முழுமையான இணைப்பிற்கு இட்டுச் செல்லக்கூடிய இடைப்பட்ட காலமாகும். பரந்துபட்ட ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்த, தேசிய இனங்களுக்கான சுயாட்சிப் பகுதிகள்—அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும்கூட-உருவாக்கப்பட வேண்டும்.[7]

இந்தியாவில் சில தேசிய இனங்கள் தனிநாடுகளை உருவாக்கிக் கொள்ள முடியாத அளவிற்கு மிகச் சிறியனவாக உள்ளன. அவை கலாச்சார—தேசிய சுயாட்சியை அனுபவிப்பதோடு லெனின் கூறியபடி, உண்மையான ஸ்தல சுயாட்சியை அனுபவிப்பவையாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்குச் சொந்தமான — ஜனநாயகமான — சுயமான அரசாங்கத்தை உருவாக்கிக்கொள்ள சுயாட்சிப் பிரதேசங்கள் நிச்சயமாக இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



மார்க்சும் ஏங்கல்சும் போலந்து, அயர்லாந்து போன்ற நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களை ஆதரித்தனர். ''ஒடுக்கப் பட்ட நாடுகள் பிரிந்து செல்வதென்பது கூட்டமைப்பை உருவாக்கத்தான். பிரிவினைக்கான நோக்கில் அல்ல. பொருளாதார, அரசியலில் ஒருமித்த கவனம் செலுத்துவதற்குதான். அத்தகைய ஒருமித்தத் தன்மை ஜனநாயக அடிப்படையில் அமைய வேண்டுமென்று மார்க்ஸ் நினைத்தார்'' என்று லெனின் கூறுகிறார்.[8]

லெனின் கூறுவது போல்'' மனித இனத்தை சிறு சிறு நாடுகளாகத் துண்டாடுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதோ, நாடுகளைத் தனிமைப் படுத்த வேண்டுமென்பதோ சோசலிசத்தின் நோக்கமன்று. மாறாக, நாடுகளை ஒன்றுக் கொன்று நெருக்கமடையச் செய்வதோடு அவற்றை இணைக்கவும் வேண்டும்... அதே போன்று ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் சர்வாதிகாரம் என்ற மாறும் காலகட்டத்தின் மூலம்தான் வர்க்கங்கள், மனித குலத்தால் ஒழிக்கப்படும் என்றிருக்கும் போது, ஒடுக்கப் பட்ட தேசங்களின் சுதந்திரம் மற்றும் பிரிந்து செல்வதற்கான முழுமையான எழுச்சிக்கான— மாறும் காலகட்டத்தின் மூலம் தேசங்களை தவிர்க்கயிலாதவாறு இணைக்கவும் முடியும்''[9] ''மேலும் மிக நெருக்கமான ஒற்றுமையும் தேசங்களை இணைப்பதும் ஓர் உண்மையான உலகக் கண்ணோட்டத்தோடு கூடிய ஜனநாயக அடிப்படையில் தான் செயல்படுத்த முடியும்''[10] என்கிறார் லெனின்.

இன்று இந்தியாவிலுள்ள பாராளுமன்ற கம்யூனிஸ்டு மற்றும்சோசலிசக் கட்சிகள் இந்திய ஒற்றுமையின் அதிதீவிர பாதுகாவலர்களாக இருக்கின்றனர். ''நமது கட்சி நாட்டின் ஒற்றுமைக்காக நிற்கும் அதே வேளையில், எல்லா வகையான பிரிவினை வாத சக்திகளை எதிர்த்தும் போராடி வருகிறது நாம் இன்று செயல்படத்தக்க, திறமை வாய்ந்தமைய அரசிற் காக—நாட்டை ப்பாதுகாக்கக்கூடிய, பொருளாதார வாழ்வினை நிலைப்படுத்தி ஒருங்கிணைக்கக்கூடிய, மற்றும் வெளி விவகாரம், வெளிநாட்டு வாணிபம், தொலைத் தொடர்பு போன்றவற்றை சீராக நடத்துவதற்கான போதுமான படை பலத்தை கொண் டிருக்கக் கூடிய அரசிற்காக— நிற்கிறோம்.''[11] என்று சி.பி.எம். இன் அறிக்கை கூறுகிறது.

''இன்றைய இந்தியச் சூழலில் சுயநிர்ணய உரிமைக்காக வாதிடுவது மக்களின் எதிரியான ஏகாதிபத்தியத்திற்கு வாய்ப்பாக

படிப்பகம்

www.padippakam.com



அமைந்து தேசிய இனப் பிரச்சினையின் பிரதான பாத்திரத்தை முழுமையாக தவறவிட்டு இத்துணை ஆண்டுகள் வரை அவர்கள் பெற்று வந்த வளர்ச்சிகளை இழக்க நேரிடும்''[12] என்று சி.பி.எம். இன் ரணதிவே எழுதியுள்ளார். அவர் மேலும், ''ஆங்கிலேயர்களை வெளியேற்றிய பிறகு தோன்றிய தேசிய அரசு ஏற்கெனவே இருந்து வந்த பல்வேறு பட்ட மொழி வாரி குழுக்களை சந்திக்க வேண்டியதாயிற்று ஒரு நிலப்பிரபுத்துவ— முதலாளித்துவ ஆட்சியில் ஒற்றுமையும் சமத்துவமும் பல்வேறு மொழிக் குழுக்களிடையே எவ்வாறு உருவாக்க முடியும். சமத்துவ மின்மையானது அரசின் ஒற்றுமையைக் குலைப்பதையும், தேசத்தை துண்டாடுவதையும் எவ்வாறு தடுக்கமுடியும் என்பதே மிக முக்கிய பிரச்சினையாகும்''[13] என்று கூறுகிறார்.

ரணதிவே போன்ற 'மார்க்ஸிஸ்டுகள்' 'முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ ஆட்சியின் கீழேயே' பல்வேறு மொழி பேசக் கூடிய பகுதிகளில் அவற்றின் ஒற்றுமை, சமத்துவம் மற்றும் இது தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும் என்று கூறுகின்றனர்.

இன்றைய இந்தியாவின் ஆளும் வர்க்கங்களின் ஓர் அங்கமாக இருந்து கொண்டு பல்வேறு மாநிலங்களில் அரசுக் கட்டிலில் வீற்றிருக்கும் பாராளுமன்ற கம்யூனிஸ்ட்டுகள், இந்திய ஆளும் வர்க்கங்களின் கொள்கைகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவது இயற்கையே. ஏகாதிபத்திய மூலதனம் மற்றும் இந்தியப் பெருமுதலாளிகளின் நலன்களுக்குச் சேவை செய்யும் ''தேசிய அரசை'' அதன் ஒற்றுமையை பாதுகாக்க அதன் உறுதியான பாதுகாவலர்களாகச் செயல்படுகின்றனர். 'பல்வேறு மொழிக் குழுக்களுக்குள்' சமத்துவத்தை தக்கவைக்க- அதாவது மைய்ய மாநில அரசுகளுக்கிடையில் ஒரு சில சிறிய உறவு மாற்றங்களைச் செய்து கொண்டால் போதும் என்கின்றனர். அதன் மூலம் நிலவிவரும் சமத்துவமற்ற, ஒடுக்கு முறையான இன்றைய ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்று நம்புகின்றனர்.

ரணதிவே மேலும் கூறும்போது, ''இப்பிரச்சினை தொடர்பாக லெனின் சரியாகவே கீழ் கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார். 'உழைக்கும் மக்களின் நலனுக்காக பாட்டாளி வர்க்கக் கட்சி மிகப் பெரிய நாட்டை உருவாக்கவே முயல்கிறது. தேசங்களை மிக நெருக்கமாகக் கொணரவும், அவற்றை இணையச் செய்யவும் முயல்கிறது. ஆனால் தனது இந்த நோக்கத்தை வன்முறை

படிப்பகம்

www.padippakam.com



மூலமன்றி, அனைத்து தேசங்களின் உழைக்கும் மக்களின் சுதந்திரமான சகோதரத்துவ ஒற்றுமை உணர்வின் மூலம்தான் செயல்படுத்துகிறது,''[14] என்று கூறுகிறார். தனது வர்க்க குணாம்சத்தை ஒட்டியே, ரணதிவே லெனினின் மேற்கோளுக்கு முந்தைய பகுதியைக் கண்டுகொள்ளாமலேயே விட்டிருக்கிறார். அப்பகுதியில்,

''தேசியப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், பாட்டாளி வர்க்கக் கட்சி முதன் முதலில் அறைகூவி அறிவிப்பைச் செய்து, ஜாரிசத்தினால் அல்லது அரசுடன் பலாத்காரமாக இணைக்கப்பட்டுள்ள அல்லது அரசின் எல்லைக்குள் பலாத்காரமாக வைக்கப்பட்டுள்ள ஒடுக்கப்படும் அனைத்து தேசங்களின் மக்களின் ருஷ்யாவிலிருந்து பிரிந்து செல்லும் சுதந்திர உரிமையை முழுமையாக அங்கீகரிக்க வேண்டும்.

பிரிந்து போவதற்குரிய உரிமையை நடைமுறையில் அங்கீகரிக்காத எந்தவொரு கொள்கையும், திட்டமும், அறிக்கையும்,—அதாவது இணைத்துக் கொண்ட பகுதிகளை விட்டு விடுகிறோம். —மக்களை ஏமாற்றும் முதலாளித்துவ தந்திரங்களோயாகும். அல்லது ஒருதலைபட்சமான குட்டி முதலாளித்துவ விருப்பமேயாகும்''[15] என்று லெனின் எழுதுகிறார்.

மேலும் ''பாட்டாளி வர்க்கக் கட்சியின் உடனடி வேலை பிரிந்து செல்வதற்கான முழுமையான சுதந்திரத்தை உணர்ந்து அறிவித்தலே ஆகும். இப்பணி முடிந்த பிறகு தான் தேசங்களும் மக்களும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையின் கீழ் ஒன்றோடொன்று நெருங்கிவரவும், அதைத் தொடர்ந்து இணையவும் அல்லது ஒன்றுபடவுமான நிலையை அடைய முடியும். முழுமையான பிரிந்து போகும் சுதந்திரம் பரந்துபட்ட ஸ்தல மற்றும் தேசிய சுயாட்சி, தேசிய சிறுபான்மையினரின் விரிவான, உத்திரவாதமளிக்கப்பட்ட உரிமைகள்— போன்றவைகளே புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் திட்டங்களாகும்,''[16] என்கிறார் லெனின்.

தேசங்களின் இறுதியான இணைவைப் பற்றி லெனினை மேற்கோள் காட்டும் ரணதிவே, பிரிந்து செல்வதற்கான முழு சுதந்திரம் பற்றிய உடனடி உணர்வைப் பற்றி லெனின் கூறியுள்ளதை வேண்டுமென்றே ஒதுக்கியுள்ளார். இதுதான் ரணதிவே கும்பல் லெனினை திரித்துக் கூறி மக்களை ஏமாற்றக் கையாளும் வழக்கமான முறையாகும்.

www.padippakam.com



ரணதிவேயும் சி. பி. எம் கட்சியும் கூறுவது போல் 'சுய நிர்ணய உரிமைக்காக வாதிடுவது மக்களை அவர்களது எதிரிகளான ஏகாதிபத்தியத்திடம் ஒப்படைப்பதாகுமா?' எது உண்மையானது? இந்தியப் பொருளாதாரமும், இந்திய அரசு இயந்திரமும் ஏகாதிபத்திய நாடுகளின் மற்றும் அவற்றின் நிதி நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நிதியம் (IMF) போன்றவற்றிடம் பெற்ற அபரிமிதமான கடன்களில் ஓடிக் கொண்டிருப்பதை மறுக்க முடியுமா? அவை விதித்துள்ள நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டுள்ளது இந்தியாவின் இறையாண்மைக்கு இழுக்கல்லவா? இந்திய வாழ்வின் அனைத்து அங்கங்களும்— விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து, தொடர்புச் சாதனங்கள், கல்வி மற்றும் பிற— ஏகாதிபத்திய மூலதனத்தின், நிதிநிறுவனங்களின் மேலாதிக்கத்திலிருப்பது உண்மை தானே? உண்மையாதெனில் 1947இல் தோன்றிய இந்திய யூனியனாது முதலில் பிரிட்டிஷ் டொமினியனாக இருந்து, பிரிட்டனின் நேரடி ஆட்சியாக மாறி, பின்பு பல ஏகாதிபத்தியங்களின் பிடியில் மறைமுக ஆட்சிக்குச் சென்றது. அப்போது தான், இந்தியா, பிரிட்டனின் காமன் வெல்த் நாடுகளின் ஓர் உறுப்பினராகியது.[17] இந்தியாவும் இந்தியப் பொருளாதாரமும் ஏற்கெனவே ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு அடகு வைக்கப்பட்டு விட்டது. இந்திய ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்தியங்களின் எடுபிடிகளாக செயல்படுவதோடு ஏகாதிபத்தியச் சக்திகளின் நேரடி அல்லது அவற்றின் நிதி நிறுவனங்களான உலகவங்கி, சர்வதேச நிதியம் போன்றவற்றின் மறைமுக ஆணைகளுக்குத் தலை வணங்கி செயல்படுகின்றனர்.

இந்தியாவில் தேசங்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவது அல்லது வாதிடுவது எதிரிகளுக்குச் சாதகமாக அமைவதைவிட ஏகாதிபத்தியங்கள் மற்றும் அவர்களது இந்திய ஏஜண்டுகளுக்கு எதிரான போராட்ட தளங்களில் ஒன்றாகவே அமைகிறது. இதனால் தான் மார்க்சிய- லெனினிய வாதிகளின் புதிய ஜனநாயகப் புரட்சிக்கான புரட்சிகர போராட்டமானது **''தேசியப் பிரச்சினையின் புரட்சிகரத் திட்டத்தோடு''** மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

மறுபுறம், தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமானது நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களோடு இணைக்கப்பட்டால்தான் வெற்றி பெற முடியும். மாவோ கூறியது போல், ஒவ்வொரு தேசியப் போராட்டமும் உள்ளடக்கத்தில் வர்க்கப் போராட்டம்

படிப்பகம்

www.padippakam.com



களே. இவை அனைத்தும் அன்னிய சுரண்டும், ஒடுக்கும் வர்க்கங்களை உள்ளடக்கிய தேசிய இனங்களின் பெரும்பான்மையாக உள்ள மக்களுக்கு எதிரான போராட்டங்களல்ல. அந்நிய சுரண்டல் காரர்களின் சுயநலத்திற்காகவும் அவர்களது ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்குள்ளேயே யிருக்கும் சுரண்டும் வர்க்கத்திற்கெதிரான போராட்டங்களாகும். இந்தியாவில் தேசிய இனங்களுள்ள சில பகுதிகளில் தேசிய உணர்வுகளை வெளிப்படுத்தும் போராட்டங்கள் முதலாளிகளாலும், குட்டி முதலாளிகளாலும் தலைமை ஏற்று நடத்தப்படுகின்றன. அத்தகைய போராட்டங்கள் வர்க்கப்போராட்டங்களிலிருந்து நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் மிச்ச சொச்சங்களை எதிர்த்த போராட்டங்களிலிருந்து, தரகு அதிகார வர்க்க முதலாளிகளை மற்றும் ஏகாதிபத்தியங்களை எதிர்த்த போராட்டங்களிலிருந்து விலகியே உள்ளது. இத்தகைய போராட்டங்கள் அவ்வாறு விலகி நிற்குமானால், அவை இறுதியாக இந்திய ஆளும் வர்க்கங்களோடு சமரசம் செய்து கொண்டு துரோகமிழைப்பதில் முடியும்.

"சன் யாட் சென் தலைமையில் 40 ஆண்டுகளாக நடைபெற்ற புரட்சி ஏன் தோற்றது? ஏனெனில் ஏகாதிபத்திய கால கட்டத்தில் குட்டி முதலாளிகளும் தேசிய முதலாளிகளும் உண்மையான புரட்சிக்குத் தலைமை ஏற்று வெற்றிக்கு இட்டுச் செல்லமுடியாது[18]" என்று மாவோ கூறியுள்ளார்.

ஜப்பானிய எதிர்ப்புக் காலகட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலை பற்றி மாவோ கூறியிருப்பதாவது:

"பாட்டாளிகள் முதலாளிகளைப் பின்பற்ற வேண்டுமா அல்லது முதலாளிகள் பாட்டாளிகளைப் பின்பற்ற வேண்டுமா? சீனப் புரட்சியில் தலைமைக்கான பொறுப்பேற்பது பற்றிய இந்தக் கேள்வியில் தான் சீனப்புரட்சியின் வெற்றியோ தோல்வியோ அடங்கியிருக்கின்றது"[18a]

இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் (பிரிந்து செல்லும் உரிமையோடு கூடிய) சுய நிர்ணய உரிமைப் போராட்டங்கள் இந்திய மக்களின் நிலப் பிரபுத்துவ, ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புப் புரட்சியின் — புதிய ஜனநாயகப் புரட்சியோடு மிகவும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. முன்னது முதலாளிகளாலும், குட்டி முதலாளிகளாலும் தலைமை தாங்கப்பட்டு, வர்க்கப் போராட்டத்திலிருந்து விலகி நிற்குமானால் அப்போராட்டங்

www.padippakam.com



களுக்குத் துரோக மிழைப்பதோடு (அ) திசை விலகுவதோடு வேறு பல அபாயங்களையும் தோற்றுவிக்கும். அவை இனவெறி முழக்கங்களை உருவாக்குவதோடு மற்ற ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களிலுள்ள உழைக்கும் மக்களுக்கெதிராகத் திருப்பப்பட்டு பிரிவினையை தோற்றுவிக்கும். சகோதர படுகொலைகளுக்கும் இட்டுச் செல்லும். போலந்து மக்களின் சுயநிர்ணய உரிமையை நியாயப்படுத்திக் கூறும் போது, லெனின், ''தேசங்களின் சுய நிர்ணய உரிமையைக் கோரும் அதே சமயம் தேசிய தனிச் சிறப்பு உரிமைகள் (குறுகிய மனப்பான்மையுடன்) கேட்கும் தன்மையை கண்டிப்பாக வேறுபடுத்திக் காணவேண்டும். யூதர்களையும், மற்றவர்களையும் போலந்து முதலாளிகள் ஒடுக்குவதை நாம் எதிர்க்கிறோம்.''[19] என்று கூறுகிறார். பல்வேறு தேசங்களின் உழைக்கும் மக்களின் மற்றும் இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் ஒற்றுமைதான் சுயநிர்ணய உரிமைக்கான அவர்களது போராட்டங்களின் வெற்றிக்கு உத்திரவாதமளிக்கும்.

அவர்களது ஒற்றுமை கட்டமைத்து பாதுகாக்கப்பட்டால் தான் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி நடைமுறைப் படுத்த முடியும். முதலாளிகளும், குட்டி முதலாளிகளும் அவர்களது வர்க்கத் தன்மையின் காரணத்தால், விவசாயிகளையும் தொழிலாளி வர்க்கத்தையும் திரட்ட முடியாமல் போகலாம். இவ்விழப்பினால், முதலாளிகளும், குட்டி முதலாளிகளும் தலைமையேற்று நடத்தக் கூடிய இயக்கங்கள் சில நேரங்களில் சீரழிவுற்று தனிநபர் அல்லது குழு பயங்கரவாதமாகி, எதிரிகளையோ அல்லது சில நேரங்கள் சாதாரண அப்பாவி மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட பிற தேசிய இனங்களுக்கு எதிராகக்கூட செயல் பட நேரிடும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் தேசியம் அந்நிய ஒடுக்குமுறையாளர்களுக்கும் அவர்களது உள்நாட்டு கூட்டாளிகளுக்கும் எதிராக இருக்கும்போது அது முற்போக்கானதாக இருக்கும். அவ்வாறின்றி பிற தேசிய இனங்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக் கெதிராக செயல்படும் போது, அடிமைப்படுத்துபவர்களுக்கும், ஒடுக்குபவர்களுக்கும் சாதகமாக அமைந்து ஒரு தேசிய இனத்தை மற்றொன்றிற்கு எதிராக மோதவிட்டு உழைக்கும் மககளின் அணிகளையே உடைத்து விடுகிறது.

எந்தவொரு தேசமோ அல்லது தேசிய இனமோ இன்று மரபு இன அடிப்படையில் சுத்தமானதாக இல்லை ஒரு தேசிய

www.padippakam.com



இனத்தின் தோற்றத்தை ஆராயும்போது அது ஒரு குறிப்பிட்ட மரபு இனததிலிருந்து தோன்றியதாக இருக்கும். ஆனால் நாளடைவில், பிற இனங்களின் இரத்தக் கலப்பால், கலப்பினமாக இருக்கும் இனத்தை தூய்மைப் படுத்துதல் என்பது விஞ்ஞானத்திற்குப் புறம்பானது மட்டுமின்றி மிக அபாயமானதாகும். வரலாற்றுக் காரணங்களுக்காக, ஆளும் வர்க்கத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளான பிற பகுதி மக்கள் அல்லது தேசிய இனங்கள் ஒரு குறிப்பிட்ட தேசிய இனமக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் குடியேறியிருக்கலாம். காலனிய ஆட்சியாளர்களும் அவர்களது வாரிசுகளும் ஒடுக்கப்பட்ட அனைத்து தேசிய இனங்களுக்கும் பொது எதிரிகளாக இருந்ததுடன் இந்தப் பிரச்சினைக்கு மேலும் சிக்கல்களைச் சேர்த்தார்கள். வரலாற்று அமைவுகளிலிருந்து இப் பிரச்சினைகளை விலக்கிப் பார்ப்போமேயானால் இதற்கு யாதொரு தீர்வையும் காண இயலாது.

ஒரு பகுதியில் உள்ள பெரும்பான்மை தேசிய இன மக்களுக்கும் சிறுபான்மை தேசிய இனங்களுக்குமிடையிலான போராட்டங்கள், இத் தேசிய இனங்களுக்குள்ளிருக்கும் ஒடுக்குமுறையாளர்களின் கரத்தைப் பலப்படுத்தும். இவ்விரு வர்க்கங்களுக்கு இடையே வர்க்கப் போராட்டத்திற்குப் பதிலாக, வர்க்க ஒற்றுமை ஏற்பட்டு தேசிய இனப் போராட்டமானது சீரழிந்து போகும். இன்று தேசிய இனங்கள் தங்களது பொது எதிரிக்கு எதிராக தோளோடு தோள் நின்று போராட வேண்டியதிருக்கிறது. இத்தகைய பொதுப் போராட்டங்கள் அவர்களை நெருக்கமாகப் பிணைத்து, ஐக்கியப்படுத்தி ஒரு பொது தேசிய இனமாக உயர்த்தும் அல்லது அவர்களது போராட்டங்களில் வெற்றி பெற்றபின் சில சரிகட்டுதல்களை ஏற்படுத்திக்கொள்ளும்.

அருகருகே வாழ்ந்து வரும் தேசிய இனங்களுக்கிடையே உள்ள இன வேறுபாடுகளை, பொது எதிரிகள் ஒரு இனத்திற்கெதிராக மற்றதை மோத விடுவதற்கு அடிக்கடி பயன்படுத்தி, தேசிய விடுதலைப் போராட்டங்களையே அழித்து விடுவார்கள், எதிரிகள், புரட்சிகர இயக்கங்களுக்குள்ளேயே தங்களது ஏஜெண்டுகளை வைத்து அவ்வியக்கங்களை நிலைகுலையச் செய்துள்ளதை அரசியல் பணியாற்றியவர்களின், மோசமான அனுபவங்களிலிருந்து தெரிந்து கொள்ள முடியும் சில சமயங்களில் புரட்சிகர அமைப்புகள் போல் தோற்றமளிக்கும் எதிர் — புரட்சி அமைப்புகளை உருவாக்கி, மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி, குழப்பி, குழுக்களாகப் பிரித்து விடுவார்கள். நாகர்களுக்கும், குக்கிகளுக்

www.padippakam.com



கிடையிலும், போடோக்களுக்கும் அஸ்ஸாமியர்களுக்கும் அல்லது வங்காள மொழி பேசும் உழைப்பாளிகளுக்கும் இடையிலும் பரஸ்பரம் மோதல்களை உருவாக்கி வருபவர்கள்தான் இவர்கள் அனைவருக்கும் பொது எதிரிகளாவர்

திரிபுரா, அருணாசலப்பிரதேசம் மற்றும் மிஸோராமில் லிருந்து சக்மாக்களை வெளியேற்றும் நடவடிக்கை தேசிய சுயநிர்ணயத்திற்கு சேவை செய்வது கிடையாது. மாறாக பிற்போக்கு ஆளும் வர்க்க நலனுக்கு சேவை செய்யத்தான். யார் இந்த சக்மாக்கள்? ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களது இந்து, முஸ்லீம் கூட்டாளிகளின் சதித் திட்டங்களுக்குப் பலியானவர்களில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். இந்த ஆளும் வர்க்கம் தான் வங்காளத்தையும், பஞ்சாபையும் மத அடிப்படையில் இரு பகுதிகளாகப் பிரித்தது. இதில் மிகவும் ஆச்சர்யத்திற்குரிய, கிரிமினல் செயல் என்னவெனில், பஞ்சாப், வங்காளம். ஸைலட் ஆகிய பகுதிகள் மவுண்ட்பேட்டன், நேரு, ஜின்னா இவர்களின் தூண்டுதலால் ஆங்கில வழக்கறிஞர் ஒருவரால் ஒரு மாதத்திற்குள்ளாகவே எல்லைகள் பிரிக்கப்பட்டு, குறிக்கப்பட்டன.[20] **அனைத்து விதிகளையும் மீறி சக்மா மலை ஜாதியினரின் தாயகமான சிட்டகாங் மலைத் தொடர் பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்டது.** அது கிழக்கு பாகிஸ்தானின் தற்போதைய பங்களா தேஷின் பகுதியாயிற்று. நாளடைவில், கடுமையான அடக்கு முறைக்கும், அநீதிகளுக்கும் ஆளான அப்பாவி மக்கள் ஆயிரக்கணக்கில் தங்களது தாயகத்தை விட்டு விரட்டப்பட்டனர். தற்போது அடுத்துள்ள திரிபுரா, அருணாசலப்பிரதேசம், மிஸோரம் பகுதிகளில் மிகவும் இழிநிலையில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பல்வேறு தேசிய இனங்களின் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து போராட வேண்டியதும், பொது எதிரிக்கு எதிரான போராட்டங்களில் ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பதும், அதனடிப்படையில் சுயநிர்ணய போராட்டங்களில் வெற்றி பெறுவதும் தேவையாகிறது. வேறு வழியேயில்லை. தங்களுக்குள்ளேயே உள்ள சுரண்டும் வர்க்கத்தினர் தங்களது போராட்டங்களை சீரழிக்கவும், ஒருவருக்கொருவர் மோதவிடுவதையும் அனுமதிக்கக் கூடாது. இனவேற்றுமைகளை பெரிது படுத்தக் கூடாது. இனவாதத்திற்குள் வர்க்க உணர்வுகள் மூழ்கடிக்கப்பட்டால், தேசியப் போராட்டங்கள் அழிந்து போகும் அபாயத்தைச் சந்திக்க நேரிடும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவிலுள்ள பெருந் தொழில் மையங்கள் அனைத்திலும் தொழிலாளி வர்க்கம் பல்வேறு இனமக்களைக் கொண்டு அமைந்துள்ளது. பிரிந்துபோகும் உரிமையோடு கூடிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் இயக்கங்களின் ஒற்றுமை உடையுமானால், பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் அவர்களைத் தம் விருப்பப்படி அடக்கி ஒடுக்கும்.

சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் உடனடியான போராட்டப் பணியோடு, பல்வேறு தேசங்களின் இணைவு-ஐக்கியப் பற்றிய கோட்பாடுகளை மறந்து விடக் கூடாது. மனித இனம் வர்க்கங்களாகவும் தேசங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. வர்க்கங்கள் மறையும்போது தேசங்களும் கூட படிப்படியாக மறைந்து போகும்.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் அனைத்திற்கும் ஆதரவளிக்க வேண்டியது மார்க்ஸிய—லெனினிய வாதிகளின் பணியாகும். அவர்களின் போராட்டங்களில் சாதகமானவற்றை உயர்த்திப் பிடிக்கும் அதே சமயம், பாதகமான அம்சங்கள் ஏதாவதிருப்பின், அவற்றையும் சுட்டிக் காட்ட வேண்டும். பல்வேறு தேசிய இனங்களில் உழைக்கும் மக்களுடைய அடிப்படையான ஒற்றுமையைக் குலைக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளைப் பற்றியும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும். இல்லையெனில் அவர்களது நடவடிக்கைகள் போராட்டங்களை வலுவிழக்கச் செய்து மக்களுக்குப் பாதகங்களை உண்டாக்கும். புதிய ஜனநாயகத்திற்கான போராட்டத்தோடு ஏகாதிபத்திய— நிலப்பிரத்துவ எதிர்ப்புப் போராட்டங்களோடு பிரிந்து போவதற்கான உரிமையோடு கூடிய, சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை இணைக்க வேண்டியதும் மார்க்ஸிய லெனினிய வாதிகளின் வேலையாகும், மார்க்ஸிய—லெனினிய வாதிகளைப் பொருத்தமட்டில் 'தேசிய இனப் பிரச்சினை என்பது தனிப்பட்ட ஒன்றல்ல, புரட்சியின் பொதுவான பிரச்சினைகளின் ஓரங்கமாகும்' என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய தேசிய இனங்களின் தற்போதைய பிரச்சினைகள் ஒரு வரலாற்று மரபுரிமைப் பண்பாகும். அதைச் சரிவரப் புரிந்து கொள்ள அவற்றை அதன் வரலாற்றுச் சூழலில் காணவேண்டும் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தப் பகுதி சுருக்கமாக அதைச் செய்ய முயற்சிகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# செயற்கை ஒற்றுமையிலிருந்து செயற்கை ஒற்றுமையின்மை வரை

''அரசியல் வாய்ப்புகள் ஏராளமாக இருந்தும் இந்தியா உருவாவதற்கு முன்பு ஏன் இந்தக் குறிப்பிட்ட பிரிவினைக்கான வடிவம் மட்டும் உருவாகியது? உதாரணமாக, வங்காளிகளும், மதராஸிகளும் அல்லது இந்தியாவிலுள்ள பிற மொழி, கலாச்சார இனக்குழுக்கள் யாவற்றிலும் முஸ்லீம்கள் மட்டும் ஏன் தனிநாடு கண்டனர்'' என்று சி. எச். பிலிப் கேட்கிறார்.[21].

''இந்திய ஒற்றுமை செயற்கையாயிருப்பது போல் அதன் பிரிவினையும் செயற்கையாக இருக்கிறது. இந்தியா உடைந்திருக்க வேண்டுமானால், அது இன, கலாச்சார இணைப்புகளோடான மொழி வழியில் தர்க்க ரீதியில் உடைபட்டிருக்க வேண்டும்''[22] என்று பிராங் மோரிஸ் கூறுகிறார்.

ஆங்கிலேயர்களது வாள்முனையில் திணிக்கப்பட்ட செயற்கை ஒற்றுமையை, செயற்கை ஒற்றுமையின்மைக்கு இட்டுச் சென்றது எது?

பல்வேறு தேசங்கள் மற்றும் தேசிய இனங்களின் இருப்பிடமான இந்தியத் துணைக்கண்டம் மேற்கு ஐரோப்பா போன்ற கண்டங்களில் தேசிய அரசுகளாகப் பிரிந்தது போலன்றி, ஏன் மத அடிப்படையில் பிரிக்கப்பட்டது? போன்ற வினாக்கள் எழுகின்றன.

இந்தியா பல தேசிய அரசுகளை உள்ளடக்கியது என்பதை ஆளும் வர்க்கங்களையும் அவர்களது எடுபிடிகளையும் தவிர அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, வட, தென் அமெரிக்கக் கண்டங்களை விட இந்திய துணைக் கண்டம் அதிக ஜனத்தொகை கொண்டதாகும் இது பல பெரிய, சிறிய தேசங்களை உள்ளடக்கியதாகும். (தெலுங்கர்கள், தமிழர்கள், ஓரியாக்கள், பீகாரிகள், வங்காளிகள், குஜராத்திகள், மராட்டியர்கள், பஞ்சாபியர்கள், மிஸோக்கள், காஷ்மீரிகள், அஸ்ஸாமியர்கள் மற்றும் பல) இவை தவிர, சமீபத்தில் எழுச்சி பெற்றிருக்கும் அல்லது எழுச்சி பெற காத்திருக்கும் ஜார்க்கண்ட் போன்ற பல தேசிய இனங்களும் உள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



இன்று இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் முன்னணிக்கு வந்து விட்டது. அதை இனியும் போர்வைக்குள் மூடி மறைக்க முடியாது.

இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் இன்றைய பிரச்சினையின் பல்வேறு அம்சங்களைப் புரிந்து கொள்ள, இந்தியாவின் செயற்கையான பிரிவினைக்குக் காரணமான, அரசியல், பொருளாதார முரண்பாடுகளையும் மோதல்களையும் பகுத்தாய்வது தேவையாகிறது. இத்துணைக் கண்டத்திலுள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையைக் கடுமையாக எதிர்த்தவர்கள், ஒரு வலுவான, அதிகாரக் குவியலுள்ள அரசாங்கங்களை அமைக்கவும், மத அடிப்படையில் இந்தியாவைத் துண்டாடவும் பெரும் பங்கு ஆற்றியவர்கள் யார் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

நான் நன்கு அறிந்த தேசத்தைப்பற்றி— வங்காளத்தை வைத்து இப்பிரச்சினையை விளக்குகிறேன். பல நூற்றாண்டுகளாக ஐக்கியப்பட்ட ஒரே நாடாக இருந்த வங்காளம் பிரிவதற்குக் காரணமான தனிப்பட்ட சூழல்களையும் நாம் கண்டறிய வேண்டும். வங்காளப் பிரிவினைக்குக் காரணமான மூன்று கட்சிகளும்—காங்கிரஸ் தலைவர்கள், முஸ்லீம் லீக், ஆங்கில அரசு— வங்காளம் ஒரே நாடாக இருந்தபோது ஒரே மொழி, பழக்க வழக்கங்கள், கலாச்சாரத்தைக் கொண்டிருந்தது.

''வங்காள இந்துக்களையும், முஸ்லீம்களையும் மத வேறுபாடுகள் இரண்டாகப் பிரிக்க முடியாது... அவர்கள் ஒரே மொழியைப் பேசி, ஒரே வகையான கலாச்சாரத்தைக் கொண்டிருக்கின்றனர். வங்காளத்தின் அனைத்தும் அவர்களுக்குப் பொதுவானது. வங்காளம் வங்காளம்தான்''[23] என்று 1947 மே- 10ஆம் நாள் காந்தி கூறினார்.

''வங்காளத்தைப் போன்று வலுவான கலாச்சார ரீதியாக ஒன்றுபட்ட பகுதியை இந்தியாவில் வேறெங்கும் காண முடியாது''[24] என நேரு கூறினார். ''வங்காளமும் பஞ்சாபும் பொதுவான பல தேசிய குணாம்சங்களைக் கொண்டுள்ளன. பொதுவான வரலாறு, வாழ்க்கை முறைகளைக் கொண்டுள்ளன''[25] என்று எம். ஏ. ஜின்னா கூறினார்.

www.padippakam.com



1946இல் இந்தியாவிற்கு வந்த ஆங்கில அமைச்சரவைக் குழு, ''பஞ்சாபையும், வங்காளத்தையும் தீவிரமாகப் பிரிப்பது, அப்பிரதேச மக்களின் விருப்பத்திற்கும், நலன்களுக்கும் முரணாக இருக்கும் என்பதை நாங்களும் உணர்ந்து கொண்டோம். பஞ்சாபும், வங்காளமும் பொதுவான மரபுகளையும் நீண்ட வரலாற்றையும் கொண்டிருக்கின்றன.''[25] ''நீண்ட காலமாகவே வங்காளம் அதற்கேயுரிய தேசிய இனத் தன்மையைப் பெற்றிருப்பதோடு, மிகப் பழமையான, வளமுடைய இலக்கிய, கலை மரபுகளைப் பெற்றிருந்தது''[26] என்கிறார் ரீனால்டு கோப்லாண்ட்.

இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதியில், சுயநல சக்திகளுக்குள் ஏற்பட்ட மோதல்களையும், கூட்டுகளையும்—அதில் வங்காளம் எவ்வாறு சிக்கிக் கொண்டதென்பதையும், இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள வங்காளப் பகுதிகளை அக்குழுக்கள் எவ்வாறு மேலாதிக்கம் செய்தன, வங்காளமே தாங்கமுடியாத அளவிற்கு அரசியல் பொருளாதார ரீதியில் வங்காளத்தை முடமாக்கி, இரண்டு பகுதிகளாகக் கிழித்தெறிந்தன என்பதையும் விளக்கவுள்ளோம்.

இன்று பல கற்பனைகள் வரலாறென்று பரப்பப்படுகின்றன. ''வரலாற்றுக் கற்பனைகளையும், பாதி உண்மைகளையும், திரிபுகளையும் விலக்கிப் பார்க்கும்போதுதான் உண்மையான வரலாற்றைத் தெரிந்து கொள்ள முடியும்.

## ''இந்திய தேசியம்''

''இந்துஸ்தானி மொழியை கட்டாய மொழியாக்குவதில் எந்தத் தவறும் இல்லை... அகில இந்தியத் தேசியத்தின் மையப் பகுதியைச் சென்றடைய வேண்டுமெனில் விளிம்புப் பகுதிகளிலுள்ள மேடுகளை உடைத்துத்தான் ஆகவேண்டும். இந்தியா ஒரே நாடா, ஒரே தேசமா அல்லது பல தேசங்களா? பல நாடுகளா?''[28] என்று 193 இல் காந்தி எழுதினார். சரியான விடையைப் பெறுவதற்காக அன்றி அதைப் பூசி மெழுகவே இக்கேள்வி கேட்கப்பட்டது.

வரலாறு தெரிவிப்பது யாதெனில், ஆங்கிலேயராட்சிக்கு முன்பு இந்தியா, அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதியில் ஒரே

படிப்பகம்

www.padippakam.com



நாடாக இருந்ததில்லை. "நகராட்சி, அல்லது அகில உலக சட்ட விதிகளின் படி பார்த்தாலும் இந்தியா அரசியல் ரீதியில் முழுமையாக இருக்கவில்லை. இது கடந்த நூற்றாண்டு கால வரலாறு"[29] என்று அரசியல் விஞ்ஞானி டாக்டர் திரேந்திரநாத் சென் கூறுகிறார். இந்தியாவின நீண்ட வரலாற்றில் மௌரியர்களும், குப்தர்களும், மொகலாயர்களும் ஒரு பரந்த இந்திய சாம்ராஜ்யத்தை அமைத்தாலும்கூட அதில் இந்தியா முழுவதையும் உள்ளடக்கவில்லை. மாறும் எல்லைகளைக் கொண்ட இந்த சாம்ராஜ்யங்கள், நீண்ட காலமிருந்தாலும்கூட அந்தந்த வம்ச ஆட்சி முடிந்தவுடன் மறைந்துவிட்டன. அந்த சாம்ராஜ்யங்களிலேயே பெரிய பகுதிகள் வெறும் கப்பத்தொகையை மட்டும் செலுத்திவிட்டு, சுதந்திரமாக இருந்தன. ஒருபோதும் ஒரே நாடாக இணைக்கப்படவில்லை. "இந்தியாவின் அரசியல் ஒற்றுமை ஆங்கிலேயர்களின் கத்தி முனையில் புகுத்தப்பட்டது தான்"[30] என்று கார்ல் மார்க்ஸ் கூறினார். அப்போதும் கூட, இந்தியாவின் பெரும்பகுதி ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆட்சிக்குள்ளிருந்தது. அதை 'பிரிட்டிஷ் இந்தியா' என்றழைத்தனர். இது தவிர 562 சுதந்திரமான குட்டி சமஸ்தானங்கள் தனியாக ஆங்கிலேயர்களின் மறைமுக ஆளுகையின் கீழ் இருந்தன.

ஒரு பிராந்தியத்தின் மக்களை ஐக்கியப்படுத்தி ஒரே தேசமாக மாற்ற உதவும் இணைப்புச் சங்கிலி மொழிதான். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு பொதுமொழி இருந்ததில்லை. ஒரு பொதுவான கலாச்சாரத்தை அடைந்தது இல்லை. இன்றும் கூட வெவ்வேறு பிரதேசங்களானது வெவ்வேறு மொழி, வாழ்க்கைமுறை மரபு மற்றும் கலாச்சாரங்களைக் கொண்டிருக்கின்றன.

"இந்தியாவில் வளர்த்தெடுக்கப்பட்ட பொது கலாச்சாரமானது மற்றைய ஐரோப்பா, தூரகிழக்கு நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளில் வாழும் பல்வேறு மக்களின் கலாச்சாரத்தை விட பெருமைவாய்ந்ததல்ல"[31] என்று ருஷ்ய எழுத்தாளர் ஏ. எம். டிக்காவே சரியாகவே குறிப்பிடுகிறார்.

கலாச்சார ரீதியில் ஓர் ஆங்கிலேயனும் பிரஞ்சுக்காரனும் மிக நெருக்கமாக இருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் ஒரு தமிழனோ இராஜஸ்தானியோ அல்லது குஜராத்தியோ அல்லது பஞ்சாபியோ கலாச்சார ரீதியில் நெருக்கமாக இருக்கவில்லை. இந்திய ஒற்றுமையைத் தூக்கிப் பிடிப்பவர்கள் எப்போதுமே இந்துமதக் நம்பிக்கை அடிப்படையிலான ஒற்றுமையுடன் சமப்

படிப்பகம்

www.padippakam.com



படுத்தியே பேசுவர். இந்துமத ஒற்றுமையும் ஒரு வலுவிழந்த கண்ணிதான். 'இந்துத்துவா' என்பதை விளக்குவதே கடினம். இந்து மதக் கோட்பாடுகளில் மோதல்களை உருவாக்கும் கருத்து களும் எண்ணங்களும் உள்ளன. இந்துமத பழக்க வழக்கங்கள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. ஒரே பகுதியில் கூட மேல் ஜாதிக்காரர்களும், ஒதுக்கப்பட்ட சாதியினரும் மாறுபட்ட மத பழக்கங்களைக் கொண்டுள்ளனர். இந்து கலாச்சார அடிப்படையிலான இந்திய தேசியம் (பான்- இந்திய தேசியம்) பாகிஸ்தானின் இயக்கமாக பிரதிநிதித்துவப்படுத்தும் இஸ்லாமிய கூட்டிணைவாக்கம் (பான் இஸ்லாமியத்தோடு) குடும்ப ஒற்றுமைகளைக் கொண்டிருக்கிறது காங்கிரஸ் தலைவர்களின் இந்திய தேசியத்தை (பான்- இந்திய தேசியத்தை) எதிர் கொள்வதற்காக ஒரு வசதியான உபாயமாக பாகிஸ்தான் தேசியம் என்ற ஒரு கற்பனையை முஸ்லிம் மேட்டிமைக் குடியினரும் பெரு வியாபாரிகளும், பயன்படுத்தினர்.

"ஐரோப்பிய வரலாற்றைப் படிப்பது போல் இந்திய வரலாற்றை ஒரு பாகமாகப் படிக்க முடியாது. இந்திய நாகரிகத்திற்குள் பல நாகரிகங்கள் உள்ளன. ஒட்டு மொத்த இந்திய வரலாற்றைவிட மொழி, கலாச்சாரக் குழுக்கள் வேறுபட்ட வரலாறுகளைக் கொண்டிருக்கின்றன."[32] என்று சரியாகவே கூறப்பட்டுள்ளது.

இந்திய ஒற்றுமை ஆங்கில ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டது. ஏகாதிபத்திய நலன்களுக்குச் சேவை செய்ய தேசங்கள் உருவாவதும் தேசிய இனங்கள் வளர்வதும் தடைசெய்யப்பட்டன அந்நிய மூலதனத்தோடு கூட்டாக இருந்த, இருக்கும் இந்தியப் பெரு முதலாளிகளும் பிரிட்டன் ஆட்சியில் இவர்களின் ஏஜண்டாக இருந்த அரசியல் பிரதிநிதிகளும் இந்தியாவை முழுமையாக, நிலைத்து மேலாதிக்கம் செய்ய வசதியாக பான்- இந்திய தேசியத்தை முன் வைத்தனர்.[33]

## "இந்திய தேசியமும் எதிர் துணை தேசியமும்"

1948 ஜூனில் இந்திய அரசியல் நிர்ணய சபையினால் அமைக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள் கொண்ட இந்தியப் பிரதேச மொழிவாரிக்குழு— இதில் அனைத்து உறுப்பினர்களும் வட இந்தியா, ஆந்திரா, கேரளம், கர்நாடகம், மகாராட்டிரம்



படிப்பகம்

www.padippakam.com



போன்ற பிரதேசங்களை உருவாக்குவது பற்றி ஓர் அறிக்கையை தயாரித்தது. அதில் அவ்வாறு உருவாக்குவதை இந்திய தேசியம் இளமையாக இருக்கும் போது இவ்வாறு பிரிப்பது துணை தேசிய சார்பை உருவாக்கும் என்ற அடிப்படையில் எதிர்த்தது.

''தற்போதைய இந்தியப் பிரதேசங்களனைத்தும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நிர்வாக அலகுகளே. அவை ஏதோ குழப்ப மான வழியில் தோன்றி, ஜனநாயக நிறுவனங்களாகச் செயல் படவில்லை. அவை எளிதில் மாறுபடக் கூடிய, அதிகமாக விஞ் ஞான பூர்வ புரட்சிகரத் திட்டமிடுதலுக்கு உட்பட்டவை. அவை ஆழமாக வேரூன்றி இன்றும் உயிரோட்டமுள்ள முக்கிய அம்சங் களாக விளங்குகின்றது. இவை தனித்தனியாகப் பிரிந்திருக்க வேண்டிய மக்களை ஒன்று சேர்த்தது தான் இவை செய்த பய னுள்ள செயலாகும். **நவீன ஜனநாயகத்திற்கான வேலையில் அவை பயனற்றதாக இருப்பினும், ஒரு தேசத்தை உருவாக்கவும் துணை தேசிய உள்ளுணர்வை மூழ்கடிப்பதற்குமான தீங்கு விளை விக்கும் கருவிகளாக இருக்கவில்லை''** என்று இக்குழு கூறுகிறது.

**இந்தியா இன்னும் ஒரு தேசமாக உருவாகவில்லை...** பிரதேசங்களை மறுபங்கீடு செய்வது அதுவரை பொறுத்திருக்க வேண்டும். பிரதேங்கள் சுயாட்சியை அனுபவிக்கையில் அது இந்திய தேசியத்தின் மறைவிற்கு இட்டுச் செல்லும்'' என்று வாதிட்ட குழு, ''புதிய அரசியல் சட்டப்படி எத்தகைய அதிகாரங் களைப் பிரதேசங்கள் அனுபவிக்க விரும்புகின்றனவோ அவற்றை, தனது பணிகள் ஸ்திரத்தன்மை மற்றும் எல்லைகள் குறித்த அதிக அளவு அதிகாரங்களைப் பெற்றிருக்கும் ஒரு மைய்ய அரசு தான் வழங்க வேண்டும்'' என்று பரிந்துரைத்தது. இதன்படி, **''ஓர் ஏதேச்சாதிகார மத்தியத்துவப் படுத்தப்பட்ட அரசினால் தான் தேசிய உணர்வை ஊட்டவும். ஓர் இந்திய தேசத்தைக் கட்டமைககவும் உதவ முடியும்.''**

''மொழி வாரி பிரதேசங்கள் தேசிய மொழி பரவலுக்கும் அல்லது தேசிய உணர்வை வளர்ப்பதற்கும் தடையாக இருக்கும் ஒரு மொழிவாரி பிரதேசத்தில் துணை தேசியம் எப்போதுமே மேலாதிக்க சக்தியாக இருந்து, எப்போதும் ஓர் உணர்ச்சி மிக்க பிரதிவினைகளைத் தூண்டும். மேலும் **இவ்விரண்டிற்கும் மோதல் ஏற்படும் போது உயிரோட்டமுள்ள தேசியம் வலுவிழந்து மூழ்கிப் போகும்''** என்றும் பயந்தனர். எனவே ''இந்தியா ஒரு தேசமாகும் நாள் வரும் வரை மொழிவாரி பிரதேசங்கள் உருவாலதற்கு

படிப்பகம்

www.padippakam.com



பொறுத்திருக்கவேண்டும். **மொழிவாரி பிரதேசங்களில் காணப்படும் துணை தேசியக் கூறுகள் அனைத்தும் அடக்கப்பட வேண்டும்''** என்றது அக்குழு.

''அந்நிய மேலாதிக்க அழுத்தத்தினாலோ அல்லது வெளி ஆக்கிரமிப்பு பயத்தினாலோ பிறந்த தேசியம் அதைப்பெற்றெடுத்த அழுத்த சக்திகள் மறையும் போது, ஓர் ஆழமான ஒற்றுமையுணர்வு இல்லையெனில், காலப்போக்கில் தாக்குப் பிடிக்க முடியாமல் அழிந்து போகும். **இந்திய ஒற்றுமையும் தேசியமும் இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருப்பதால் யதார்த்த நிலைமையின் அழுத்தத்தினைத் தாங்கிக் கொள்ள இயலாது...** எனவே இந்தியாவின் தற்போதைய முதலும் இறுதியுமான தேவை இது ஒரு தேசமாக பரிணமிப்பதுதான்[34] என்று அக்குழு எச்சரித்தது.

1948 டிசம்பரில் காங்கிரஸினால் அமைக்கப்பட்ட மொழி வாரி பிரதேசக்குழு (அதை நேரு —பட்டேல்— சீதாரரமைய்யா குழு என்றும் அழைப்பர்) ஆட்சி மாற்றத்திற்கு முன்பு காங்கிரஸ் ஆதரித்த மொழி வாரி மறுபங்கீட்டுக் கொள்கையை இப்போது எதிர்த்தது. ''இந்திய ஒற்றுமை, பாதுகாப்பு, பொருளாதார மேம்பாட்டிற்காகப் பிரிவினை மற்றும் சீர்குலைவுச் சக்திகள் அனைத்தும் மிகக் கடுமையாக ஒடுக்கப்பட வேண்டுமென்றும், மொழி ஓர் ஒருங்கிணைக்கும் சக்தி மட்டுமல்ல அது ஒரு பிரிவினைச் சக்தியுமாகும்''[35] என்றும் கூறியது.

நேருவுக்கும் படேலுக்கும் ''இந்தி மொழி தான்'' ஒருங்கிணைப்பு சக்தியாகத் தெரிந்தது. மற்ற எல்லா மொழிகளும் பிரிவினை சக்திகளாகத் தோன்றின. இந்திய ஒற்றுமை உணர்வு மேலோங்கும் வரை மொழி அடிப்படையிலான ஒரேவகைப்பட்ட பிரதேச உருவாக்கங்கள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும்'' என்று கருதியிருந்தது.

ஆனால் இக்குழுவின் மற்றொரு உறுப்பினர் பட்டாபி சீதாராமைய்யா இரண்டாண்டுகளுக்கு முன், 1946 டிசம்பர் 8 ஆம் நாள் மொழிவாரி மற்றும் கலாச்சாரப் பிரதேசங்கள் பற்றிய மாநாட்டில், வேறுவிதமாக கருத்துத் தெரிவித்தார்.

''அனைத்து உண்மையான கூட்டாட்சிகளைப் போல், இந்தியக் கூட்டமைப்பும் பிரதேச சுயாட்சியை அனுபவிக்கும் பிரதேசங்களைக் கொண்டு கட்டமைக்கப்படுகிறது...மொழி, கலாச்சாரத் தனித்தன்மையை காக்கும் வகையில், பிரதேசங்களின்

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் சட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். அப்படியானால் தான் பயிற்று மொழியும், ஆட்சி மொழியும், நீதிமன்ற வழக்கு மொழியும், பேரவைகளின் வழக்கு மொழிகளும், அந்தந்தப் பிராந்திய மொழிகளில் நடைபெறமுடியும். இதற்குக் குறைந்த எதுவும் பிரதேச சுயாட்சியை கேலி செய்வதும் கூட்டாட்சியை மறுப்பதுமாகும்... அரசியல் நிர்ணய சபையின் ஆட்சிக்குழுவின் முதல் கூட்டத்திலேயே, புதிய பிரதேசங்களை மொழி, கலாச்சார அடிப்படையில் பிரிக்க, ஒரு குழுவை அமைப்பதற்கும் அதனடிப் படையில் வரைபடங்களைத் தயாரிக்கவும், இக்குழு அறிக்கையை துறைகளுக்கு அனுப்பி, புதிய அரசியல் சட்ட உருவாக்கத்தின் போது இணைக்கவும், முறையாக அறிவுறுத்தப்படும்''[36] என்றார்.

1953ஆம் ஆண்டு நேரு அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு தனது அறிக்கையில், ''மொழி வாரி மற்றும் பிற குழுக்கள் இந்திய மண்ணிலும், வரலாற்றிலும் ஆழமாக வேரூன்றி உள்ளன. மொழி தனித்தன்மையை மைய மாகக் கொண்ட கலாச்சார அடிப்படையிலான பிராந்திய உணர்வு ஒரு சாதாரண இந்தியனிடம் அழிக்க முடியாமல் பதிந்து விட்டது. அதே சமயம், **இந்திய தேசியம் இன்னும் ஒரு நலன் பயய கும் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளப் படவில்லை. வளர்ச்சியடைக் வில்லை''** [37] என்று கூறியுள்ளது.

எதைத் துணை தேசியமென்று நேரு, படேல், சீதாராமையா குழு கூறியதோ அதையே, மாநிலங்கள் மறுசீரமைப்புக்குழு, ''மொழித்தனித்தன்மையை மையமாகக்கொண்ட கலாச்சார அடிப்படையிலான பிராந்திய உணர்வு'' என்று அழகாக வர்ணித் தது. 1948 ஆம் ஆண்டு குழு, இந்தியாவில் பல துணை தேசங் களையும் அதிலிருந்து உருவாகப் போகும் ஒரு தேசத்தையும் கண்டது. பிறக்கப் போகும் ஒரு தேசமானது, துணை தேசங்கள் எனும் வளர்ந்த சிறுவர்களை கொண்டிருந்தது ஆச்சரியம்தான். வங்காளம் போன்ற துணை தேசங்கள். ஆங்கிலேயர்களின் வாள் வலிமையினால் உருவாக்கப்பட்ட இந்திய ஒற்றுமைக்கு-இந்தியா ஒரே நாடாவதற்கு—முன்பே ஒரு ஒருங்கிணைந்த தேசமாகத்தான் இருந்துள்ளது.

முக்கியமாக, மதஅடிப்படையிலான இந்தியப்பிரிவினைக்கு காரணமாக இருந்த நேரு, ஒரு வலிமையான மைய அரசிற்காக பல கோடிக்கணக்கான மக்களின் உயிர்களைப் பண்டமாற்று செய்தார்.[37] இந்திய விரிவாக்கக் கனவுகளைககண்டுகொண்டி ருந்தார். இதை அவரே 1956 மே 10 ஆம் நாள் மாநில முதலமைச்சர்

படிப்பகம்

www.padippakam.com



களுக்கு எழுதிய கடிதத்தில் ''அடிப்படையான உண்மை என்னவெனில் இன்னும் இந்தியா ஓர் ஒன்றுபட்ட தேசமாக மாறவில்லை'' என்று எழுதியுள்ளார்.

யார் நலனுக்கு சேவை செய்ய இந்த ''ஒரு தேசியக் கோட்பாடு?'' 1948ஆம் ஆண்டு குழுவின் படி, ஒரு வலிமையான ஒன்றுபட்ட இந்திய தேசத்தை உருவாக்குவதற்காக, மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படவேண்டும், ஒவ்வொரு பிரதேச மக்கள் மீதும் ஓர் இறுக்கமான பிடிப்பிருக்க வேண்டும். பிரதேசங்களின் பரப்பளவு மற்றும் உறுதி தன்மைக்காக, அபரிமிதமான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் மைய அரசு இருக்க வேண்டும். இந்தியாவிற்குக் கிழக்கேயும், வடமேற்கிலும் சில பகுதிகளைத் தவிர, இந்தியத் துணைக் கண்டத்தின் நிர்வாகப் பொறுப்பை 1947 ஆகஸ்டில் பெற்ற வர்க்கங்கள் வலிமையான ஏதேச்சாதிகார ஒற்றை அரசாக ஆங்கிலேயர் வைத்திருந்தது போல் வைத்திருக்க முடிவெடுத்தனர். அவர்கள் பயப்படுவதற்கும் காரணங்கள் இருந்தன. இந்திய ஒற்றுமை என்பது ''அந்நிய மேலாதிக்க அழுததத்தினால்'' உருவானது; இந்திய வரலாற்றிலும், மக்கள் மத்தியிலும் ஆழமாக வேரூன்றியிருந்த துணை தேசியத்தோடு மோதல் ஏற்படும் போது இது நிலைத்து நின்று தாக்குப் பிடிக்க முடியாது என்பதனால் தான் ஆங்கிலேய அரசின் வாரிசுகளான ஆளும் வர்க்கம் ''துணை தேசிய உள்ளுணர்வு''களைக் கொன்று, ''இந்திய தேசியத்தை வளர்த்தெடுக்க முடிவெடுத்தது.

''ஒரே தேசக் கோட்பாடானது இந்தியப் பெரு முதலாளிகளின்—குறிப்பாக மார்வாரி — குஜராத்தி பிரதேச முதலாளிகளின் மத்தியத்துவப் படுத்தலுக்கான உணர்வுகளின் வெளிப்பாடேயாகும்... இம் முதலாளித்துவக் குழுக்கள் இந்தியச் சந்தையை ஏகபோகமாக்கி ஆதிக்கம் செய்ய விரும்பின''[88] என்று டியாக்கோ கூறுகிறார். இந்திய அரசியல் சட்ட நகல் வடிவமைப்பை, விமர்சனம் செய்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ''பிர்லாக்கள், டால்மியாக்களின் நலன்களுக்குப் பயன்படுத்துவதற்காகத்தான் வங்கிகளும், இன்சூரன்சும், பங்குச் சந்தையும், பெட்ரோலியமும், சுரங்கத்துறையும், வான்வெளியும். தொழிற்துறை மற்றும் நிதித்துறை சம்பந்தப்பட்ட அனைத்தும் பிரத்தியேகமான மத்திய கட்டுப்பாட்டில் இருக்கின்றது''[89] என்று குற்றம் சாட்டியது.'' இப்புதிய அரசியல் சட்டத்தில் அரசின் பாதுகாப்பு என்ற வகையில் வழங்கப்பட்டுள்ள மத்திய அரசின்

படிப்பகம்

www.padippakam.com



பரந்துபட்ட அதிகாரங்கள் அனைத்தும், தேசிய இனங்களின் அரசியல், பொருளாதார வாழ்க்கையை மார்வாரி—குஜராத்தி முதலாளிகள் தடங்கலற்று மேலாதிக்கம் செய்ய வழங்கப்பட்டுள்ள உபாயமே. இந்திய அரசியல் சட்டம் அனைத்து மொழிகளுக்குமுள்ள சமத்துவத்தை மறுத்து, இந்தியையும், ஆங்கிலத்தையும் அரசு மொழிகளாக்கி திணிக்கின்றது... மார்வாரி குஜராத்திகளின் மேலாதிக்கத்திற்கான வலிமையான ஓர் அடித்தளத்தை அமைப்பதற்கான ஆயுதமாகும்''[40] என்று கம்யூனிஸ்டுகள் அப்பொழுது கூறினார்கள்.

## தேசங்களின் உருவாக்கமும் காலனிய ஆட்சியும்

ஆங்கில ஆட்சி ஏற்படுவதற்கு முன்பே, தங்களுக்கென்ற தளப்பிரதேசங்களையும், மொழி, இலக்கியம், வாழ்க்கை முறை, கலை, கலாச்சாரங்களையும், தனித்தன்மையையும் கொண்டிருந்த பல தேசங்கள்—தமிழகம், தெலுங்கு, மகாராட்டியம், கர்நாடகம், குஜராத்தி வங்காளம் போன்றவை இந்தியத் துணைக் கண்டத்தில் எழுந்திருந்தன. ''இத்தகைய பிராந்தியத் தனித்தன்மைகள் நிலைத்திருக்கக்கூடிய மிகப் பழமையானவை. பெரும்பாலான பிராந்திய மொழிகளின் அல்லது அதன் முன்னோடிகளின் இலக்கியப் பாரம்பரியமானது கிருத்து தோன்றிய முதல் நூற்றாண்டு தொட்டே இருந்து வருவதை எளிதில் உணரலாம். எல்லா பிராந்திய மொழிகளின் இலக்கிய பாரம்பரியம் குறைந்தது தடையற்ற எட்டு நூற்றாண்டுகள பழமை வாய்ந்ததாகும்.''[41] என்று ஸ்லிங் எஸ். ஹாரிசன் கூறுகிறார். மற்ற பல தேசங்களும் தேசிய இனங்களும் இத்துணைக் கண்டத்தில் விழித்து எழுவதற்காகக் காத்துக் கிடக்கின்றன.

இந்தியாவை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டபோது இச்செயல்முறைகள் தடைபட்டன. ஒவ்வொரு தேசப் பரப்புகளும் வெட்டி வரையறுக்கப்பட்டது. மற்ற பிரதேசங்களிடம் இப்பகுதிகள் செயற்கையாகச் சேர்க்கப்பட்டு குறுநில இராச்சியங்கள், அல்லது பிராந்தியங்கள் பல உருவாக்கப்பட்டன. உதாரணமாக, மகாராட்டிரர்கள் ஒன்றாயிருந்த பிரதேசங்களிலிருந்து பம்பாய் ராஜதானிக்கும், மத்திய பிராந்தியத்திற்கும் பிரித்தனுப்பப்பட்டனர். இதே போல் குறுநில பிரதேசங்களான ஹைதராபாத்தும் மைசூரும், பிராரும் பிரிக்கப்பட்டன. தேசங்கள் பல துண்டுகளாக துண்டாடப்பட்டு மாற்றியமைக்கப்பட்டன. ''ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியா. பிரிட்டிஷ் இந்தியா

படிப்பகம்

www.padippakam.com



என்றும் இந்தியப் பிரதேசங்களென்றும் பிரிக்கப்பட்டதே பொய்யானது, வரலாற்று ஆதாரமற்றது''[42] என்று மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு 1955 ஆம் ஆண்டில் கூறியது. இப்பிரிவு அரசியல் தொடர்பானது. இந்த நூற்றாண்டில் பிரிட்டிஷ் காலனியவாதிகள் வங்காளத்தை பிரித்ததே, வங்காள தேசிய உணர்வுகளை திசைதிருப்பி, மதவாதத்திற்குள் இட்டுச்சென்று அரசியல் ரீதியில் வங்காளததை வலுவிழக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். இது இவர்களது நீண்ட காலக் கண்ணோட்டம். ''ஒன்று பட்ட வங்காளம் சக்தி வாய்ந்தது. வங்காளப் பிரிவினை பல்வேறு வகையில் வலுவிழக்கச் செய்யும்''[43] என்று இந்திய அரசின் செயலாளராக இருந்த எச். எச். ரெய்ஸ்லி கூறுகிறார். 1903 இல் பிரிட்டிஷ் இந்தியாவோடு விதர்பாவை (பிரார்) இணைக்க நேர்ந்த போது, ''இதனால் மராட்டிய இனத்தின் வலிமை கூடும் என்று நான் நினைக்கவில்லை. எனவே இணைப்பை வரவேற்கிறேன்''[44] என்று கர்ஸான் கூறினார்.

பிரிட்டிஷ் ஆட்சி நிர்வாக சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளில் கொண்டுவந்த மாற்றங்கள் ஜாதி, மத பேதங்களைத் தூண்டி, தேசிய உணர்வை வலுவிழக்கச் செய்தது. இரண்டு முரண்பட்ட செயல்முறைகள் செயல்பட்டன. ஆங்கில ஆட்சிக்கெதிரான உணர்வுகள் மக்களை நெருக்கமாக்கிய போது, பிரிட்டிஷ் அரசு மற்றும் மேட்டுக்குடித் தலைவர்களின் நடைமுறைகள் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்த மக்களிடையே மத வேறுபாடுகளை உண்டாக்கின. அதிக தாக்குதலுக்குட்பட்டிருந்த போதிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே தேசிய உணர்வுகள் ஒரு சக்தியாகவே இருந்தன. இதன் விளைவாகத்தான் 1905 இல் முதல் வங்காளப் பிரிவினை நடந்தேறியது.

காலனிய ஆட்சியின் போது தேசியத் தனித்தன்மையை உறுதி செய்தலென்பது, மொழி அடிப்படையில் பிரதேசங்களை உருவாக்கும் கோரிக்கையாக அடிக்கடி வடிவெடுத்தன, 1927 இல் அமைக்கப்பட்ட சைமன் கமிஷனிடம், இந்திய அரசாங்கமும், இந்திய அலுவலகமும் சமர்ப்பித்த மனுவில் ஒரியா மொழி பேசும் மக்களை ஒருங்கிணைப்பது பற்றியும், கர்னாடக, ஆந்திரா தமிழ்நாடு தனிப்பிரதேசங்கள் அமைப்பது பற்றியும், அஸ்ஸாமிலுள்ள ஹைல்ஹிட பகுதியை வங்காளத்துடன் மாற்றி இணைப்பது பற்றியும், தனித்தனியாக மனுக்கள் அம்மக்களால் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஹைல்ஹிட் நடுத்தர

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் விருப்பம் பொருளாதார நலன்களை முன்னிட்டு அஸ்ஸாமுடன் இருக்க வேண்டும் என்றிருந்தாலும், அவர்களின் வங்காளிகள் என்ற தனித்தன்மை உணர்வு வங்காளத்துடன் இணையத் தூண்டியது. தனித் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா பிரதேசங்கள் உருவாவதற்கான தீர்மானங்கள் மத்திய பேரவையில் நிறைவேற்றப்பட்டன. 1927 மார்ச்சில், சென்னைப் பேரவை கவுன்சிலில் தனி ஆந்திர மாநிலம் உருவாக்குவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1921 டிசம்பரில் பீகார் — ஒரிஸ்ஸா பேரவை கவுன்சிலில், ஒரியா மொழி பேசும் மக்களை ஒருங்கிணைப்பதற்கான பொதுக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மொழி அல்லது இன அடிப்படையில் குறிப்பிட்ட பகுதிகளைப் பங்கீடு செய்யக் கோரியவர்கள், தற்போதைய பிரிவுகளின் தீமைகளைத் தெளிவாக எடுத்துக் கூறினர்.

சோட்டா நாகபுரி, சுந்தால் பர்கானா மற்றும் பகுதிகளிலிருந்த பல்வேறு இன மலைவாழ் மக்களையும், ஒடுக்கப்பட்ட மக்களையும், முஸ்லீம் நெசவாளர்களையும் (மோமின்ஸ்) உள்ளடக்கிய தேசிய இனமொன்றை உருவாக்கும் செயல் முறைகள் தொடங்கப்பட்டுவிட்டன. ஜார்கண்ட் பிரதேசம் உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி சோட்டாநாக்பூர் யூனாதி சமாஜ் அமைப்பின் பிரதிநிதிகள் சைமன் குழுவைச் சந்தித்து மனுக்கொடுத்தனர்.[46]

தமிழ் மண்ணில், தென்னிந்திய நிலவுரிமை கூட்டமைப்பின் தலைவரான பெரியார் என்று அழைக்கப்படும் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் இந்தியாவானது ஒருதேசம் என்ற கோட்பாட்டை எதிர்த்து ''திராவிட நாடு திராவிடருக்கே'' ''தமிழ்நாடு தமிழருக்கே'' என கோரிக்கைகளை முன் வைத்தார். அவரது முயற்சியால் 1944இல் தென்னிந்திய நிலவுரிமை கூட்டமைப்பு தனது பெயரை ''திராவிடர் கழகம்'' என மாற்றிக் கொண்டது. 'திராவிடஸ்தானுக்கு பரிபூரண சுதந்திரம் அளிக்க வேண்டி 1946இல், காபினட் மிஷனிடம் அறிக்கை ஒன்றை அளித்தது. பிறகு, சிலகாலமாக, இறையாண்மையான சுதந்திரத் தமிழ்நாடு கோரிக்கையே திராவிடர் கழக இயக்கத்தின் போர்க் குரலாக ஒலித்தது.

சுருங்கக் கூறின், 1947 மே 9ஆம் நாள் சென்னை ஆளுநர் ஏ. நைய், வைசிராய் மௌண்ட் பேட்டனுக்கு எழுதிய கடிதத்தில், ''தேசியவாதம் அதிதீவிர வடிவத்தை நோக்கி அதிகரித்து வருவதாகவும், சமீப காலமாக தனி ஆந்திர மாநிலத்திற்காக மட்டுமின்றி,

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா பிரதேச கோரிக்கைகளும் வலுவடைந்து வருகின்றன. இத்தகைய வலுவான கோரிக்கையை ஒதுக்கிட முடியாமல், சென்னை சட்டப் பேரவையும் சென்னை ராஜதானியை மேற்கண்ட நான்கு பிரதேசங்களாகப் பிரிக்கக் கோரி. அரசியல் நிர்ணய சபைக்குப் பரிந்துரை செய்துள்ளது.''[47] என்று குறிப்பிட்டுள்ளார்.

''இந்திய தேசியத்தின்'' தீவிர ஆதரவாளரான கே. எம். முன்ஷியும், ''சைமன் கமிஷன் சென்ற மொழிவாரிப் பிரதேசங்களிலெல்லாம் இந்தியாவை மொழி வழி மறு பங்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வலுவாகவே இருந்தது''[47a] என்கிறார்.

நாற்பதுகளின் முற்பகுதியில், சில காலமாக முஸ்லீம்களின் சுய நிர்ணய உரிமையை ஆதரித்து முஸ்லீம் லீக்கின் பாகிஸ்தான் கோரிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்து வந்தது. (இந்தியாவில் முஸ்லீம்கள் பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்திருந்து, பல மதத்தினருடன் கலந்து வாழ்ந்து வந்தனர்) ஆனால் 1945ஆம் ஆண்டு இறுதியில் ''இந்திய மக்களின் இயற்கையான தாயக அடிப்படையில் இந்தியாவில் 17 பரிபூரண தேசிய அரசியல் நிர்ணய சபைகள் தான் இருக்க வேண்டும்'' என்று தங்களது தேர்தல் அறிக்கையில் கூறினர். அதாவது பதனலேண்ட் சிந்து, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு, வங்காளம் இன்னபிற பகுதிகளும் இப் பதினெழு அரசியல் நிர்ணய சபைகளும் அகில இந்திய அரசியல் நிர்ணய சபைக்கான உறுப்பினர்களைத் தேர்வு செய்ய முழுமையான சமத்துவ அடிப்படையில், சுதந்திர இந்தியாவிற்குள் தங்களது பரஸ்பர உறவுகள் பற்றி பேச்சு வார்த்தை நடத்தி வடிவமைத்து, இறுதியில் முடிவு செய்யும் தடையற்ற உரிமையை அனுபவிக்கவும் வேண்டும்'' என்று அறிக்கை கூறுகிறது.

''சுதந்திர இந்தியாவில் ஒன்றுபட்ட சுதந்திர வங்காளத்திற்காகத்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நின்றது. வங்காள இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பொதுவான தாயகமான வங்காளம் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில், பரிபூரண அரசியல் நிர்ணய சபை மூலம் தனது சுயநிர்ணய உரிமையை செயல்படுத்தவும், இந்தியாவின் பிற பகுதிகளுடன் தனது உறவை வரையறுத்துக் கொள்ளவும் சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும்'' என்றும் பிறகு, ''தேசிய அரசுகள்

படிப்பகம்

www.padippakam.com



விரும்பி இணைவதான ஓர் ஒன்றியம்''[48] ஆக இந்தியா இருக்க வேண்டுமெனவும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி கூறியது.

முன்னதாக, வங்காளத்தையும், பஞ்சாபையும் மத அடிப் படையில் பிரித்து, இந்தியப் பிரிவினையை முன் வைத்த இராஜகோபாலாச் சாரியின் உபாயத்தை ஏற்றுக்கொண்டு காந்தி இது பற்றி முகமதுஅலி ஜின்னாவுடன் விவாதிகக முயன்ற போது, 1944 இல் வங்காள காங்கிரஸ் ஒரு தூதுக் குழுவை காந்தியை சந்திக்க அனுப்பியது. அக்குழுவிற்கு வங்காள காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவைத் தலைவர் திரு. கே. எஸ். ராய் தலைமையேற்று, இராஜகோபாலச்சாரியின் திட்டத்தை காந்தியுடன் விவாதித்தார். அப்போது, ''வங்காளம் கலாச்சார, மொழி அடிப்படையில் ஒரே தனித்துவம் பெற்ற அலகாக இருப்ப தால், இராஜகோபாலச்சாரியின் திட்டப்படி வங்காளம் பிரிவினை செய்யப்படுவதை— மாவட்ட வாரியாக —வங்காள மககள் எதிர்க்கிறார்கள்'' என்றும் ''மொழி, கலாசார அடிப்படையில் செயல்படுத்தப்படக்கூடிய, சுயநிர்ணய உரிமை கொள்கையை வங்காளம் ஏற்றுக் கொள்கிறது''[49] என்றும் அத் தூதுக்குழு கூறியது.

''காந்தி—ஜின்னா சந்திப்பின் போது, வங்காளப் பிரதேச முஸ்லீம் லீக் ஐக்கிய வங்காளத்திற்கு ஆதரவாக தீர்மானம் நிறை வேற்றியது'' ''இந்தியாவுடனா? அல்லது பாகிஸ்தானுடனா? அல்லது யாருடனும் சேராது தனித்திருப்பதா? என்பதை தீர்மானிக்கும் பரிபூரண உரிமையைப் பயன்படுத்தும் என்று பிரதேச முஸ்லீம் லீக் தனது தீர்மானத்தை வங்காள காங்கிரஸ் கட்சித் தலைவரான கிரன் சங்கர்ராய்க்கு அனுப்பியது. அதனடிப் படையில் அவர்கள் ''வங்காளிகள் தங்களது விதியைத் தாமே தீர்மானித்துக் கொள்வார்கள்'' என்று ஜின்னாவிடம் கூறினார்.''[50] என்று பி. சி. ஜோசி கூறினார்.

''வங்காள முஸ்லீம்கள் விரும்புவதெல்லாம் மையக் கட்டுப் பாட்டிலிருந்து விடுதலையடைய வேண்டுமென்பதுதான். ஜின்னாவின் மைய்யவாத பாவனைகளுக்கு எதிராக வங்காள பிரதேச தேசியம் குறிப்பாகத் திருப்பப்படும் என்ற அறிகுறிகளை கல்கத்தாவிலுள்ள அரசாங்க இல்லம் உணர்ந்துள்ளது''[51] என்று ஆயிஷா ஜலால் சரியாகவே கூறியுள்ளார்.

''1946 மே 16இல் பிரிட்டன் கேபினட் மிஷன் ''வங்காளம் பிரிக்கப்படாது. வங்காள தேசத்தின் ஒருமைப்பாடு பாதிக்கப்

படிப்பகம்

www.padippakam.com



படாது என்று அறிவித்தவுடன் வங்காள இந்துக்களும், முஸ்லீம் களும் மகிழ்ச்சி அடைந்தனர்''[51a] என்று வங்காள ஆளுநர் பரோஸ்,கேபினட் மிஷனுக்கும், வைஸ்ராய்க்கும் எழுதினார்.

இம் மகிழ்ச்சி சிறிது காலமே நீடித்தது. காபினட் மிஷனின் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக கூறிக் கொண்டே, காங்கிரஸ் தலைவர்கள் அதை உடைத்தெறிந்துவிட்டு மத அடிப்படையில் பஞ்சாபை பிரிக்கக் கோரி, அதே கோட்பாட்டினடிப்படையில் வங்காளமும் பிரிக்கப்பட வேண்டுமென்றனர். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் முன்னாள உறுப்பினர் திரு. எஸ். சி. போஸ், வங்காளப் பிரதேச முஸ்லீம் லீகின் செயலாளர் அபுல்ஹஷீம், வங்காள முதல்வர் எச். எஸ். ஷுராவார்டி, வங்காள சட்ட சபை காங்கிரஸ் கட்சித் தலைவர் கே. எஸ். ராய் போன்றவர்கள் வங்காளப் பிரிவினையை தடை செய்ய எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. பிரிவினை சக்திகள் வலுப்பெற்றன.[52]

பல்வேறு தேசிய முதலாளிகளுக்கும், மார்வாரி, குஜராத்தி, பார்சி தரகுப் பெரு முதலாளிகளுக்கு மிடையேயான முரண்பாடு களையும், மோதல்களையும் குறிப்பிடுவது சற்று பயனுள்ளதாக அமையும்.[53] பின்னவர்கள் ஆங்கிலோ அமெரிக்க சக்திகளின் கீழ் அகில இந்தியாவிலும் மேலாதிக்கம் செலுத்தவும் சந்தைகளை விரிவுபடுத்தவும் சுதந்திரம் வேண்டி, ''பான்-இந்திய தேசியத்தை'' ஆதரித்தனர். பல பிராந்திய தேசிய முதலாளிகள் தங்களது தன்னலத்துக்காக, வளர்ந்து வரும் தேசிய உணர்வுகளைப் பயன் படுதத முயன்றனர். வளர்ந்து வரும் முதலாளிகள் 'உள்நாட்டுச் சந்தைகளைப்' பிடிப்பதற்காக, தங்களது சுய வளர்ச்சிக்கும் விரி வாக்கத்துக்குமாக, தேசபக்தி உணர்வுகளைத் தூண்டுவார்கள்.

மகாராட்டிரம், குஜராத் வர்த்தகச் சபைகளின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில், பல்வேறு பிரதேச ''முதலாளிகளுக் கிடையிலான போட்டி அதிகரிப்பை இவை வெளிப்படுத்து கின்றன''[54] என்று டி ஏ. வாடியா கூறுகிறார்.

தமிழ், தெலுங்கு முதலாளிகளுக்கிடையிலும், தென்னிந்திய, வட இந்திய மார்வாரி குஜராத்தி பார்சி பெரு முதலாளிகளுக் கிடையிலும் முரண்பாடுகள் இருந்தன. தென்னிந்தியாவில், ஐரோப்பியர்கள் மேலாதிக்கம் செய்யும் சென்னை வர்த்தக சபை யோடு கூட இந்தியர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு வர்த்தக சபைகளும் இருந்தன. தென்னிந்திய வர்த்தக சபை (1909).

www.padippakam.com



நாட்டுச் கோட்டை நகரத்தார் வர்த்தக கழகம் (1917), இந்திய வர்த்தக சபை கோயம்புத்தூர் (1929), தென்னிந்திய மில் அதிபர்கள சங்கம் (1933) போன்றவைகளிருந்தன. தென்னிந்திய வர்த்தக சபையும், நாட்டுக் கோட்டை நகரத்தார் கழகமும் தமிழ்நாட்டின் நாட்டுக் கோட்டை செட்டியார்களின் மேலாதிக்கத்திலிருந்தன.[55] 1930களில் இவ்விரு அமைப்புகளும் சென்னை சட்டப்பேரவையில பிரதானமாக அங்கம் வகித்தன.[56]

தென்னிந்தியாவின் இப்பெரும் வர்த்தக அமைப்புகளில் செட்டியார்களின் அபரிதமான கட்டுப்பாட்டை தெலுங்கு வர்த்தகர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இவர்கள் 1934 இல் ஆந்திரா வர்த்தக சபையை நிறுவினர். ''ஆந்திர வர்த்தகம், தொழிற்துறை, வங்கித் துறைகளின் நலன்களுக்கு எதிராகத் தென்னிந்திய வர்தத்க சபை பாரபட்சம் காட்டுவதாக''[57] ஆந்திர வர்த்தக சபை புகார் செய்தது.

தென்னிந்திய வர்த்தகக் குழுக்கள், நிறுவனங்கள் அனைத்தும், இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சபைக் கூட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருந்தன. குஜராத்தி, மார்வாரி பெரு முதலாளியின் பிரதிநிதிகளான புருஷோத்தம்தாஸ், தாகுர்தாஸ், ஜி. டி.. பிர்லா ஆகியவர்களின் தூண்டுதலால் 1927இல் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சபை கூட்டமைப்பு (FICCI) உருவாக்கப்பட்டது இவ்விருவரும் இந்த உயர் அமைப்பின் கொள்கைகளை தீர்மானித்து அளித்தனர். ''இக்கூட்டமைப்பின் ஒட்டுமொத்த அரசியல் திட்டங்களைப் பார்க்கும் போது, தென்னிந்திய வர்த்தக தொழில்துறை நலன்கள் ஒதுக்கப்பட்டவைகளாகவே இருந்தன''[58] என்று திரு. மகாதேவன் எழுதுகிறார்.

தென்னிந்திய முதலாளிகளுக்கும் வட இந்திய மார்வாரி குஜராத்தி பெருமுதலாளிகளுக்கு மிடையிலான இதுநாள்வரை மறைவாக இருந்த பகையானது 40களில் வெளித்தோன்ற ஆரம்பித்தது.[59] முன்னவர்கள், தென்னிந்தியச் சந்தைகள் பின்னவர்களின் ஆதிக்கத்திற்குச் சென்றுவிடும் என்று பயந்தனர். சென்னை அரசாங்கத்தின் தொழில்துறை திட்டக் குழுவிடம் தங்களது கருத்துகளைத் தெரிவித்த தென்னிந்திய வர்த்தக சபையினர், **''பொருளாதாரத் திட்டமிடுதல் அகில இந்திய அடிப்படையிலில்லாமல் பிரதேச அடிப்படையிலிருக்க வேண்டும்''** என்று கூறினர். ''முடிவுகள் அகில இந்திய அடிப்படையில் எடுக்கப் பட்டால், புதிய நெசவாலைகளையோ, சர்க்கரை ஆலைகளையோ,

படிப்பகம்

www.padippakam.com



சிமெண்ட் ஆலைகளையோ தொடங்க முடியாது. அது மிகவும் கொடூரமானதும் நியாயமற்றதுமாகும். நாங்கள் எங்களது துணி, சிமெண்ட், சர்க்கரை தேவைகளுக்கு பிறமாநிலங்களையே சார்ந்திருக்க வேண்டி வரும். இம் முக்கியப் பொருள்களில் தன்னிறைவு பெற உத்தேசித்துள்ளோம்''[60] என்று கூறினர். வட இந்திய மூலதனம் சென்னை தொழிற் துறையில் நுழைவதைத் தடை செய்ய, சென்னை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆதரித்து, தென்னிந்திய வர்த்தக சபை, ''தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் விஷயத்தில் சென்னைப் பிரதேச மக்களை, பிற பிரதேச மக்கள் அல்லது பிற நாட்டவர்கள் மிஞ்சி விட்டனர்''[61] என்று கூறியது. 1946 சென்னை அரசின் பட்ஜெட்டின்போது தென்னிந்திய வர்த்தக சபை அளித்த அறிக்கையில், மண்ணின் மைந்தர்களுக்குப் பரவலான பலன் கிடைக்கும் வகையில் வர்த்தகம் மற்றும் தொழிற் சாலைகளைத் தக்க வைத்துக்கொள்ள முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டுமென்று''[62] கேட்டுக் கொண்டது.

தென்னிந்திய நெசவாலை அதிபர்கள் சங்கமும் சென்னை அரசிற்கு அளித்த அறிக்கையில், ''தொழிற் துறையின் முழு ஆதிக்கமும் வடக்கிற்கு மாறிவிடாமல், தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தென்னிந்தியர்களின் நலனும் தேவையான அளவு பாதுகாக்கப்படவேண்டும்''[63] என்று கேட்டுள்ளது.

ஆந்திரா உட்பட ஏறக்குறைய தென்னிந்தியத் தொழில் அதிபர்கள் அனைவரும் கலந்து கொண்ட, 1945இல் சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய தொழிற்துறை மற்றும் வர்த்தகத் துறை மாநாட்டில். பிராந்திய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.[64] ''மார்வாரி விரிவாக்கத்தின் தொலை தூர எல்லையான தென்னிந்தியாவிலிருந்து பொருளாதார ஏகாதிபத்தியத்திற்கெதிரான எதிர்ப்பு வந்தது......மார்வாரிகளின் கண்ணுக்குத் தெரியாத மேலாதிக்கத்தைக் கண்டு தென்னிந்திய வர்த்தக குழுக்கள் பொறாமை கொள்ளக் காரணமிருக்கிறது''[65] என்று ஸ்லீங் எஸ் ஹாரிசன் குறிப்பிடுகிறார்.

இத்தகைய வளர்ச்சிப் போக்குகள் இந்திய வர்த்தக தொழிற் துறை சபை கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பிலிருந்த மார்வாரி — குஜராத்தி தொழிலதிபர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது. இந்திய அரசின் திட்ட வளர்ச்சித் துறைக்கு அனுப்பிய கடிதத்தில், ''தொழிற்சாலைகளைப் பிராந்திய

படிப்பகம்

www.padippakam.com



மயமாக்கலை அவர்கள் எதிர்ப்பதாகக்'' கூறியுள்ளனர். மேலும் ''ஒவ்வொரு முறையும் சென்னை பிராந்தியத்தில் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உருவாக்கப்படுகையில் அதை நிறுவும் நிறுவனம் சென்னை பிராந்தியத்தைச் சார்ந்ததாக இல்லை என்று காரணம் கூறி மறுத்துவிடுகின்றனர்[66] என வருத்தப் பட்டுள்ளனர்.'' மேலும், ''தற்போதைய பிராந்திய வளர்ச்சிக் கொள்கையானது ஒரு குறிப்பிட்ட பிராந்திய அல்லது மாவட்ட நபர்களின் அல்லது நிறுவனங்களின் ஏகபோகத்தை வளர்க்கும், பல்வேறு பிரதேச தொழில் வளர்ச்சியைத் தடை செய்யுமென்றும் கூறியுள்ளனர். எனவே ''தனியார் நிறுவனங்கள் தங்களுக்கு ஏற்ற இடங்களில் தொழிற்சாலைகளைத் தொடங்க சுதந்திரமும் வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்''[67] என்று கோரியுள்ளது.

மார்வாரி — குஜராத்தி பெரு முதலாளிகளுக்கும், தென்னிந்திய முதலாளிகளுக்குமிடையிலான மோதல்களின் விளைவாக, தென்னிந்திய வர்த்தக சபையிலிருந்து மார்வாரி — குஜராத்தி முதலாளிகள் விலகி, தங்களுக்கென்று தனியாக, வர்த்தக சபை ஒன்றை—இந்துஸ்தான் வர்த்தக சபையை - நிறுவிக் கொண்டனர்.[68]

தனியார் நிறுவனங்கள் தங்களுக்கு ஏற்ற இடங்களில் தொழிற்சாலைகளைத் தொடங்க சுதந்திரமும், வசதிகளும் செய்து தரப்பட வேண்டும் என்ற முழக்கம் நன்கு வளர்ச்சியடைந்த முதலாளித்துவம், முதலாளித்துவம் குறைவாக வளர்ச்சி அடைந்த நாடுகளில் அல்லது பகுதிகளில் நுழைவதற்கு உதவியது. பிரிட்டிஷ் முதலாளித்துவம் நன்கு வளர்ச்சி அடைந்தபோது இக்குரல் எழுப்பப்பட்டது. அனைத்து நாடுகளிலும் அமெரிக்க மூலதனம் நுழைய இது பயன்படுத்தப்பட்டது. காலனிய நாட்களில் மார்வாரி குஜராத்தி பெரு முதலாளிகள். அதிக சக்தி வாய்ந்த அந்நிய மூலதனத்திடமிருந்து பாதுகாப்பை வேண்டினர்.[69] (பிரதானமாக அந்நிய மூலத்தனத்தின் கூட்டையே விரும்பினர் என்பது குறிப்பிடத்தக்கது)

காங்கிரஸை மிகக் கடுமையாக விமர்சித்து வந்த சர். சண்முகம் செட்டியை, காலனியத்திற்குப் பிற்பட்ட இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக்கிய போது, இந்தியாவை கூட்டாக சுரண்டுவதற்கு தமிழ்நாட்டு பெரு முதலாளிகள் வட இந்திய பெரு முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்துக் கொண்டனர். இருவருமே தரகு முதலாளிகள்தான். 1947இலிருந்தே மைய்ய

படிப்பகம்

www.padippakam.com



அரசின் ஆட்சி அதிகாரத்தை தென்னிந்திய பெரும் தொழிலதியர்களும் செட்டியார்களும் பங்கு போட்டுக் கொண்டனர். இதன் பிறகு, நீண்டகாலமாக எழுப்பப்பட்டு வந்த தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமைக்குரல், கேட்கப் படாமலேயே அமிழ்ந்துவிட்டது.

காலனிய ஆட்சியின் போது பிரிந்து போவதற்குரிய உரிமையோடு கூடிய சுயநிர்ணய உரிமை இரண்டு காரணங்களுக்காக அழுத்தம் கொடுக்கப்படாமலிருந்தது. அப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தான் மக்களின் பொது எதிரியாகக் கருதப்பட்டு, அதை விரட்டி நாட்டை மீட்பதற்கான உணர்வு இத்துணைக் கண்ட மக்களை ஒன்றிணைத்தது. இந்துக்களில், குறிப்பாக மேல்ஜாதி இந்துக்கள், காங்கிரஸ் அமைப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு குணமுடையது, அது ஒன்றுதான் இந்திய மக்களை காலனிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலை செய்ய முடியும் என்று நம்பினர். அதேபோன்று, முப்பதுகளின் பிற்பகுதியில் இருந்து, பெரும்பாலான முஸ்லீம்கள், முஸ்லீம் லீக் அமைப்புதான் தங்களை இரட்டை நுகத்தடியிலிருந்து—அதாவது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மற்றும் ஒன்றுபட்ட இந்தியாவின் இந்து இராச்சியத்தில் இருந்து—விடுவிக்க முடியும் என்று நம்பினர். இரண்டாவதாக, தேசிய பிரதேசங்களின் சுயாட்சி வழங்கப்படும் என்ற காங்கிரஸ் முஸ்லீம் லீக் தலைவர்களின் உறுதி மொழிகளால் மக்கள் ஏமாற்றப் அடைந்திருந்தனர். பின்னர் துரோக மிழைக்கவே அன்று அந்த உறுதி மொழியை வழங்கினர். இத்தகைய குழப்பமான சூழலில், முன்னணியில் இருந்த தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்பட்டது.

## காங்கிரஸ் தலைவர்களின் இரட்டை நாக்கு புரட்டு வேலைகள்

மொழிவாரி மாநிலங்களை உருவாக்குவதிலும், அவற்றிற்கு சுயாட்சி வழங்குவதிலும், பிற பிரச்சினைகளில் இருந்தது போல் காங்கிரஸ் தலைவர்கள் இரட்டை வேடமிட்டு இரண்டு பேச்சுப் பேசினார்கள். வெளிப்படையாக ஒன்றைப் பேசுவது மறைமுகமாக ஒன்றைப் பேசுவது அவர்களது நிலையாயிற்று. ஒருபுறம் மன வெறுப்புடன் இவ்வெகுசன கோரிக்கையை ஏற்றுக் கொண்டு மறுபுறம் இந்தியப் பெரு முதலாளிகளின் நலன்களுக்குச் சேவை செய்ய ஒரு வலுவான மைய்ய அரசை அமைக்க உழைத்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



காங்கிரஸ் 1905 முதல் வங்காளப் பிரிவினையை, வங்காள மக்கள் வங்காள மொழி பேசுவதனால் ஒருங்கிணைந்த தன்மையுடையவர்கள் என்ற அடிப்படையில், எதிர்த்தது. 1908இல் பீகாரில் தனியாக காங்கிரஸ் பிரதேசக் குழுவையும் பின்பு 1917இல் சிந்து, ஆந்திரா பிரதேசக் குழுக்களையும், அமைத்து விட்டது. 1920இல் பல்வேறு பகுதி மக்களின் வற்புறுத்துதலுக்கு ஏற்ப காங்கிரஸ பிரதேசங்களை மறுசீரமைப்பு செய்ய மொழி கோட்பாட்டையே அடிப்படையாகக் கொள்ளத் தீர்மானித்தது. 1927 டிசம்பரில் சைமன் கமிஷன் அமைக்கப்பட்ட பின்பு, சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் ''மொழி அடிப்படையில் பிரதேசங்களை மறுபங்கீடு செய்யும் காலம் வந்து விட்டது; அதை உடனடியாகச் செய்யவேண்டும் என்றும்...அந்த வகையில் தொடக்கமாக ஆந்திரா, உத்கல், சிந்து, கர்நாடகா பிரதேசங்களை உருவாக்க வேண்டும்''[70] என்றும் கருதியது **இத்தீர்மானத்திற்கு ஆதரவாகப் பேசிய உறுப்பினர்கள் தலைவர்களல்ல. மாறாக ஒரே மொழி, கலை, கலாச்சார வாழ்வினைக் கொண்ட மக்களின் பிரதிநிதிகள் தான் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையைக் கோரினர்''** மீண்டும் 1937 அக்டோபரில் கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சாதாரண உறுப்பினர்கள் (செயற்குழு அல்ல) ஒரு தீர்மானத்தின் மூலம் ''மொழி அடிப்படையில் பிரதேசங்களை மறுபங்கீடு செய்ய வேண்டுமென்ற காங்கிரஸின் கொள்கையை உறுதி செய்து, சென்னை, பம்பாய் அரசாங்கங்களுக்கு தனி ஆந்திரா, கர்நாடகா, பிரதேசங்களை உருவாக்கப் பரிந்துரைத்தது ''அதே தீர்மானத்தில், ''பீகாரிலுள்ள காங்கிரஸ் மந்திரிசபை பீகாரிலுள்ள வங்காள மொழி பேசும் பகுதிகளை வங்காளத்துடன் இணைக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும்''[71] கேட்டுக் கொண்டது. எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இக்கோரிக்கை தலைவர்களால் கிடப்பில் போடப்பட்டது.

1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் நாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ''வெள்ளையனே வெளியேறு'' தீர்மானத்தை நிறைவேற்றிய போது, **''வருங்கால இந்தியாவிற்கான அரசியல் சட்டம் காங்கிரசின் கருத்துப்படி, கூட்டாட்சித் தன்மையுடையதாக —கூட்டாக இணையும் பிரதேசங்களுக்கு அதிக அளவு சுயாட்சி உரிமையும் அதிகப்பட்ச அதிகாரங்களையும் வழங்குவதாக இருக்க வேண்டும்''**[71] என்றும் அறிவித்தது 1945-46 ஆண்டுகளில், ஆட்சி மாற்றம் தென்பட்டபோது, காங்கிரஸ் செயல் கமிட்டி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், ''முடிந்த மட்டும்' மொழிவாரி

படிப்பகம்

www.padippakam.com



கோட்பாட்டை கடைப்பிடிப்போம்'' என்று உறுதியளித்தது. **''இந்திய கூட்டமைப்பு அதன் அங்கங்களின் விருப்பத்தோடு கூடிய இணைப்பாக இருக்கவேண்டும்''** என்றும் கூறியது. ''இவ்வாறு இணையும் பகுதிகளுக்கு அதிகபட்ச சுதந்திரம் வழங்குவதற்காக கூட்டாட்சியில் குறைந்த எண்ணிக்கையில் பொதுவான, தேவையான அதிகாரங்களையும்— இவை அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தும் — அதோடுகூட இணையும் அங்கங்கள் ஒத்துக் கொள்ளக்கூடிய பொதுவான துணைப் பட்டியலையும் கொண்டிருக்க வேண்டும்''[73] என்றும் கூறியது.

சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், 1946 மார்ச்சில் நேரு பின்கண்டவாறு கூறினார். ''சமீபத்திய தீர்மானங்களில், குறிப்பாக தேர்தல் அறிக்கையில் உள்ள காங்கிரசின் திட்டங்கள், கூட்டமைப்பின் அங்கங்களுக்கு 95% சுயநிர்ணய உரிமை வழங்குபவைகளாகவே உள்ளன.'' கூட்டமைப்பில் இணையும் அங்கங்கள் தங்களது சுய விருப்பத்தினடிப்படையில் இணையவேண்டும். பாதுகாப்பு மற்றும், அந்நிய விவகாரங்கள் போன்ற சில குறிப்பிட்ட துறைகளையே கூட்டமைப்பு கொண்டிருக்கும். இத்தகைய நடைமுறை 95% சுதந்திரத்தை கூட்டமைப்பின் அங்கங்களுக்கு வழங்கி, மீதமுள்ள 5%ஐ இருவரும் இணைந்து செயல்படுத்த உதவும்.''[74]

மொழி அடிப்படையிலான காங்கிரஸ் பிரதேசங்கள் உருவானதும், அவர்களது சொந்த மொழியிலேயே மக்களைச் சந்தித்ததும் பரந்துபட்ட மக்கள் திரள் ஆதரவை காங்கிரசுக்குத் தேடித் தந்தது ''பிராந்திய உணர்வுகளை உள்ளடக்கித்தான் தேசிய இயக்கம் கட்டப்பட்டது''[75] என்று மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு 1953-55இல் சரியாகவே கூறுகிறது. காங்கிரஸ் தலைவர்களின் சாந்தமான பொது அறிவிப்புகளும் வாக்குறுதிகளும் ''வருங்கால இந்தியா விருப்பப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட கூட்டமைப்பாக அல்லது சுயாட்சியுடைய பிரதேசங்களை உள்ளடக்கிய கூட்டமைப்பாக'' இருக்கும் என்ற உறுதிமொழிகளும், நடைமுறைப்படுத்தப்படுவதற்காகக் கூறப்படவில்லை. அனைத்து அதிகாரங்களும் மையப் படுத்தப்பட்ட ஒரு ஒற்றை இந்தியாவை—எல்லா சுயாட்சிகளையும் பறித்து— உருவாக்குவதுதான் அவர்களின் உண்மையான திட்டமாக இருந்தது.

மோதிலால் நேருவைத் தலைவராகக்கொண்ட ஒரு கமிட்டி 1928இல் ''சுயராஜ்ய அரசியல் சட்டம்'' நகலை உருவாக்கியது.



படிப்பகம்

www.padippakam.com



இவ் அரசியல் சட்ட நகலை 1928 கிருஸ்துமஸ் வாரத்தில் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மாநாடு ஏற்றுக் கொண்டது. இந்த சுயராஜ்ஜிய அரசியல் சட்டம் பிரிட்டிஷ் அரசின் பரிசீலனைக்காக தயாரிக்கப்பட்டது. இதில், வருங்கால இந்தியா ஒரு ஒற்றை அமைப்பாகவும், அனைத்து அதிகாரங்களும் மையப் படுத்தப்பட்டதாகவும், பிரிட்டிஷ் அரசால் நியமிக்கப்படும் ஒரு கவர்னர்-ஜெனரலால் தலைமை ஏற்கப்பட்டதாகவும் இருக்கும். பிரிட்டிஷ் அரசிற்கு முழுமையாக கீழ் படிந்து, இந்த மைய்ய அரசு கவர்னர்களை நியமனம் செய்யும்; மாகாண சட்ட சபைகள் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஒப்புதலளிக்கவோ அல்லது மறுக்கவோ செய்யும்; மாகாண அரசுகளின் சட்டசபை, நிர்வாக நடவடிக்கைகளை ஒத்திவைக்கவோ, மறுக்கவோ அதிகாரங் களைக் கொண்டிருக்கும்; கவர்னர்களைக் கொண்டு மாகாண அரசுகளை, அவைகளின் சட்ட சபைகளை கலைக்கவும் செய்யும்.[76]

1947இல் ஆட்சி மாற்றத்திற்குப் பின் காங்கிரஸ் தலைவர் கள் மொழி அடிப்படையில் பிரதேங்கள் உருவாவதை தங்களால் முடிந்த வரைக்கும் எதிர்த்தே வந்தனர். 1962 இல் கூட, பஞ்சாபி சுபா கோரிக்கையின் மீது, ''பஞ்சாபி மொழி பேசும் மாநில அமைப்பிற்கு ஒத்துக் கொள்வதைவிட நான் ஒரு உள்நாட்டு யுத்தத்தைச் சந்திக்கத் தயாராக உள்ளேன்''[77] என்று பிரதமர் நேரு கூறினார். பெரும் வெகுசன எழுச்சிகள் காங்கிரஸ் தலைவர் களை மொழிவாரி மாகாண கோரிக்கைகளுக்கு நிர்ப்பந்தப் படுத்தியபோது, அம் மறுசீரமைப்பைக் கூட அத்தேசிய இனங் களுக்கிடையேயான மோதலாக மாற்றி வந்தனர்.

இந்தியப் பெரு முதலாளிகளான ஜி. டி. பிர்லாவும் புருஷோத்தம் தாஸ், தாகுர்தாஸும் மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைவதை கடுமையாக எதிர்த்தனர். இத்தகைய மறுசீரமைப்பை எதிர்ப்பதற்காக பம்பாயில் அமைக்கப்பட்ட 'மக்கள் கமிட்டியில்' தாகுர்தாஸ் ஜி.டி. பிர்லா, ஜே. ஆர் டி. டாட்டா, எச்.பி. மோதி போன்றவர்கள் இருந்தனர்.[78] இம் மறுசீரமைப்பிற்கு அகில இந்திய மார்வாரி கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவித்தது.[79]

ஆட்சி மாற்றத்திற்கு முன்பு பிரிட்டிஷ் பிரதிநிதிகளுடனும் முஸ்லீம் லீக் தலைவர்களுடனுமான பேச்சு வார்த்தையின் போது காங்கிரஸ் தலைவர்கள், வருங்கால இந்தியா விருப்பத்தோடு இணையும் மாநிலங்களை அல்லது முழு சுயாட்சி அனுபவிக்கும் மாநிலங்களைக் கொண்டிருக்கும் என்ற தங்களது உறுதி

www.padippakam.com



மொழிக்கு மரியாதை கொடுத்தே பேசவில்லை. கூட்டமைப்பை உருவாக்க எந்தவொரு மாநிலமும் விருப்பத்தோடு இணைவதை அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். எந்த வகையிலும் கூட்டமைப்பின் அங்கங்களுக்கு, ''அதிகபட்ச சுதந்திரத்தையோ அல்லது சுயாட்சியையோ'' அளிக்க விரும்பவில்லை.

1947 ஜூலை 14 ஆம் நாள், அரசியல் நிர்ணய சபையின் 42ஆவது கூட்டத்தில் வர்த்தக கமிட்டிக்கு அறிக்கை அளிக்கையில் ''அவர்கள் கூட்டமைப்பை உருவாக்கலாம். ஆனால் அது ஒரு வலுவானதாக, மைய அரசுக்கு உட்பட்டிருப்பதாக, நாம் உருவாக்க வேண்டும்''. என்று நிர்ணய சபையின் உறுப்பினர் கே. எம். முன்ஷி கூறினார்.

1947 இல் இந்திய யூனியன் எவ்வாறு தோன்றியது? மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் வெற்றியிலோ அல்லது மக்களின் விருப்பத்தின் பேரிலோ அல்லது அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சுய விருப்பத்தினாலோ அல்ல! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மற்றும் சில காங்கிரஸ், முஸ்லீம் லீக் தலைவர்களின் தகிடுதத்தங்களால் உருவாக்கப்பட்டது. இரு புதிய அரசுகளும் — இந்தியாவும், பாகிஸ்தானும் — டொமினியன் அந்தஸ்து அடிப்படையில், மௌன்ட்பேட்டன் கொடை என்பதன் மூலம் பிர்லாக்களும், டாட்டாக்களும், இஸ்பானிகளும், ஆதம்ஜிகளும் அவர்களது அரசியல் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டு செயற்கையாக உருவாக்கப்பட்டது.

இதற்கு சிறிது காலத்திற்கு முன்பு வைசிராய் மௌன்ட் பேட்டனும் அவரது பிரிட்டிஷ் அதிகாரிகளும், காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தலைவர்களின் மோதல்களை சமாதானம் செய்யும் வகையில் மற்றொரு திட்டத்தைத் தயாரித்து இருந்தனர். ''வட மேற்கு எல்லைப் பிரதேசப் பிரதிநிதிகளும் வங்காளம், பஞ்சாப் பகுதிகளிலுள்ள பெரும்பான்மை முஸ்லீம், முஸ்லீம் அல்லாதவர்களின் பிரதிநிதிகளும் அவர்கள் தற்போதுள்ள அரசியல் சட்டசபையில்சேர விரும்புகிறார்களா? அல்லது ஒன்று அதற்கு மேற்பட்ட அரசியல் சட்டசபைகளில் குழுவாக இருக்க விரும்புகிறார்களா? தனித்து நின்று தங்களது அரசியல் சட்டசபைகளாகச் செயல்பட விரும்புகிறார்களா? என்று தீர்மானிக்கும் உரிமையை இத்திட்டம் வழங்கியது. இத்திட்டத்தின் வேறு சில முக்கிய அம்சங்கள் வருமாறு:

படிப்பகம்

www.padippakam.com



1. கேபினட் மிஷினின் திட்டப்படியான கட்டாய குழுச் சேர்க்கை நீக்கப்பட்டிருந்தது.
2. பிரதேசங்கள் தங்களது வருங்கால அரசியல் சட்ட அமைப்பை அவர்களது விருப்பம்போல் உருவாக்கிக் கொள்ளும் உரிமையை அங்கீகரித்திருந்தது.
3. வங்காளமும், பஞ்சாபும் தங்களது ஒற்றுமைக் குலையாமல் பிரிக்கப்படாமலிருப்பது பற்றியும், இந்தியாவின் பிற பகுதிகளுடனான தங்களது உறவை தீர்மானிப்பது பற்றியும் அவர்களே முடிவெடுக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்தது.
4. ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் சட்டசபைகள் இருக்குமானால் பொதுவான விஷயங்களை, குறிப்பாக பாதுகாப்பு, போன்றவைகளைத் தங்களுக்குள் சேர்ந்து கலந்தாலோசித்து, பேச்சு வார்த்தை நடத்த மற்றும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ள இத்திட்டம் வழிவகை செய்தது.

பிரிட்டிஷ் ஆட்சி முடிந்தபிறகு, சொந்த மாநிலங்கள் பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளுடன், தங்களது மக்களுக்கு அதிக நன்மை பயக்கும் அதிகாரப் பங்கீடுகள் பற்றி பேசிக் கொள்ள உரிமையளிக்கப் பட்டிருந்தது.[81] இத்திட்டம். நேருவிடமும் ஜின்னாவிடமும் காட்டிய பிறகு, பிரிட்டன் மந்திரி சபையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

நேரு முதலில் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டு பிறகு இந்தியாவை பிரிவினையை நோக்கிச் செலுத்திவிடும் என்ற சாக்கில் முறியடித்து விட்டார்.[82] ஏகபோக அதிகாரத்தைப் பெற (பிரிட்டன் குடையின் கீழ்) காங்கிரஸ் தலைவர்கள் கீழ்க்கண்ட திட்டத்தை எதிர்த்தனர். பிரதேசங்கள் தொடக்கத்தில் மரபுப்படி தொடரும் அரசுகளாக இருக்க வேண்டும், மைய்ய அதிகாரமுள்ள அரசு பிரதேசங்களின் விருப்ப இணைவின் மூலம் தோன்றி, அதாவது மைய்ய அரசிற்காக தங்களது அதிகாரம் அல்லது அதிகாரங்களை விட்டுக் கொடுத்து உண்மையான கூட்டாட்சிக்கு வழிகாண வேண்டும்.

ஒவ்வொரு பிரதேசமும் தனி அரசு அமைப்பிற்கானதாக இருந்தது; மேற்கு அல்லது மத்திய ஐரோப்பிய நாடுகளைவிட, இந்தியாவிலுள்ள பல பிரதேசங்கள் (தமிழ்நாடு, ஆந்திரா, வங்காளம் போன்றவை) பெரியனவாயும், அதிக ஜனத்தொகை கொண்டனவாயும் இருந்தன. சொந்த மாநிலங்களைப் பிரித்த

படிப்பகம்

www.padippakam.com



பின், எல்லை பகிர்விற்குப் பின்பு உருவாகும் இத்தேசங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்குப் பதிலாக—விருப்பத்தின் அடிப்படையிலான இந்தியக் கூட்டமைப்பிற்கு ஒத்துக்கொள்வதற்குப் பதிலாக — நேரு போன்றவர்கள், பிரதேசங்கள் தங்கள் அரசுகள் அமைத்துக் கொள்ளும் வாய்ப்புகளை பறித்து' செயற்கையான, மத அடிப்படையிலான வழிகளில் இந்தியப் பிரிவினையை வலியுறுத்தினர். இந்த தேசிய இனப் பிரதேசங்கள் அல்லது அவற்றின் பகுதிகள் இந்துஸ்தானத்துடனோ அல்லது பாகிஸ்தானுடனோ சேர, வற்புறுத்தப்பட்டன.

முன்னதாக, 1946 டிசம்பரிலோ அல்லது 1947 ஜனவரியிலோ அன்றைய இந்திய அரசின் சீர்திருத்தத் துறை ஆணையாளர் வி.பி. மேனனால்,பட்டேலுடன் அவர் நடத்திய பேச்சு வார்த்தையினடிப்படையில், ''மௌன்ட்பேட்டன் பரிசு அல்லது தீர்வு'' என்றழைக்கப்படும் இத்திட்டம் தீட்டப்பட்டது. பிரிவினையும் டொமினியன் அந்தஸ்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் பல 'சாதகமான அம்சங்கள்' இருக்கும் என்பதை படேல், மேனனுடன் ஒத்துக்கொண்டார். அத்தகைய ஒப்பந்தம் அமைதியான ஆட்சி மாற்றத்திற்கும், பிரிட்டனின் நட்பிற்கும், நல்லெண்ணத்திற்கும், சிவில் மற்றும் இராணுவ நிர்வாகத் தொடர்ச்சிக்கும், ஒரே சமயத்தில் ஒரு வலுவான மைய்ய அரசு காங்கிரஸுக்குக் கிடைப்பதற்கும், மைய்ய விலக்கு கூறுகளை எதிர்த்து தாக்குப் பிடிக்கவும்'' உத்திரவாதமளிக்கும்.[88] மைய்ய விலக்குக் கூறுகளை எதிர்த்து சமாளிப்பது—அதாவது இத்துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு தேசங்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளை —நேருவை பிரதமராகவும், பட்டேலை துணைப்பிரதமராகவும் கொண்டு அமைந்த டொமினியன் அரசின் பிரதான நோக்கமாக இருந்தது.

இவர்கள் உருவாக்கிய இந்திய அரசியல் சட்டம், தனி மனித உரிமைகளைப் பறித்ததுபோல் இத்துணைக்கண்டத்திலுள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் காலடியில் போட்டு மிதித்தது. (இங்கு, இந்த நாட்டின் குடிமகனின் அனைத்து உரிமைகளையும் மறுக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. கீழ்கண்ட அரசியல் சட்டப்பிரிவுகளைத்தான் குறிப்பிடுகிறோம். விதி 19 பிரிவு 2,3,4, விதி 22 பிரிவு 3 (b), விதிகள் 352 — 360 மற்றும் அரசியல் சட்டத்திற்குட்பட்டு,மாநில அரசுகள் இயற்றும் பல்வேறு சட்டங்கள் இச்சட்டப்படி ஜனநாயக உரிமைகளை ஜனாதிபதி விரும்பும்வரைதான்

படிப்பகம்

www.padippakam.com



குடிமக்கள் அனுபவிக்க முடியும்.) அரசியல் சட்டப்படி இந்திய ஒன்றியத்தின் தனித்தன்மையை யாரும் கேள்வி கேட்கக் கூடாது. பிரிந்து செல்வதற்கான உரிமையோடு கூடிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை சட்ட விரோதமானது. இந்திய யூனியனில் அங்கம் வகிக்கும் எந்தவொரு மாநிலப் பரப்பளவை மாற்றுவதற்கும், ஜனாதிபதியின் அனுமதியின்றி, பாராளுமன்றத்தின் எந்த சபைகளிலும் மசோதாக்களைத்தாக்கல் செய்யமுடியாது''[34] அனைத்து அதிகாரங்களும் மய்ய அரசின் கும்பல்களிடமே குவிந்துள்ளன.

''இந்தியப் பிரதேசங்கள் முழுமைக்கும் அல்லது ஏதாவது ஒரு பகுதிக்கும், எந்தவொரு உடன்பாட்டையோ, ஒப்பந்தத்தையோ பிற நாடுகளுடனான மாநாடுகள் பற்றியோ அல்லது உலக அளவிலான மாநாடுகள், கூட்டங்கள் அல்லது ஏதாவது அமைப்புகள் சார்பான தீர்மானங்களைப் பற்றியோ நடைமுறைப்படுத்த சட்டம் இயற்ற'' பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாநிலத்தின் ஆளுநரை மக்கள் தேர்ந்தெடுப்பதில்லை! ஜனாதிபதியே நியமிக்கிறார். அவர் ஜனாதிபதி விரும்பும் வரை அதிகாரத்திலிருக்கலாம். அரசியல் நிர்ணய சபையில் ஆளுநரை தேர்வு செய்வது பற்றிய விவாதத்தின் போது, மய்ய அரசுதான் நியமிக்க வேண்டும் என்று நேரு மிக அழுத்தம் திருத்தமாகக் கூறினார். ''இந்தியாவின் ஒற்றுமை, நிலைத்தத் தன்மை, பாதுகாப்பு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு செய்யவேண்டும்''[35] என நேரு கூறுகிறார். இதன் பிரதான நோக்கமே மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதும், அவர்களின் சுய நிர்ணய உரிமையை முடக்குவதும் தான். அரசியல் சட்டப்படி மாநிலங்களின் நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவ் அதிகாரங்களை அவர், அரசியல் சட்டத்திற்குப்பட்டு தனது அதிகாரிகளின் மூலமோ அல்லது நேரிடையாகவோ செயல்படுத்துவார். அவர் தனது வேலைகளை அமைச்சரவையின் ஆலோசனைப் படி செயல்படுத்துவார். அதேசமயம் தனது சுய விருப்பத்தின் படி செயல்படவும் அதிகாரம் பெற்றுள்ளார். அவர் தனது சுய விருப்பப்படி செயல்பட்டிருக்க வேண்டும் அல்லது செயல்பட்டிருக்கக் கூடாது என்று ஆளுநரின் செயல்முறைகளை கேள்வி கேட்கக் கூடாது. மாநில அரசு நிறைவேற்றும் அனைத்து மசோதாக்களும் சட்டமாவதற்கு முன், ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும். ஆளுநர் அம்மசோதாவை ஜனாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்ப, நிறுத்திவைக்க உரிமை உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



ஆளுநரின் அறிக்கை அடிப்படையில், (சில சமயங்களில் அவ்வறிக்கை இல்லாமலேயே) ஜனாதிபதி, மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையை கலைக்கவோ அல்லது தற்காலிகமாக நீக்கமோ, அல்லது அமைச்சர வையை கலைத்து மைய்ய அரசின் வரம்பற்ற அதிகாரப் பயன் பாட்டிற்கு உத்திரவாதமளிக்கும் வகையில் 'ஜனாதிபதி ஆட்சியை' திணிக்கலாம்.[86] 1990-91 வரை பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 95 தடவை, ஜனாதிபதி ஆட்சி திணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களும் ஏதாவதொரு சமயம் ஜனாதிபதி ஆட்சியில் இருந்துள்ளன.

மிகக் குறைந்த ஓட்டுகளின் மூலம் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதிக்கு அரசியல் சட்டப்படி வரம்பற்ற அதிகாரம் வழங்கப்பட்டுளளது. உண்மையில் இவர் ஆளும் வர்க்க கும்பலின் கையாளாக எடுபிடியாகச் செயல்பட தெரிந்தெடுக்கப்பட்டவர். ''அரசியல சட்டத்தின் அவசரகால சரத்துக்களான 352 — 360 வரையிலான பிரிவுகள் 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின் பிரிவுகள் 42, 43, 45 ஐ நெருக்கமாக ஒத்திருக்கின்றன'' என்று எஸ். சி. போஸ் கூறுகிறார். மேலும் அதன் உள்ளடக்கம் முழுவதும் சில வார்த்தை மாற்றங்களோடு அரசியல் சட்டத்திலும் மறுபிறவி எடுத்துள்ளன''[87] என்கிறார். இவ்விதிகள குடிமக்களின் மிகச் சொற்பமான உரிமைகளைக கேலி செய்வதோடு, இந்திய ஒன்றியத்தில் இணைந்துள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் உரிமைகளையும் பறித்துள்ளன. வெளி ஆக்கிரமிப்பு அல்லது உள்நாட்டு கலகங்களால் உடனடி அபாயமிருக்கிறதென்று ஜனாதிபதி அறிந்து திருப்தியடைந்தால், அவர் உடனடியாக அவசர கால நிலையை அறிவிக்க உரிமை பெற்றிருக்கிறார். அவசர கால நிலை ஒருமுறை அறிவிக்கப்பட்டவுடன், அரசு நிர்வாகத்துறைகள் தங்களது வரம்பற்ற அதிகாரங்களை உபயோகிக்கத் தடையேதும் கிடையாது. மைய்ய அரசு, உடனடியாக மாநில நிர்வாக மற்றும் சட்டப் பேரவை அதிகாரங்கள் அனைத்தையும் தனது கையில் எடுத்துக் கொள்ளும். குடி மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் நீக்கப்பட்டுவிடும். இரண்டு மாதத்திற்குள், அறிவிக்கப்பட்ட அவசர கால நிலையை பாராளுமன்றம் தனிப் பெரும்பான்மையுடன் ஏற்பளிப்புச் செய்துவிட்டால் அவ் அவசர கால நிலை, மறு அறிவிப்பு வரும் வரை, காலவரையறையற்று நீட்டிக்கப்படும்.

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் நிர்ணய சட்டப்படி, மைய்ய அரசு கீழ்க்கண்ட முக்கியமான துறைகளை — இராணுவமும் அதைச் சார்ந்த தொழில்களும், அணுசக்தியும் அதன் உற்பத்திக்குத் தேவையான தாதுப்பொருள் உற்பத்தியையும், கப்பல் போக்குவரத்தையும், பெரிய துறைமுகங்களையும் விமானப் போக்குவரத்தையும், தபால் தந்தித் துறையையும், வெளி வாணிபம், மாநிலங்களுக்குட்பட்ட வாணிபம், வங்கிகள், ஆயுள் காப்பீடு, முக்கியத் தொழில்கள், கடல் வழி மீன் பிடித்தல், சுரங்கத் துறை, விஞ்ஞானத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள், சில மத்திய பலகலைக் கழகங்கள், உச்ச, உயர் நீதி மன்றங்கள், வருமான வரி (விவசாய வரி தவிர மற்றைய வரிகள்) பொருள்களின் சுஙகவரி, கார்ப்பரேஷன் வரி போன்றவற்றை நிர்வகிக்கிறது. மாநில பொறுப்புகளான சட்டம் ஒழுங்கு மறறும் கல்வி மறைமுகமாக மைய்ய அரசினால் கட்டுப்படுத்தப்படுகிறது. இது தவிர மற்ற மீதமுள்ள அதிகாரங்கள் மைய்ய அரசிடம் குவிக்கப்பட்டுள்ளன. மேல் சபை, மூன்றில் இரணடு பங்கு உறுப்பினாகள் ஆஜராகி வாக்களிப்பதன் மூலம் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து மாநில அரசு பட்டியலிலுள்ள எந்தப் பொறுப்பிற்கும் பாராளுமன்றம் சட்டமியற்ற அதிகாரம் பெற்றுள்ளது.

நாம் முன்னர் கூறியதுபோல் அனைத்து வருவாய் ஆதாரங்களும் மைய்ய அரசின் ஆளுமைக்குடபட்டு இருக்கின்றன. மைய்ய அரசு விரும்பிக் கொடுக்கும் நிதி ஆதாரங்களைச் சார்ந்தே மாநில அரசுகள் உள்ளன.

காலனி ஆட்சியின் எஃகு உருக்கு போன்ற அடிப்படையே இந்திய நிர்வாக சேவைத் துறை (ICS) தான. அது 1947க்குப் பின் தொடர்ச்சியாக இந்தியன் நிர்வாக சேவைத் துறையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. காலனியாதிக்க காலத்தில் ஐ. சி. எஸ். அதிகாரிகளை பிரிட்டிஷ் அரசுச் செயலர் நியமித்தார். அதே பணிநிலை மற்றும் உரிமைகளை, இந்திய அரசியல் சட்டமும் உத்திரவாதம் செய்தது. அவர்களுக்கு முன்னைவிட அதிக ஊதியம் வழங்கப்பட்டது. மாநில நிர்வாகத்தின் உயர் பதவிகள் அனைத்தும் இந்த ஐ. சி. எஸ், ஐ. ஏ. எஸ் (IAS) அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட்டதோடு, காவல் துறையின் உயர் பதவிகளும் மைய்ய அரசினால் ஐ. பி. எஸ். (IPS) அதிகாரிகளைக் கொண்டு நிரப்பட்டது. இத்துறைகளின் அதிகாரிகளை மாநில அரசு ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்த முடியாது. இவ்வாறு மைய்ய அரசு, மாநில அரசு இயந்திரத்தின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



மாநில நீதித் துறையின் உயர் பதவிகளின் நியமனங்களும் மைய்ய அரசினால் செய்யப்படுகின்றன. மாநிலத்திலுள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளை ஜனாதிபதி, உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி, மாநில ஆளுநர் இவர்களைக் கலந்து ஆலோசித்து நியமிக்கிறார். உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி தவிர மற்றவர்களை நியமிக்கும் போது, உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியையும் கலந்து கொள்கிறார். ஒரு மாநிலத்திலுள்ள மாவட்ட நீதிபதிகளை நியமிப்பதோ, பதவி உயர்வு அளிப்பதோ மாநில அமைச்சர்களிடமில்லை, மாறாக மாநில ஆளுநர் உயர்நீதி மன்றத்தை கலந்தாலோசித்துச் செய்கிறார்.

நமது அரசியல் சட்டப்படி **மாநிலங்கள் யாவும் பெருமை மிக்க நகராட்சிகள் தான்.** இவற்றை மைய்ய அரசு விரும்பும் போதெல்லாம் கலைக்கலாம்.

1958 ஆம் ஆண்டு இராணுவச் சட்டம் (சிறப்பு அதிகாரங்கள்—1972 இல் திருத்தம் செய்யப்பட்டது) அதன் பெயருக்கு ஏற்ப அதிக அதிகாரங்களை, 'அமைதி குலைந்த பிரதேசங்களில்' இராணுவத்திற்கு அளித்துள்ளது. ஒரு பகுதி 'பதற்றப்பகுதி' என அறிவிப்பது அந்த மாநில அமைச்சர்களல்ல. மாறாக, மாநில ஆளுநரோ அல்லது துணைநிலை ஆளுநரோ அல்லது மைய்ய அரசோதான் அறிவிக்க முடியும். மாநிலத்தின் ஒரு பகுதி 'பதற்றப்பகுதி' என அறிவிக்கப் பட்டபின், அதன் மீது மாநிலச் சட்டசபைக்கு அதிகாரம் ஏதும் கிடையாது. இச் ட்டத்தின்படி இராணுவ அதிகாரி, அல்லது அவருக்கு சமமான தகுதிபடைத்த அதிகாரி, பொது அமைதியை நிலைநாட்ட முறையான எச்சரிக்கை விடுத்தபின், அவர் தேவை யென்று கருதினால் "சுடுவதற்கோ அல்லது பலாத்காரத்தைப் பயன்படுத்தவோ, சட்டத்தை மீறுபவர்கள் மட்டுமின்றி, ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட வர்கள் கூட்டமாகக் கூடக் கூடாது என்ற தடை ஆணையை மீறுபவர்கள் மற்றும் ஆயுதங்களையோ அல்லது ஆயுதமாகப் பயன்படக் கூடிய பொருட்களையோ எடுத்துச் செல்பவர்களையும் தண்டிக்க உரிமை பெற்றிருக்கிறார்.'' இச் சட்டப்படி, இராணுவம், எந்தவொரு தங்கும் இடத்தையும், அங்கிருந்து ஆயுதத் தாக்குதல் நடத்தப்படும் என்றோ அல்லது குற்றங்களுக்காகத் தேடப்படுபவர்கள் தங்குவதற்குப் பயன்படுத்தும் இடம் என்றோ கருதினால், அதை அவர்கள் அழிக்க உரிமை வழங்குகிறது. ஒருவர் குற்றத்தைச் செய்யக் கூடியவர் என்ற நியாயமான சந்தேகம் ஏற்பட்டால் தேவையான படைபலத்

படிப்பகம்

www.padippakam.com



தைக் கொண்டு, கைது செய்வதற்கான உத்திரவு (வாரண்ட்) இன்றியே அவரைக் கைது செய்ய இச்சட்டம் அனுமதிக்கிறது.[87a]

வடகிழக்கு மற்றும் ஜம்மு-காஷ்மீர் பகுதிகளில் நீண்ட காலமாக, "ஆக்கிரமிப்பு இராணுவம்" நிறுத்தப்பட்டிருக்கிறது. அவை தேசிய இனங்களின் சுதந்திரத்திற்கான போராட்டங்களை எதிர்த்து கடுமையான, அறிவிக்கப்படாத யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன

பிரிட்டிஷ் ஆட்சியின் வாரிசுகளான, இந்திய ஆளும் வர்க்கங்களின் ஆட்சிக்கு, ஊறுவிளைவிப்பதாகத் தோன்றும் மக்களின் எழுச்சிகளை, அடக்கி ஒடுக்க அரசியல் சட்டத்தில் ஏராளமான வழிமுறைகள் உள்ளன. இந்தியாவின் பல்வேறு தேசங்களின் தேசிய இனங்களின் எழுச்சியை அடக்கி ஒடுக்க, ஆளும் வர்க்கத் திறகு உதவும்படியாகவே இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப் பட்டு உள்ளது. அதன் தாராளமான ஜனநாயக பாவனைகளை ஒதுக்கிவிட்டுப் பார்ப்போமேயானால், இவ் அரசியல் சட்டம் யதார்த்தத்தில், ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ நலன்களுக்குச் சேவை செய்யவும், இந்திய தரகு முதலாளிகளின் மிகப் பெரிய வளர்ச்சிக்குப் பங்காற்றவும் விரும்பும், மத்தியத்துவப்படுத்தப் பட்ட, எதேச்சாதிகார அரசின் அரசியல் சட்டமேயாகும்.

1942இல் இந்திய அரசியல் சட்டத்தை வரைவுசெய்ய உருவாக்கப்பட்ட, அரசியல் நிர்ணய சபை, "வைஸ்ராய் மற்றும் பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழு" முன்வைத்த கோட்பாடு களின்படி தான் உருவாக்கப்பட்டது. வயது வந்தோர் ஓட்டுரிமை அடிப்படையில் தேர்தல் மூலம்—பல முறை காங்கிரஸ் தலைவர்கள் கூறியதுபோல்—அமைக்கப்படவில்லை. மாறாக, மாகாண சட்ட சபைகளின் உறுப்பினர்களால் ஒற்றை மாற்று ஓட்டு முறையில் அமைக்கப்பட்டது. முஸ்லீம் உறுப்பினர்களும் முஸ்லீம் அல்லாதவர்களும் தனித்தனியாக ஓட்டளித்தனர்.

இத்தகைய மாநில சட்டசபைகள் 1935ஆம் ஆண்டு இந்தியச்சட்டப்படி மத வாக்காளர்களின் குறைவான வாக்களிப்பின் அடிப்படையில் அமைந்தது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். நேரடி காலனி ஆட்சியின் அணையும் ஜோதியாக, இந்தியாவின் அரசியல் நிர்ணய சபை வைஸ்ராய், கவர்னர் ஜெனரல் ஆகிய இருவராலும் கூட்டப்பட்டு 1946 டிசம்பர் முதல் பணியாற்றத் தொடங்கியது. காலனி ஆட்சியிலுள்ள அல்லது சுதந்திர ஆட்சியின் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தியதாக இந்த அரசியல் நிர்ணய சபை இருக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பல்வேறு மாநிலங்களின் தேசிய உணர்வுகளை கொன்றழிக்கவும் ''இந்திய தேசியத்தை'' ஊட்டி வளர்க்கவும், இந்திய பெருந்தரகு முதலாளிகளும், அவர்களது அரசியல் பிரதிநிதிகளான காங்கிரஸ் தலைவர்களும், இந்தியை அகில இந்திய மொழியாகவும், தேவ நாகரி எழுத்துகளை அகில இந்திய எழுத்து வடிவமாகவும் வெகு நாட்களாகப் பரப்பி வந்தனர். மற்றைய எழுத்துகளை அழித்துவிட வேண்டும் என்பது அவர்களது நோக்கமாக இருந்தது.[88] ''இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக தேவநாகரி எழுத்துகளில இந்தி இருக்கும்'' என்பதை எப்படியோ அரசியல் சட்டத்திலும் புகுத்தி விட்டனர். இவ்வாறே பிறவற்றையும் செய்தனர்.

தேசிய இனங்களின் உரிமைகளைப் பறிக்கவும், இந்தியப் பெருமுதலாளிகள் மற்றும் ஏகாதிபத்திய மூலதனத்தின் அரசியல் பொருளாதார மேலாதிக்கத்தை நிறுவவும் 'வளர்ச்சித் திட்டங்கள்' ஒரு செயல் ஊக்கமுள்ள கருவியாக மற்ற கருவிகளைவிடப் பயன்பட்டது.

இந்தியத் தரகு பெருமுதலாளிகளுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் ''இந்திய தேசியம்'' பெரிதும் பயன் உடையதாக இருந்தது. ஆட்சி மாற்றத்திற்கு முன்பு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய ஒற்றுமையை பாதுகாக்க சாதகமாக இருந்தது. ஒரு ஒன்றுபட்ட இந்தியா, தங்களது உலக அரசியல், பொருளாதார, இராணுவ போர் தந்திர திட்டங்களை நிறைவேற்ற தேவையென்பதை அவர்கள் உணர்ந்து விரும்பினர்.[89] பிரிட்டிஷ் மூலதனத்தினிடையே வளர்ச்சி அடைந்த இந்தியப் பெரு முதலாளிகள் தங்களது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள ஒருங்கிணைக்கப்பட்ட இந்திய அரசு இருக்க வேண்டுமென்று விரும்பினர். ஒரு வலுவான மைய அரசை அவர்கள் விரும்பினர். அதை வைத்து பல்வேறு தேசியப் பகுதிகளின் மீது முழு ஆதிக்கம் செலுத்தவும், உண்மையான தேசிய இன சக்திகளை ஒடுக்கவும், பல்வேறு இந்திய தேசங்களின், தேசிய இனங்களின் எழுச்சியை அடக்கவும், அவர்களிடமிருந்து கிளம்பும் சக்தி வாய்ந்த எதிர்ப்புகளை சரியான முறையில் கையாளவும் முடியும் என்று கருதினர். இரண்டாவதாக, இந்தியப் பெருங்கடல் பகுதியில், ஆங்கிலோ அமெரிக்க ஆட்சிகளின் துணை 'பங்காளிகளாக, பகுதி அதிகாரத்தைப் பெற விரும்பினர். இந்திய தேசியமும், வலுவான மைய அரசும் அவர்களது விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள தவிர்க்க முடியாதவைகளாயின.

படிப்பகம்

www.padippakam.com



## 'வல்லரசு' நோய் அச்சுறுத்தல்

இரண்டாம் உலகயுத்தம் முடியும் தருவாயில், இந்தியப் பெருமுதலாளிகள் தங்களது ஒளிமயமான எதிர்காலத்தைக் கண்டனர். போர் காலங்கள் மக்களுக்கு மிகுந்த இன்னல்களைக் கொடுத்தாலும், பெருமுதலாளிகளுக்கு அவை பொற்காலங் களாக இருந்தது பிரிட்டன், அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளைப் போலன்றி யுத்த காலத்தில் இந்தியாவில் தொழிற் சாலைப் பொருட்களின் விலை முழுமையாக கட்டுப்பாடின்றி இருந்தது [90] யுத்தகால தட்டுப்பாடுகளையும், யுத்த இயந்திரங் களின் தேவைகளை நிவர்த்தி செய்வதையும் வாய்ப்பாகக் கொண்டு, கற்பனைக்கு எட்டாத அளவு லாபத்தை இவர்கள் சம்பாதித்தனர். யுத்தம் அவர்களுக்கு தங்க மழை பொழியச் செய்தது.

மறுபுறம், யுத்த முடிவில் ஜப்பான் தோல்வியடைந்தது. பழைய ஏகாதிபத்தியங்களான பிரான்சு, நெதர்லாந்து போன்றவை தங்களது அதிகாரங்களையும் மதிப்பையும் இழந்தன சீனாவில் மிகக் கடுமையான உள்நாட்டு யுத்தம் தொடங்கியது. இது இந்தியப் பெரு முதலாளிகளின் பசியைத் தணித்தது. அவர்கள், தெற்காசிய நாடுகளை மட்டும் மேலாதிக்கம் செய்யும் கனவிலிருந்து, இந்தியப் பெருங்கடல் பகுதி முழுவதையும் பேராதிக்கம் செய்யும் பெருங் கனவில் திளைத்திருந்தனர்.

ஜவஹர்லால் நேரு, அவர்களது விருப்பங்களுக்கு குரல் கொடுத்தார். தேசங்களின் சுயநிர்ணய உரிமையை மிகக் கடுமை யாக எதிர்த்தவர் நேரு. அகமத நகர் கோட்டையிலிருந்து கொண்டு அவர் கூறியதாவது:

"...இந்தியா ஒரே தேசமா அல்லது இரண்டா அல்லது மூன்றா என்பது உண்மையில் முக்கியமல்ல. ஏனெனில் **தேசிய இனங்களின் நவீன எண்ணம் மாநிலங்களாகப் பிரிவதிலிருந்து ஏறக்குறைய முழுமையாக விலகியிருக்கிறது. தேசிய அரசு என்பது இன்று தனித்திருக்க முடியாத அளவிற்கு மிகச் சிறிய அலகாக உள்ளது**" [91] "சிறிய தேசிய மாநிலங்கள் மறைந்து கொண்டிருக் கிறது. வேண்டுமானால் சுதந்திர அரசியல் அலகுகளாக இல்லாமல், கலாச்சார, சுயாட்சி பகுதிகளாக இருக்கலாம்"[92] என்றும் அவர் கூறினார்.

www.padippakam.com



''சிறிய தேசங்களின் காலம் கடந்த காலமாகியதால் ஹிட்லரை தலைவிதியின் ஏஜெண்ட்''[93] என புகழ்ந்தார் நேரு. (தான் வளர்த்த நெருப்பில் வெந்து செத்தான் ஹிட்லர். ஆனால் நேரு சொன்னச் சிறிய தேசங்கள் நிலைத்து வளம் பெற்றுள்ளன.)

''இந்சியக் கூட்டமைப்பில் இருந்து அல்லது ஒன்றியத்தில் இருந்து நன்கு கட்டமைக்கப்பட்ட பகுதிகள் பிரிந்து செல்லும் உரிமை முன் மொழியப்பட்டு, அதற்கு ஆதாரவாக சோவியத் குடியரசு (U.S.S.R) உதாரணம் காட்டப்பட்டு வாதமிடப்பட்டது. அந்த வாதம் செயல் முறைக்கு ஒவ்வாதது, ஏனெனில் அங்குள்ள சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டது. அத்தகைய உரிமைக்கு செயல் முறை மதிப்பு கிடையாது.''[94] என்று நேரு கூறினார்.

''மத்திய கிழக்கிலிருந்து தென்கிழக்கு ஆசியா வரைக்கும் வல்லரசு நாடுகளின் மையமாகி, பசிபிக் பகுதியில் ஒரு முக்கிய மான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது இந்தியாவின் தலைவிதியாக இருந்தது''[95] என்றார் அவர்,

''நவீன உலகில், ஆசியாவின் மையப் பகுதியாக இந்தியா இருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகத் தோன்றுகிறது. (இதில் பசிபிக் பெருங்கடல் பகுதியிலுள்ள ஆஸ்திரேலியாவும். நியூஸிலாந்தும், கிழக்கு ஆப்பிரிக்காவும் கூட அடங்கும்) ...ஒரு மாபெரும் கூட்டமைப்பின் மையமாக இந்தியா விளங்கப் போகிறது''[96] என்று நேரு உறுதிக்படக் கூறினார்.

''இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தை அரசியல், பொருளா தார ரீதியில் மேலாதிக்கம் செலுத்தும் வாய்ப்பு இந்தியாவிற் குள்ளது''[97] என்று அவர் வலியுறுத்தினார்.

''ஆசியாவின் பல பகுதிகள் இந்தியாவின் நீண்டகால ஆளுமைக்குட்பட்டிருந்ததையும், அதன் நாகரிகமும், கலாச்சார மும் நீண்டு பரவி இருந்ததையும்''[97] நினைவுகூர்ந்தார். 1945 ஆகஸ்ட்டில் ''இந்தியா, ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான், பர்மாவை உள்ளடக்கிய தெற்காசிய கூட்டமைப்பை நான் விரும்புகிறேன்... இன்றைய உலகில் இரு வல்லரசுகள்தான் உள்ளன. ஒன்று ருஷ்யா மற்றொன்று அமெரிக்கா. நாளைய உலகில், இன்னும் இரு வல்லரசுகள்— இந்தியாவும், சீனாவும்— இருக்கும். ஐந்தாவது இருக்காது.''[99] என்று நேரு சூளுரைத் தார்.

'இடைக்கால அரசு' என்றழைக்கப்பட்ட, வைஸ்ராயின் நிர்வாகக்குழு துணைத் தலைவராக நேரு இருந்த போது, 1946

www.padippakam.com



அக்டோபரில், இராணுவ அதிகாரிகளிடம் பேசும் போது, ''உலகிலுள்ள நான்கு பெரும் ஆட்சிகளில் இன்று இந்தியாவும் ஒன்று. மற்ற மூன்றும் ருஷ்யா, அமெரிக்கா, சீனா. வளங்களைப் பொறுத்த மட்டில் சீனாவை விட இந்தியா அதிக சக்தியைக் கொண்டிருக்கிறது''[100] என்று கூறினார். இதையே பல பேச்சுக்களிலும், அறிக்கைகளிலும் திரும்பத் திரும்பக் கூறி, ''உலகின் மிகப் பெரும் சக்தியாக இந்தியா தோன்றும்''[101] என்றும் கூறினார். பட்டேலும் இவ் வல்லரசு நோயினால் பாதிக்கப்பட்டார். ''இந்தியா வலிமை பெற்று ஆசியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்கட்டும். **அது அதனுடைய உரிமை**''[102] என்று கூறினார் படேல். காந்தியும், 'இந்துஸ்தானி ஆசியா முழுமைக்குமான மொழியாக வேண்டும்''[103] என விரும்பினார்.

''பாகிஸ்தான் நிலைத்திருக்காது. இந்தியாவுடனே சேர்ந்து விடும்''[104] என்று காங்கிரஸ் தலைவர்கள் நிச்சயமாக நம்பினர ''(இன்றைய இலங்கை) சிலோனும் இந்தியாவின் ஒரு பகுதிதான். இந்தியக் கூட்டமைப்பின் சுயாட்சிபெற்ற அலகாக அது இருக்க வேண்டும்''[105] என்று நேரு விரும்பினார்.

மேலும் அவர், ''பெயரளவிற்கு சுதந்திர நாடாக இருப்பினும், நேபாளம் கூட இந்தியாவின் ஒரு பகுதி தான்''[106] என்று கூறினார். நேருவின் நண்பரும், இந்தியாவில் இரு தடவைகள் அமெரிக்க தூதராகவும் இருந்த செஸ்டர்பவுல் ''நாங்கள் இரு கண்டங்களில் பரந்த அளவில் செய்ததை இந்தியா சிறிய அளவில் நேபாளத்தில் செய்துள்ளது''[107] என்றார்.

''நாகலாந்து பிரதேசம் இந்தியா, சீனா இரு நாடுகளுக்கு மிடையில் உள்ளது தவிர்க்க முடியாதது. நாகா பிரதேசம் இந்தியாவின், அஸ்ஸாம் பகுதியோடு இணைந்திருக்க வேண்டும்''[108] என்று நாகலாந்தைப் பற்றி நேரு எழுதினார். 19ஆம் நூற்றாண்டின் எழுபதுகளின் மையத்திலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி ஒரு ''முன்னேறிச் செல்லும் கொள்கையை ''கடைப்பிடித்தது. நாகா பிரதேசத்தின் மைய்யப் பகுதியை ஆக்கிரமித்து, 'நாகா மலை மாவட்டத்தை' உருவாக்கியது. நாகா மலை மாவட்டத்தின் உள்விவகாரங்களில் தலையீடு செய்வதை பிரிட்டிஷ் ஆட்சி தவிர்த்து வந்தது. இதையடுத்து நாகாக்கள் வாழ்ந்த, திபெத் பர்மா எல்லைப் பகுதிகளை நிர்வகிக்காமல் விட்டு விட்டது. பிரிட்டிஷ் ஆட்சி சென்ற பின்னரும், விரிவாக்க நோக்குடைய இந்திய ஆளும் வர்க்கங்கள், நாகர்கள் தங்களது தலை

படிப்பகம்

www.padippakam.com



விதியைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ள அனுமதிக்க வில்லை. நாகா பிரதேசம் முழுவதையும் இணைத்துக் கொள்ள விரும்பினர். 1951 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆம் நாள், குழுவின் பிரதான நேர்முக உதவியாளர், நாகா தேசியக் கவுன்சிலின் தலைவர் ஏ. இசட். ஃபிஸோவுக்கு, ''**இந்தியாவின் ஏப்பகுதி மக்க ளும், சுதந்திரமான மாநில அரசு கோருவதை, இந்திய அரசாங்கம் அனுமதிக்காது**''[109] என்று எழுதினார். நாகர்கள் எப்போதுமே இந்தியாவின் ஒரு பகுதியாக இல்லாமலிருப்பினும், நேருக்கள் மேற்சொன்னதையே. தங்களின் நாகா பிரதேச இணைப்பிற்கு, சாக்காகக் கூறி வந்தனர்.

ஜம்மு - காஷ்மீரையும் இந்திய ஆளும் வர்க்கங்கள அபகரிக்க முயன்றன. நேருவின் நண்பரும், நம்பிக்கைக்குரியவரும், அடிக்கடி அவரது தூதுவராகவுமிருந்த, வி. கே. கிருஷ்ணமேனன் ''பிரிட்டிஷ் ஆட்சி முடிந்தவுடன் சுதந்திர உலகின்' நலனுக்காக ஜம்மு - காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்து விடும்'' என்று வைஸ்ராய் மௌன்ட் பேட்டனுக்கு கடிதம் எழுதினார். (இவர் கூறும் 'சுதந்திர உலகம்' ஏகாதிபத்தியமும் அவர்களது கூட்டாளி களும் மேலாதிக்கம் செலுத்தும் உலகம்). மௌன்ட்பேட்டன் காஷ்மீருக்குச் சென்று அதன் மகாராஜாவையும் பிரதமரையும் சந்திப்பதற்கு முன்னர்; ஜூன் 17 ஆம் நாளிட்ட நேருவின் கடி தத்தைப் பெற்றார். அதில் காஷ்மீர் மாநிலத்தில் முஸ்லீம்கள் 77.11 சதவீதம் உள்ளனர் என்று குறித்து, ஆகவே அது இந்தியா வுடன்தான் இணையவேண்டும்'' என்றும் கூறியிருந்தார். ''பாகிஸ் தானுடன்தான் இணையவேண்டுமென்பதற்காக காஷ்மீர் தள்ளப் படுமானால், அதில் ஏராளமான இன்னல்கள் ஏற்படும். ஏனெனில் காஷ்மீரின் தேசிய மாநாட்டுக் கட்சி, இதற்கு ஆதரவளிக்காது. மேலும் மகாராஜாவின் நிலையும் தர்மசங்கடமாகிவிடும்'' என்று வாதிட்டார். '**மிகத் தெளிவான, யதார்த்த வழி என்னவெனில்,' காஷ்மீர் இந்தியாவுடன்தான் இணையவேண்டும்...** அவ்வாறு இணைந்தால் பாகிஸ்தான் தொந்தரவு கொடுக்கும் என்று எண் ணுவதே மடத்தனம்''[111] என்றார் நேரு. மகாராஜாவிற்காக சோசலிச நேரு வடித்த முதலைக் கண்ணீர் பிரமாதமானது. (இந்த மகாராஜாவின் மூதாதையர் குலாப் சிங்கிற்கு காஷ்மீரை அதன் மக்களோடு சேர்த்து ரூ. 75 லட்சத்திற்கு பிரிட்டிசார் விற்ற னர்.) நேருவின் கணக்குப்படி ஜம்மு - காஷ்மீர் அரசுக்கு இரு மாற்றுகள் உள்ளன. ஒன்று, நேருவின் விருப்பப்படி இந்தியா வுடன் இணைதல் அல்லது பாகிஸ்தானுடன் இணைதல். காஷ்மீர் சுதந்திரமான, தனிநாடாக இருக்க அனுமதிக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



1944 மாநாட்டில் சேக் அப்துல்லா தலைமை தாங்கிய தேசிய மாநாட்டு கட்சி நிறைவேற்றிய 'புதிய காஷ்மீர்' அறிக்கைப்படி ''கிழக்கின் சுவிஸ்ஸர்லாந்து இருப்பது போல் வருங்கால ஜம்மு-காஷ்மீர் அரசானது ஒரு சுதந்திரமான கூட்டமைப்பாக இருக்க வேண்டும்''[112] என்று கூறியது. தேசிய மாநாட்டுக் கட்சி உடனடியாக மகாராஜா காஷ்மீரை விட்டு வெளியேற வேண்டும் என்ற முழக்கத்தை முன்வைத்து, மகாராஜாவின் எதேச்சதிகார ஆட்சிக்கு எதிராக போராட்டங்களை நடத்தியது.

1946 மார்ச்சு மாதம் இந்தியாவிற்கு வந்த அமைச்சரவை குழுவிடம், அமிர்தசரஸ் ஒப்பந்தப் பிரச்சினையை எழுப்பி(இதன் படிதான் ஜம்மு - காஷ்மீர் குலாப் சிங்கிற்கு விற்கப்பட்டது) ''ஜம்மு - காஷ்மீர் அதன் மக்களால் தான் ஆளப்பட வேண்டுமென்ற''[113] கோரிக்கையை முன் வைத்தது. ''இன்று காஷ்மீர் மக்களை பிரதிநிதித்துவ ஆட்சி அமைப்பு மூலம் சமாதானப்படுத்த முடியாது. அவர்கள் சுதந்திரத்தை விரும்புகிறார்கள். மகாராஜாவின் எதேச்சதிகாரத்திலிருந்து முழுமையான விடுதலையை கோருகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சி முடிவுக்குப் பின் காஷ்மீர் சுதந்திரமடைவதற்கு உரிமை உண்டு. காஷ்மீரிகளாகிய நாங்கள் எங்களது தலைவிதியை நிர்ணயித்துக் கொள்கிறோம்'' என்று ஷேக் அப்துல்லா அமைச்சரவை குழுவிற்கு தந்திமூலம் தெரிவித்தார்.

தேசிய மாநாட்டுக் கட்சியின் கோரிக்கையால் அதிருப்தியடைந்த நேரு, அசப் அலியுடன் ஸ்ரீநகர் சென்று, அங்கு சிறையிலிருந்த ஷேக் அப்துல்லாவை சந்தித்து முடியாட்சியை ஒழிக்க வேண்டுமென்ற தேசிய மாநாட்டுக் கட்சியின் கோரிக்கையை திரும்பப் பெற கோரினர்.[114] இருப்பினும், தேசிய மாநாட்டுக் கட்சியின் ஊழியர்கள், தொழிலாளர்கள், காஷ்மீர் மக்களின் மீதான மகாராஜாவின் காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறை அப்போதும் தொடர்ந்தது. 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள பிரிட்டிஷ் ஆட்சி முடிவுற்ற போது மௌன்ட் பேட்டன்[115] மற்றும் காங்கிரஸ் தலைவர்களின்—காந்தி உட்பட, வற்புறுத்தலுக்கு[116] மகாராஜா பணியாமல் பாகிஸ்தானுடனோ அல்லது இந்தியாவுடனோ இணைய மறுத்து விட்டார். மகாராஜாவும், அவரது பிரதமரும், காஷ்மீர் தனித்து சுதந்திர நாடாக இருக்கும் என்ற எண்ணத்தில் இருந்தனர். அப்போதைய காஷ்மீர் பிரதமர் ஆர். சி காக் ஐ நீக்கிவிட்டு, மேஜர் ஜெனரல் ஜானக் சிங்கும், அவருக்குப்பின், சர்தார் படேலின் நம்பிக்கைக்குப் பாத்திரமான, பஞ்சாப் எல்லைக் கமிஷனின் காங்கிரஸ் உறுப்பினரான எம்.சி.

www.padippakam.com



மகாஜனும் பிரதமரானார்கள். ஜானக் சிங்கின் மகன் லெப்டி-னன்ட் கர்னல் கே. எஸ். கோடக், இந்திய இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஜம்மு — காஷ்மீர் படைத்தளபதியாக நியமிக்கப்பட்டார். பாகிஸ்தான், காஷ்மீர் எல்லைகளில் பிணக்கு ஏற்பட்டது. பாகிஸ்தானின் குற்றச்சாட்டுகளை காஷ்மீர் மறுத்து ஒரு பாரபட்சமற்ற விசாரணை கோரியது. பாகிஸ்தானும் ஒப்புக்கொண்டது. காஷ்மீரும், பாகிஸ்தான் எல்லையில் தொல்லை தருவதாக குற்றச் சாட்டுகளைக் கூறியது. இணைந்த விசாரணை நடைபெற வில்லை. அக்டோபர் இறுதியில், பதன் பழங்குடிகள் பாகிஸ்தான் உதவியோடு, காஷ்மீரை முற்றுகை இட்டனர். இந்தியாவின் உதவியைக் கோரிய மகாராஜா, காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க ஒப்புதல் அளித்தார். பதன் பழங்குடிகள் முற்றுகையை முறியடிக்க இந்தியத் துருப்புகள் காஷ்மீருக்குள் நுழைந்தன. பல மாதங்கள் நடைபெற்ற போருக்குப் பின் சமாதானம் ஏற்பட்டது. காஷ்மீரின் வடமேற்குப் பகுதியில் பெருமளவு பாகிஸ்தான் வசமும், பிற பகுதிகள் இந்தியா விடமும் இருந்தன.

1947 செப்டம்பர் மாதம், மகாராஜாவின் சிறையிலிருந்து விடுதலையான ஷேக் அப்துல்லாவும், தேசிய மாநாட்டு கட்சியின் தொண்டர்களும் (இந்தியத் துணைக் கண்டத்தில் மதவாத மென்ற நச்சுப் புகை நிறைந்து இந்தியா துண்டாடப்பட்டிருந்தும்) மதச் சார்பற்றவர்களாக இருந்து ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்தனர், பாகிஸ்தானோடு இணைய விருப்பமின்றியே இருந்தனர்.

சந்தேகத்தை நீக்கி, பெரும்பான்மையான முஸ்லிம் மக்களை இந்தியாவிற்கு ஆதரவாகத் திரட்ட, நவம்பர் 2 ஆம் நாள் நேரு, ''அமைதியும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்பட்டவுடன், காஷ்மீர் இணைப்பு, அம் மக்களின் பரிசீலனைக்கு விடப்படும். காஷ்மீர் மக்களின் வாதத்தை கேட்டறிய முழுமையான வாய்ப்பு அளிக்காமல், இந் நெருக்கடியான காலகட்டத்தில் எதையும் முடிவு செய்ய நாங்கள் விரும்பவில்லை. **அவர்கள்தாம் இறுதி முடிவை தெரிவிக்க வேண்டும்.** இக் கோட்பாட்டிற்கேற்றபடி தான், காஷ்மீர் இணைப்பு ஒப்பந்தத்தில், வழி வகைகளை செய்துள்ளோம்''[117] என்று அறிவித்தார்.

நவம்பர் 25 ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணயசபையில் ''நமது நேர்மையை நிலைநாட்ட, காஷ்மீர் மக்கள் அவர்களது

இ—4

படிப்பகம்

www.padippakam.com



வருங்காலத்தை தீர்மானிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளார்கள். அது ஐக்கிய நாடுகள் சபை போன்ற சார்பற்ற நடுவர்மன்றங்களின் மேற்பார்வையில் நடைபெற வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளோம்''[118] என்று அறிவித்தார்.

மீண்டும் 1947 டிசம்பர் 31ஆம் நாள், நேரு அரசு, ஐக்கிய நாடுகள் சபைக்கு அளித்த புகாரில், ''மாநிலத்தில் அமைதி திரும்பியவுடன்'' அம்மாநில மக்கள் தங்கள் விதியை தாங்களே சுதந்திரமாக தீர்மானிப்பார்கள். அவர்களது முடிவே, பொதுவான ஜனநாயக வழிமுறையான ஓட்டெடுப்பாக ஏற்றுக் கொள்ளப்படும்'' என்று உறுதியளித்தது ''சுதந்திரமான, நியாயமான ஓட்டெடுப்பிறகு உத்திரவாதமளிக்க, ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வை தேவைப்படும்'' என்றும் அறிவித்தார். இந்த வாக்குறுதியை இந்திய அரசாங்கத்தின் சார்பாக, நேரு, பல தடவைகள் கூறியுள்ளார்.

1952 ஆகஸ்ட் 7ஆம் நாள் இந்தியப் பாராளுமன்றத்தில் பேசும்போது. ''ஆயுத பலத்தின் உதவியோடு, அவர்களது விருப்பமின்றி, மக்களை வென்றெடுக்க நாம் விரும்பவில்லை. ஜம்மு காஷ்மீர் மக்கள் நம்மிடமிருந்து பிரிந்து செல்ல விரும்பினால் அவர்கள் வழியில் செல்லட்டும். நாம் நமது வழியில் செல்வோம். கட்டாயக் கல்யாணத்தை, இணைப்பை நாம் விரும்பவில்லை. இப்பெரும் இந்தியக் குடியரசு, சுதந்திரமான, விருப்பமுடன் நேசத்தோடும், பாசத்தோடும் கூடிய இந்திய மாநிலங்களின் ஒருங்கிணைப்பாகவே இருக்க விரும்புகிறோம்'' என்று நேரு கூறினார்.

சந்தேகத்திற்கு இடமின்றி இது ஒரு உயர்வான எண்ணம் தான். சிறந்த வார்த்தைகள்தான்! ஆனால் இதில் ஏதாவது ஒரு சிறிய அளவிலேனும் உண்மையிருந்ததா?

சில நாட்களுக்குள்ளேயே, 1952 டிசம்பர் 25ஆம் நாள் அப்போதைய ஜம்மு-காஷ்மீர் பிரதமராக இருந்த ஷேக் அப்துல்லாவிற்கு நேரு எழுதிய கடிதத்தில் ''இந்திய ஒன்றியத்துடனான காஷ்மீர் மாநில இணைப்பு முடிந்து போன, இறுதியான நடவடிக்கை, அதை எதனாலும் இல்லாமல் செய்யமுடியாது என்பதை மக்கள் மனதிலிருத்திக் கொள்ளுமளவுக்கு நமது நோக்கங்கள் பொதுவானதாக இருக்க வேண்டும். கடந்த நான்காண்டுகளாகவே நான் இக்கருத்தை உணர்வுபூர்வமாக, குறிப்பாகக் கொண்டிருக்கிறேன். காஷ்மீரில் நடப்பவை என்னை கவலைக்குள்ளாக்கி உள்ளன. ஏனெனில் தெளிவற்ற பார்வையும், உறுதியான நோக்கமுமின்றி, சந்தேகமும், தயக்கமும் இருப்பதைக் காண்கிறேன்''[121]

படிப்பகம்

www.padippakam.com



என்று கூறியுள்ளார். கருப்பும், வெள்ளையும் போல நேருவும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியது தெளிவாகிறது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் டல்லஸ் 1953ஆம் ஆண்டு மே மாதம் டெல்லிக்கு வந்திருந்தபோது, நேருவோடு அளித்த பேட்டியில், ''ஓட்டெடுப்பைக் காட்டிலும், பிரிவினை அல்லது வேறு சில தற்காலிக ஏறபாடுகளின் மூலம் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பது பயனுள்ளதாக இருக்கும்''[132] என்று கருத்துத் தெரிவித்துள்ளார். அவரது கருத்தை ஏற்றுக் கொண்ட நேருவும், ''மாநிலத்தைப் பிரித்து மக்களையும் இந்தியா, பாகிஸ்தானுக் கிடையில் பகிர்ந்து கொள்வதில் தான் காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வு உள்ளது''[123] என்றார். ''அன்றைய நிலவரப்படியே காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள நேரு தொடர்ந்து வலியுறுத்தியதாக''[124] கோபால் கூறுகிறார். காஷ்மீர் தேசத்தின் ஒற்றுமையை அழிப்பதில் எந்தவித பாவமுமில்லை என்றே இந்திய விரிவாக்கவாதிகள் கருதினர். அவர்கள் பாகிஸ்தானோடு காஷ்மீரைப் பகிர்ந்து கொள்ளத் தயாராயிருந்தனர். ஆனால் ஜம்மு-காஷ்மீர் தனது சொந்த விதியைத் தாமே தீர்மானித்துக் கொள்ளவோ, தனது வழியில் செல்வதையோ அனுமதிக்கத் தயாராக இல்லை. நேருவினால் இந்திய மதவாத சக்திகளை சமாதானப் படுத்த முடியவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட ஷேக் அப்துல்லா, ''காஷ்மீர் சுதந்திரமடைய வேண்டும்'' என்று வெளிப்படையாகவே சூளுரைத்தார். உடனடியாக அவர் பதவி நீக்கப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டார். காஷ்மீர் மக்களின் விடுதலைப் போராட்டத்தையும், நீண்ட நாளைய விருப்பங்களையும் நசுக்க, இந்திய ஆளும் வர்க்கங்கள் காஷ்மீரி எடுபிடிகளையும், இந்திய இராணுவத்தையுமே நம்பியிருந்தனர்.

பிரிட்டிஷாரின் வாரிசுகள், அவர்கள் விட்டுச் சென்றதைக் காப்பாற்ற வேண்டும் என்பதோடு, வளப்படுத்தவும் விருப்பம் கொண்டிருந்தனர். ஆட்சி மாற்றத்துக்கு முன்பிருந்தே, இலங்கை, நேபாளம், நாகா பிரதேசங்கள், ஜம்மு-காஷ்மீர் மீது மட்டுமின்றி, அஸ்ஸாமை கடந்த வடகிழக்குப் பிரதேசங்கள் மீதும் தங்களது கழுகுப் பார்வையை பதித்திருந்தனர் வைஸ்ராயின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், இந்திய அரசின் வெளிவிவகாரத்துறைபொறுப்பையும் நேரு ஏற்றிருந்தபோது 1947 ஏப்ரல் 8ஆம் நாள், அத்துறையின் துணைச் செயலாளர், சிக்கிமின் அரசியல் அதிகாரிக்கு, ''இந்திய திபெத்திய எல்லையைப் பொறுத்தமட்டில், இந்தியஅரசு

படிப்பகம்

www.padippakam.com



மக்மோகன் கோட்டை ஏற்றுக் கொள்கிறது.'' என்று எழுதினார். ஆனால் அதில் 1914 ஆம் ஆண்டைய சிம்லா ஒப்பந்தம் பயனற்றதாகக் குறிப்பிட்டிருந்தார்.[126] அதே ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் இந்திய வெளிவிவகாரத்துறை பிரிட்டிஷ் அரசுததுறை செயலருக்கு ''திபெத்தில், இந்திய அரசு பிரதிநிதித்துவப் படுத்த விரும்புகிறது. வருங்காலத்தில், மாட்சிமை தங்கிய தங்களது அரசு அங்கு தனிப்பட்ட தூதரகத்தை வைத்துக் கொள்ள விரும்புகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்'' என்று எழுதினார். அவர்கள் அவ்வாறு விரும்பவில்லையெனில், 'பிரிட்டிஷ் தூதுக்குழுவை' இந்தியத் தூதுக்குழுவாக எந்தவித விளம்பரமும், பிறர் கவனத்தை கவறாத வகையிலும், சீனா எந்தவித அரசியல் சட்ட விவகாரத்தை கிளப்பாமலும், மாற்றிக் கொள்ளலாம். எத்தகைய கீழ்த் தரமான நடவடிக்கைகளைச் செய்தும், திபெத்தின் அடிமை உடமையாளர்களுக்கும், சீனர்களுக்குமிடையிலான முரண்பாட்டை, இந்திய விரிவாக்க வெறி கொண்டவர்கள் பயன்படுத்திக் கொள்ள விரும்பினர்.[127]

சிலகாலங்களுக்குப் பின், சீனாவின் ஆளுமைக்குட்பட்டிருந்த இந்திய-திபெத்திய எல்லை, சந்தேகத்திற்கிடமின்றி ஏற்கெனவே குறிக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டுவிட்டதென நேரு கூறினார். 1950 நவம்பர் 20ஆம் நாள் பாராளுமன்றத்தில் பேசிய நேரு,

''பூட்டானிலிருந்து கிழக்கு நோக்கிய எல்லை முழுவதும் மக்மோகன் கோட்டினால் வரையப்பட்டு, 1914 சிம்லா மாநாட்டில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நம்முடைய வரைபடங்கள் மக்மோகன் கோடுதான் நமது எல்லை என்பதைக் காட்டுகின்றன, அதுதான் நமது எல்லை (வரைபடம் இருந்தாலும், இல்லையென்றாலும்)''[128] என்று உறுதியளித்தார்.

நிறைவேறாததாக இவர்களால் வர்ணிக்கப்பட்ட சிம்லா தனிச்சிறப்பு பேரவை, அவ்வாறு இருந்தது கிடையாது. நேரு கும்பல், தாம் எப்போதும் செய்வதுபோல், சில பொய்யானவற்றை உண்மையானதாகக் காட்ட முயன்றன. உண்மையென்னவெனில், ''எல்லை குறிக்கப்படவே இல்லை. வரைபடத்தில் வரையப்பட்ட மக்மோகன் கோடு, யாரோ ஒரு பிரிட்டிஷ் உயர் அதிகாரியால் வரையப்பட்டது. அதைத் தொடர்புடைய நாடுகள், பிரிட்டிஷ் இந்தியா உட்பட ஒப்புதலளிக்கவில்லை. தொடக்கத்திலிருந்தே சீன அரசு ஆட்சேபம் தெரிவித்து வந்துள்ளது. வைஸ்ராய் ஹார்டிஞ்சிகூட ஏற்றுக்கொள்ளமறுத்துவிட்டார்.[129]

www.padippakam.com



நேருவின் இந்த போர் நிலைபாடுதான், 1962இல் சீனா அழைப்பு விடுத்தும் கூட எந்த சமரசத்திற்கும் தயாராக இல்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

நேருவைப் போன்று படேலும் பேரரசு மனப்பான்மையே கொண்டிருந்தார். 1950 நவம்பர் 7ஆம் நாள் அவர் நேருவுக்கு ''வடக்கு, வடகிழக்கு பகுதியிலுள்ள வரையறுக்கப்படாத எல்லையும் நமது பகுதியிலுள்ள மக்களின் திபெத்திய—சீன சேர்க்கையும் நமக்கும், சீனாவிற்குமிடையே, பிணக்கை உருவாக்கும் திறன் கொண்டவைகளாகும். நமது வடக்கு, வடகிழக்கு பகுதிகளான நேபாளம், பூடான், சிக்கிம், டார்ஜிலிங் பகுதி, அஸ்ஸாமின் மலை ஜாதி பகுதிகளிலுள்ள மக்கள் இந்தியாவிற்கான அர்ப்பணிப்பையோ, விசுவாசத்தையோ கொண்டிருக்கவில்லை.'' என்று எழுதினார். ''நமது வடக்கு— வடகிழக்கு எல்லைப் பிரதேசங்களை வலுப்படுத்த, அரசியல், நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்'' என்று முன் மொழிந்தார். ''இதில் நேபாளம், பூட்டான், சிக்கிம், டார்ஜிலிங் மற்றும் அஸ்ஸாமின் மலை ஜாதி மக்கள் வாழும் பகுதிகளும் அடங்கும்''[130] என்றார்.

வருங்காலத்தில் இந்தியாவிற்கு எதிராக சீனா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக, நம் பாதுகாப்பை வலுப்படுத்தும் சாக்கில், இந்தியாவின் மேலாதிக்கம் நேபாளம், சிக்கிம், பூட்டான், டார்ஜிலிங் அஸ்ஸாமின் பழங்குடியினர் பிரதேசம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றார்.

இந்திய ஆளும் வர்க்கங்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்குள்ளும், வெளியேயுமுள்ள தேசங்கள் விடுதலை பெற இடைஞ்சலாக இருந்தன. தெற்காசியாவின் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரிப்பதாக அவர்களின் பேச்சாளர்கள் கூறியபோதும் அவர்கள் யதார்த்தத்தில் ஏகாதிபத்திய அணியைச் சேர்ந்தவர்களே. மக்களை ஏகாதிபத்திய நுகத்தடிக்குள் பூட்டி வைக்க, தம்மாலியன்ற அனைத்தையும் செய்தார்கள்.

1947 மார்ச்சு 3ஆம் நாள் FICCIயின் ஆண்டுக் கூட்டத் தொடக்க உரையில், நேரு, ஆஸ்திரேலியாவின் வெளி விவகார அமைச்சர் ஹெர்பர்ட் ஈவாட்டின் திட்டத்தை வரவேற்றார். ''தென்கிழக்கு ஆசியா மற்றும் மேற்கு பசிபிக் பிராந்திய மக்களின் நலன்களுக்காக தகுதிவாய்ந்த பிராந்திய அமைப்பை உருவாக்குவதற்கான காலகட்டம் வந்து விட்டது'' என்று தமது உரையில் ஈவாட் கூறியிருந்தார். அவரது உரையை விமர்சித்து,

படிப்பகம்

www.padippakam.com



''ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டுக் கொள்கை புத்திசாலித் தனமானது'' என்று கூறிய நேரு, ''பிணைத்துக் கட்டப்பட்டுள்ள இப்பகுதிகளைப் பற்றிய ஆஸ்திரேலியாவின் எண்ணங்கள் சரியானவையே. அவர்களுக்குள் அரசியல் மாறுபாடுகளிருப்பினும் அவர்கள் இணைந்தே செல்லவேண்டும்'' என்று கூறினார். அவர் மேலும், ''இந்த நாடுகளுக்கு கிழக்கே, தென் கிழக்கே, தென் மேற்கேயுள்ள நாடுகளுடன் பொது அரசியல் மற்றும் பொது நடவடிக்கைகளை வளர்ப்பது பற்றி பரிசீலிக்க வேண்டும். ஏனெனில், பொருளாதார, பாதுகாப்பு காரணிகள் அரசியல் எல்லைகளையும், பிற சிந்தனைகளையும், கடந்து நிற்கிறது.'' என்று உறுதியாகக் கூறினார். ''இந்தியப் பெருவணிகர்கள் முன்னைவிட அதிக சுமையைத் தாங்கிக் கொண்டால்தான் உலக விவகாரங்களிலும், ஆசியா முழுவதிலும் ஒரு முக்கியமான பாத்திரத்தை இந்தியா வகிக்கமுடியும்'' என்று கூறினார். அந்நிய ஏகாதிபத்திய மூலதனத்திற்கு 'இந்தியாவில் இடமிருக்கிறது' என்று உறுதியளித்தார்.[181]

இப்பரந்த பிராந்தியங்களில் தங்களது ஏகாதிபத்திய நலன்களை நிலை பெறச் செய்து, பாதுகாத்து, முன்னேற்றுவதில் நெதர்லாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய சக்திகள் எத்தகைய பொருளாதார, பாதுகாப்புத் தேவைகளைப் பகிர்ந்து கொண்டுள்ளன? அவர்கள் இணைந்து பொதுவான அரசியலையும் நடைமுறைகளையும் தொடர ஏதாவது அடிப்படை உள்ளதா? பிரிட்டிஷ் டொமினியனுக்கு உட்பட்ட ஆஸ்திரேலிய வெளிறறவு அமைச்சரால் முன்மொழியப் பட்டு, நேருவால் ஆதரிக்கப்பட்ட, தெற்காசியாவிலிருந்து பசிபிக் பிராந்தியம் வரையிலான பிராந்தியக் கூட்டு யார் நலனுக்கு சேவை செய்யப் போகிறது? தகுந்த கருவியாக்கம் யாருடையது? இப்பகுதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறது என்பதும், பொருளாதார பாதுகாப்புக் காரணிகள், அரசியல் எல்லைகளையும், பிற சிந்தனைகளையும் மீறி இருக்கின்றன என்ற சாக்கில், சுவாட்டும், நேருவும் இப்பிரதேசங்களிலுள்ள தேசிய விடுதலைப் போராட்டங்களை நசுக்க, ஏகாதிபத்திய போர்வையில், ஏகாதிபத்திய தாசர்களின் பிராந்தியக் குழு அமைப்பை உருவாக்க முன்மொழிந்துள்ளனர்.

இந்தியா, காமன்வெல்த் கூட்டமைப்பில் உறுப்பினராக இருக்கும் என்ற ''வரலாற்று'' முடிவோடு, காமன்வெல்த்

படிப்பகம்

www.padippakam.com



பிரதமர்களின் மாநாடு முடிந்து 1949 ஏப்ரலில்,[182] இந்தியா வந்த நேரு, "உலகில் சில நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லவும், நமக்கு நல்லதெனக் கருதியதாலும் நாம் காமன் வெல்த் அமைப்பில் சேர்கிறோம்"[183] என்று அறிவித்தார். மீண்டும், "நமக்கு நன்மை பயக்குமென்பதில் சிறிதளவும் ஐயமில்லை தற்போதைய சூழலில் இதில் தொடர்ந்திருப்பது நமக்கு நன்மையே. **நாம் பிரதிநிதித்துவப் படுத்தும் சில முக்கிய உலகளாவிய காரணங்களுக்காகவும் இதில் தொடர வேண்டும்.** இதில் சேரவில்லையெனில் உலக நலனுக்கும், நமது நலனுக்கும் தீமை விளையும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்"[184] என்றார்.

பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா நாடுகளுடன் சேர்ந்து 'சோசலிச' நேரு எந்த உலக நலனுக்கு சேவை செய்ய விரும்பினார்? 1949—50இல் திட்டக்குழு முன்னிலையில், இந்திய இஞ்சினீயர்கள் கழகம் தெளிவாகவே அந்த 'உலக நலன்' யாது என்பதை வெளிப்படுத்தியது.

"தொழிற்துறையில் இந்தியாவை மாபெரும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டியது என்பது தொழிற்துறையில் வளர்ச்சியடைந்த பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகளின் பொறுப்பாகும். தென்கிழக்கு ஆசியாவின் நெருக்கடி சூழ்நிலைக்கு அது தேவைப்படுகிறது" என்றும், புவிக்கோளத்தின் இப்பகுதியில் எழுச்சியுற்றுள்ள கம்யூனிஸ அலையை அரணாக நின்று நிறுத்த இந்தியா ஒரு வலுவான நாடாக இருக்க வேண்டும்"[185] என்று வேண்டுகோள் விடுத்தார்.

பிரிட்டனின் ராணியையோ, அரசரையோ தலைவராகக் கொண்ட பிரிட்டன் காமன் வெல்த் கூட்டமைப்பில் இந்தியா உறுப்பினரானதை வரவேற்ற **நியூயார்க் டைம்ஸ்** இதழானது, "காமன்வெல்த்தினுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கு மட்டுமின்றி கம்யூனிஸ முற்றுகையைத் தடை செய்யவும், அட்லாண்டிக் ஒப்பந்தத்தைவிட பரந்த பாதுகாப்பு அமைப்பு தோன்றவுமான, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையாகும்"[186] என்று எழுதியது. பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம் தேசிய விடுதலைப் போராட்டங்களின் முன்னேறிய பாய்ச்சலைத்தான், அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் ஏடுகளும் இந்தியத் தரகு முதலாளிகளும் 'கம்யூனிஸ முற்றுகை' என்று வர்ணித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியப் பெரு முதலாளிகளும், அவர்களது அரசியல் பிரதிநிதிகளும் வெகு காலமாகவே ஏகாதிபத்தியங்களுடன் சேர்ந்திருக்கின்றனர். அவர்கள் உலக ஏகாதிபத்திய நலனுக்குச் சேவை செய்யவும், இந்தியாவை விட வளர்ச்சிக் குன்றிய, வலுவிழந்த ஆசிய நாடுகளின், மற்றும் ஏகாதிபத்திய பெருநகரங்களுக்கு இடையே, துணை சுரண்டலாளர் என்ற இடைத்தரகர் வேலையை செய்யவும் விரும்பினர்.

1947 ஜூன் மாதம், பிரிட்டிஷ் பேரரசின் இராணுவத் தளபதி, பீல்டு மார்ஷல் மாண்ட்கோமரி பிரபு இந்தியாவிற்கு வந்தபோது, ''இங்கிலாந்தின் மனித வளப் பற்றாக்குறையால் இந்தியாவின் கூர்கா படையை யுத்தகால அவசரத் தேவைகளுக்காக நிறுத்தி வைத்துக் கொள்ளும் தேவை இருக்கிறது'' என்று கேட்ட போது, பிரிட்டிஷ் அரசு கோரும் வசதிகளை அளிக்க கோட்பாட்டளவில் இந்திய அரசின் சார்பில் நேரு ஒப்புக் கொண்டார். இந்திய இராணுவத்தின் அங்கமாக இருந்த பல கூர்கா படைப் பிரிவுகள் பிரிட்டிஷ் அரசின் கீழ் பணியாற்ற ஒதுக்கப்பட்டன. இந்திய மண்ணில் பிரிட்டிஷார் கூர்காக்களை இராணுவப் பணியில் சேர்க்க ஆள் தேர்வு செய்வது தொடர்ந்தது. [137]

1947 பிப்ரவரியில், பாதுகாப்புத் துறையின் பரிந்துரைகளை ஏற்று, ''வியட்நாமியர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்க சென்றுகொண்டிருந்த பிரஞ்சு அரசின் 11 போர் விமானங்கள் இந்தியாவில் தங்கிச் செல்ல,'' நேரு அனுமதியளித்தார். [138]

டச்சுக்காரர்களுக்கு எதிரான இந்தோனேஷிய விடுதலைப் போராளிகளுடன் சேர்ந்து விட்ட இந்திய சிப்பாய்களை, அவர்கள் அவ்வாறு சேர்ந்த நாளிலிருந்து இந்திய ராணுவப் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டனர். அவர்களுக்கு விளம்பரம் கொடுப்பதையே நிறுத்தி விட்டனர். [139] காலனியாட்சிக்குப் பிற்பட்ட இந்தியாவின் படைப்பிரிவில் பணியாற்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும், பிற அதிகாரிகளுக்கும் ஊதிய உயர்வுகள் அளித்த போது, இந்தோனேஷிய மக்களின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற இந்தியப் படை வீரர்களுக்கும், 1946 பிப்ரவரில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த இந்திய தேசிய இராணுவம் (INA), கப்பல் படை வீரர்களுக்கும் எந்த உயர்வும் அளிக்கப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



நேரு கூறிய உலக நலனுக்குச் சேவை செய்ய 1949 ஏப்ரவில், லண்டனில் நடைபெற்ற பிரதமர்கள் மாநாட்டில் "பிரிட்டனுக்காக, இந்தியாவும், பாகிஸ்தானும், பர்மிய பொம்மை அரசிற்குப் பணமும், ஆயுதங்களும், அங்கெழுந்துள்ள வெகுஜனப் புரட்சியை நசுக்க அனுப்ப, ஏற்பாடுகள் செய்யப்பட்டன."[140]

இது போன்று பல சேவைகளை இந்திய ஆளும் வர்க்கங்கள் ஏகாதிபத்திய அரசுகளுக்குச் செய்துள்ளன. இதனால் தான் ஏகாதிபத்திய சிற்பியான வின்ஸ்டன் சர்ச்சில், ஒருமுறைக்குப் பலமுறை நேருவை "ஆசியாவின் ஜோதி" என்றான்[141]

## வரலாற்றின் போக்கு

இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்களின் மீது இந்தியப் பெருமுதலாளிகள் ஆதிக்கம் செலுத்த மொழி ஒரு முக்கியக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்திய தேசியத்தை வளர்க்கவும் துணை தேசியத்தை அடக்கவும், துணை தேசிய உணர்வுகளை அழிக்கவும் இந்திய ஆளும் வர்க்கங்கள், இந்தியாவின் பொது மொழி, தேவநாகரி எழுத்துக்களில் இந்தி தான் என்று வெகுகாலமாகக் கூறி வருகின்ற காந்தி இந்திய அரசியலில் நுழைந்ததில் இருந்து, பெருமுதலாளிகள் அளித்த நிதியைக் கொண்டு இந்தியை இந்தியாவின் அரசு மொழியாக்க, காங்கிரஸ் தலைவர்கள் திட்டமிட்ட பிரச்சாரத்தை நடத்தி வந்தனர்.[142] பெருமுதலாளிகளின் அரசியல் மற்றும் வியாபார எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ள தவிர்க்க முடியாத ஒன்றாக மொழி இருந்து வந்துள்ளது. அவர்களது திட்டங்கள் இந்து, பார்ஸி வியாபாரிகளின் நலனுக்காக ஒரு சக்தி வாய்ந்த, மைய்ய, ஒன்றுபட்ட இந்திய அரசை பெறவேண்டுமென்ற திட்டத்திற்கு ஒத்திருந்தது. இந்தியாவின் இருபெரும் சமூகங்களின் மதப் பிரிவினைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

தேவநாகரி எழுத்துக்களுடைய இந்தியை இந்திய அரசியல் சட்டம் இந்தியாவின் ஆட்சி மொழியாகத் திணித்தது. 1950 இலிருந்து அதாவது இந்திய அரசியல் சட்டம் அமுலுக்கு வரும் நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக தொடர்ந்து பயன்படுத்த அரசியல் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் சட்டம் எழுதப்படும் பொழுது—மொழிப் பிரச்சினையிலோ அல்லது வேறெந்தப் பிரச்சினையிலோ வாக்கெடுப்பு நடத்தப்படவே இல்லை. பின்வரும் காரணங்களிலிருந்து இந்திக்கு இருந்த மிக ஆழமான எதிர்ப்பை ஊகித்துக் கொள்ளலாம்.

''வெளிப்படையான விவாதமும், கலந்துரையாடலும் இந்தி எதிர்ப்பை ஒருங்கிணைத்து, இந்தித் திணிப்புத் திட்டத்தை பாழடித்துவிடும் என்பதை அறிந்து, 1947 அக்டோபரில் நகல் அரசியல் திட்டத்திலேயே **மொழி பற்றிய பிரிவுகளை** நீக்கியிருந்தனர். அதையடுத்து வெளிவந்த வெளியீடுகளிலும் சேர்க்கப்படவில்லை'' என்று செயில்க் ஹாரிஸன் எழுதுகிறார். நகல் அரசியல் சட்ட வரைவின் தலைவராக இருந்த பி. ஆர். அம்பேத்கர் நகல் அறிக்கையை பரிசீலிக்கக் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் ''இந்தி மொழிப் பிரச்சினையை குறித்த 115 ஆவது விதியைப் போன்று பிரச்சினைக்குரிய விதி வேறொன்றுமில்லை என்பதை வெளியிட்டார். மிக நீண்ட விவாதத்திற்குப்பின் ஓட்டுக்கு விடப்பட்ட போது எதிர்ப்பும் ஆதரவும் 78: 7· ஆக இருந்தது. இதை உடைக்க முடியவில்லை. நீண்ட இடைவெளிக்குப்பின் மீண்டும் ஓட்டுக்கு விடப்பட்ட போது இந்திக்கு ஆதரவாக 78 வாக்குகளும். எதிராக 77 வாக்குகளும் கிடைத்தன. ஒரு ஓட்டு வித்தியாசத்தில் இந்தி தேசிய மொழியித்தைப் பிடித்தது. அரசியல் நிர்ணய சபையில் இப்பிரச்சினை விவாதத்திற்கு வந்த போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் ''கட்சி வழிகாட்டுதலுக்கு கீழ்ப்படிய வேண்டியதாயிற்று'' [144]. அரசியல் நிர்ணய சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் காங்கிரஸ் தலைமையினால் நியமிக்கப்பட்டவர்கள்.

இந்தி பேசாத மக்களிடமிருந்து இந்தித் திணிப்பிற்கு மிகக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது. அரசியல் சட்டசபையில் விவாதத்தின் போது தமிழகத்தைச் சேர்ந்த டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் ''தெற்கில் இது ஒரு வாழ்வா சாவா பிரச்சினையாக இருக்கிறது'' [145] என்றார். மகாராட்டிராவின் சங்கர் ராவ் தியோ காந்தியோடு மிக நெருக்கமாக இருந்தவர். நீண்டகாலம் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினராக இருந்தவர். தேசிய இனங்களின் உரிமைகளை மறுத்தவர்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். ''இந்து மதவாத ஆர்.எஸ்.எஸ். தலைமையானது கலாச்சாரத்தின் பெயரால் வேண்டுகிறது! சில காங்கிரஸகாரர்களும் கலாச்சாரத்தின் பெயரால் வேண்டுகின்றனர். கலாச்சாரம் என்ற வார்த்தைக்கு என்ன பொருள் என்பதை

படிப்பகம்

www.padippakam.com



யாரும் கூறவில்லை. இன்று புரிந்து கொண்டு விளக்கப்படுவதிலிருந்து பலரைச் சிலர் மேலாதிக்கம் செய்வது தான் என்பது விளங்குகிறது.''[146] என்றார்.

அன்றிலிருந்து அரசு இயந்திரத்தையும், பெருமளவு அரசு நிதியையும் பயன்படுத்தி, சிலர், இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியைத் திணிக்க முயன்றனர். பல்வேறு தேசிய இனங்களின் கடுமையான எதிர்ப்பினால் அவர்களது நோக்கம் இன்னும் நிறை வேறாமல் இருக்கின்றது. அந்நிய மொழியான ஆங்கிலம் பெரும் பகுதி ஆட்சி மொழியாகவும், உயர் கல்வி நிலையங்களிலும் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது. இதன் விளைவாக பல்வேறு இந்திய மொழிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருப்பதோடு மக்களின் பண்பாடு, அறிவு வளர்ச்சியும் தடைப்பட்டுள்ளது.

மற்றொரு முக்கிய உண்மையாதெனில், காங்கிரசைத் தவிர, வேறெந்த அரசியல் கட்சியும், ஆளும் வர்க்கக் கட்சிகளில் அகில இந்தியத் தன்மையை பெற்றிருக்கவில்லை. காலனியாதிக்கத்தின் கடைசி பத்தாண்டுகளில் காங்கிரஸும், முஸ்லீம் லீக்கும் தான் அத்தகுதி பெற்றிருந்தன. அப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தான் அனைத்து தேசிய இனங்களின் பொது எதிரியாக இருந்தது. இந்துக்கள், குறிப்பாக மேல் ஜாதி இந்துக்கள் தேசிய இன வித்தியாசமின்றி, காங்கிரஸ் தான் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சி, மக்களைக் காலனியாதிக்க ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்கக் கூடியது என்று நம்பினர். அதனால் அதன் பின்னர் அணி திரண்டனர். அதேபோல், முப்பதுகளின் இறுதியிலிருந்து பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த பெரும்பாலான முஸ்லீம்கள், முஸ்லிம் லீக் தான் தங்களது விடுதலைக்கு இட்டுச்செல்லும்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மற்றும் இந்து மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்கும் என்ற நம்பிக்கையில் அதன் பின் அணி திரண்டனர்.

நேரடி காலனியாட்சியின் முடிவின் போது பாகிஸ்தான் மக்களிடம் முஸ்லீம் லீக் செல்வாக்கிழந்தது கிழக்குப் பாகிஸ்தானில் (தற்போதைய வங்காள தேசம்) சில ஆண்டுகளிலேயே படுதோல்வியைத் தழுவியது. இந்தியாவில், காங்கிரஸ் இன்னும் ஒரு சக்தியாக இருப்பினும் மக்களிடம் காலப்போக்கில் செல்வாக்கிழந்து வருகிறது. முஸ்லீம் லீக்கைப் போலன்றி, காங்கிரஸின் வீழ்ச்சி மிக மெதுவாக இருக்கிறது ஏனெனில் இந்தியப் பெரு முதலாளிகளின் அபரிமிதமான ஆதரவைப் பெற்றிருப்பதுதான்

படிப்பகம்

www.padippakam.com



காரணம். இருப்பினும் பல மாநிலங்களில் காங்கிரஸ் ஒரு முன்னணி அரசியல் கட்சி அந்தஸ்தை இழந்து விட்டிருக்கிறது.

காங்கிரஸ் மற்றொரு அகில இந்தியக் கட்சியிடம் தோல்வி யுறுவதற்குப் பதில், பல்வேறு தேசியப் பகுதிகளில் தோன்றியுள்ள பிராந்தியக் கட்சிகளிடம் தோற்றுள்ளது. அல்லது சில கட்சி கூட்டணிகளுடன்—அவை அகில இந்தியக் கட்சிகளாகக் காட்டிக் கொண்டாலும், சில குறிப்பிட்ட தேசியப் பகுதிகளில் தான் செல் வாக்குடனிருக்கின்றன— தோல்வியுற்றுள்ளது.

மிகுந்த அக்கறையோடு தொடர்ந்த முயற்சிகளிருப்பினும் ஆளும் வர்க்கங்கள், காங்கிரஸின் வீழ்ச்சிக்குப்பின், அதனிடத்தை நிரப்ப ஓர் அகில இந்தியக் கட்சியை கட்டமைக்க முடியவில்லை. சோசலிஸ்ட் கட்சி, கிர்ஷிக் மஸ்தூர் கட்சி, சுதந்திரா கட்சி, காங்கிரஸ் (O)கட்சி போன்றவை தங்களுக்கிடப்பட்ட பணியை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியாமல் அழிந்து விட்டன. ஜனதா கட்சியும் குறைஆயுளுடன் முடிந்து விட்டது ஜனதாகட்சி யின் தற்போதைய மறுபிறவி தான் ஜனதா தளம். அது பல்வேறு பிளவுபட்ட கட்சிக் குழுக்களுடன் கூட்டு வைத்துக் கொண்டு தன்னை நிலைநிறுத்தியுள்ளது. இந்து மகா சபாவிலிருந்து ஜன சங்கமாகி, பின் பா.ஜ.க. வானது இந்துமதவாத பதாகையைப் பிடித்துக் கொண்டு, இந்தி பேசும் மாநிலங்களில் உலா வருகிறது. பல்வேறு பாராளுமன்ற பொதுவுடமை மற்றும் சோசலிஸ்ட் கட்சிகள் இன்னும் அகில இந்தியத் தன்மையைப் பெறவில்லை. தி.மு.க., அ. தி. மு .க., தெலுங்கு தேசம், அஸ்ஸாம் கணபரிஷத் போன்றவை தங்களது சொந்த மாநிலங்களில் தேசிய இனங்களின் கோரிக்கைகளை முன்வைத்து ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளன. இன்றைய அரசியல் சூழலில், மக்கள் காங்கிரஸ் கட்சியை ஒதுக்குவது மற்றொரு அகில இந்தியக் கட்சிக்கு சாதகமாக அன்று மாறாக ,மாநில நலன்களை முதன்மைப் படுத்தி, சேவை செய்கின்ற மாநிலக் கட்சிகளுக்கு ஆதரவாகத் தான் ஒரே ஒரு அகில இந்தியக் கட்சியான காங்கிரசின் படிப் படியான வீழ்ச்சியும் மற்றொரு அகில இந்தியத்தன்மைவாய்ந்த கட்சி தோன்றாமலிருப்பதும் 'இந்திய தேசியம்' ஆழமாக வேறூன்றத் தவறிவிட்டதையும், ஆளும் வர்க்கம் அனைத்து முயற்சிகளையும் செய்தும், மரணப்படுக்கையிலிருப்பதையும் தான் காட்டுகிறது.

ஒவ்வொரு தேசிய இனமும் பிரிந்து போவதற்குரிய உரிமை யோடு கூடிய சுய நிர்ணய உரிமைக் குரலை ஓங்கி ஒலிப்பதும்,

படிப்பகம்

www.padippakam.com



அதற்கு ஆயுதப் போராட்டத்தை பின்னணியாகக் கொண்டிருப்பதும் மிக முக்கியமான ஓர் உண்மையாகும்.' சில ஆயுதப் போராட்டங்கள் பல்லாண்டுகளாக நடத்தப்பட்டு வருவதும், இந்திய அரசின் இராணுவ மற்றும் துணை இராணுவத் தாக்குதல்கள் அவர்களைப் பணியவைக்கத் தவறியதும் முக்கியமானதாகும். வடகிழக்கு இந்தியாவில் நாகர்களும், மிஸோக்களும், மணிப்பூரிகளும் தங்களது சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடி வருகிறார்கள். நேரடி காலனி ஆட்சியிலிருந்தே நாகா பிரதேசத்தின் மையப் பகுதியை பிரிட்டிஷ் அரசு அபகரித்திருந்த சில ஆண்டுகளைத் தவிர, நாகர்கள் எப்போதும் இந்தியாவின் பகுதியாக இருந்தது கிடையாது. இது நியாயமானதே. 1946இல் அரசியல் சட்ட மாற்றங்கள் நிகழ்ந்த போதே, நாகர்கள் தங்களது முழுவிடுதலை கோரிக்கையை எழுப்பினர். இந்தியத் தலைவர்களுடனான அமைதியான பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றவுடன், காலனி ஆட்சி முடிவிற்குப் பின்னும், இந்திய ஆளும் வர்க்கம் பிரிட்டிஷார் விட்டுச் சென்றதை பாதுகாப்பதோடு மட்டுமின்றி, விரிவாக்கவும் செய்த போது ஒட்டெடுப்பு செய்து சுதந்திரக் கோரிக்கையின் பின் அணி திரண்டனர் நாகர்கள். 1952இல் தேர்தலைப் புறக்கணிப்பு செய்தனர். 1953இல் ஆயுத மோதல்கள் தொடங்கின. அமைதிக் குழுவிலிருந்த அஸ்ஸாம் முதல்வர் பி. பி. சாலியா, ஜெயபிரகாஷ் நாராயண், மைக்கேல் ஸ்காட் போன்றவர்கள், நாகர்களின் பிரதேசம், சந்தேகத்திற்கிடமின்றி, தனி தேசம் தான் என்பதை ஏற்றுக் கொண்டனர். 40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய ஆளும் வர்க்கங்கள், ஒரு காட்டுமிராண்டி யுத்தத்தை நடத்துவதோடு, சுதந்திரத்தை விரும்பும் நாகர்களை அடக்க பிற தந்திரங்களையும் கையாளுகின்றனர்.

தலைவர் மாவோ கூறியது போல், ஒரு காலனியத்தில் அல்லது அரைக் காலனியத்தில், காலனிய ஒடுக்குமுறைகளும் அதை எதிர்த்தப் போராட்டங்களும் தான் தேசிய உணர்வைத் தோற்றுவிக்கின்றன. இந்திய ஆளும் வர்க்கம் தொடுத்த ஒடுக்குமுறைகள். நாகர்களின் தேசிய உணர்வுகளை வலுப்படுத்தி, பல்வேறு நாகா மலைவாழ் மக்களை இணைத்து ஒரு தேசமாக்கி உள்ளது. இந்திய அரசின் மிகப்பெரிய இராணுவத்தை ஒரு மிகச் சிறியதேசம் எதிர்த்து நின்று சவால்விட்டுக் கொண்டிருக்கிறது. இதே போன்றுதான் மிஸோக்களும், மணிப்பூரிகளும் பெரிய இந்திய இராணுவத்தை எதிர்த்து, இந்திய தேசியத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவின்

படிப்பகம்

www.padippakam.com



வடகிழக்குப் பகுதியிலுள்ள பல்வேறு சிறிய தேசிய இனங்களும் இந்திய தேசியத்தின் நுகத்தடியிலிருந்து விடுவித்துக் கொள்ள ஆயுதப் போராட்டங்களை நடத்துகின்றன.

பல பத்தாண்டுகளாக நூறாயிரக் கணக்கான இந்தியத் துருப்புகள் வடமேற்கு, ஜம்மு-காஷ்மீரில் நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் ஒத்துக் கொண்டதை எல்லாம் மறுத்து விட்டு காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்க இந்திய ஆளும் வர்க்கங்கள் முயற்சிக்கின்றன. ஆயிரக் கணக்கான இராணுவத்தினரும், துணை இராணுவத்தினரும், அனைத்து விதமானக் கொடுமைகளையும் செய்ய வரம்பற்ற உரிமையைப் பெற்று, காஷ்மீர் மக்களின் எதிர்ப்பை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துக் கொண்டிருக்கின்றனர்.

'இந்திய தேசியக் கோட்பாட்டை' மறுத்து', பல்வேறு மாநில தேசிய இனங்களின் போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. **'இந்திய தேசியத்திற்கும்' 'துணை தேசியத்திற்கு** மான மோதல்கள் நாளுக்கு நாள், மேன்மேலும் கூர்மையடைந்து, கடுமையாகி வருகின்றது. இந்திய ஆளும் வர்க்கங் களும் அவர்களது அரசு இயந்திரங்களின் செயல் தந்திரங்களும் இருப்பினும், **இந்திய தேசியம்**, முன்னேறி வரும் **துணை தேசியங் களிடம்** பின்னடைவை சந்திக்கும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, 1953 பிப்ரவரி 12 ஆம் நாள் இராஜகோபாலச்சாரிக்கு, நேரு,

''தனித்தனியான இந்தியப் பகுதிகள் குதித்து வெளியேறும் கூறுகளைக் கொண்ட இந்தியா ஒரு குழப்பமான புதிராக உள்ளது. அவர்களை சேர்த்து வைத்திருப்பது அவ்வளவு எளிதானதல்ல''[147] என்று எழுதினார்''.

மேலிருந்து ஆணைகள் மூலமோ, ஆளும் வர்க்க நலனுக் காகவோ ஒரு தேசத்தை செயற்கையாக உருவாக்க முடியாதென்பதுதான் உண்மை.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய இனங்களின் உடனடி யான வேலை, பிரிந்து போவதற்குள்ள உரிமையோடு கூடிய சுய நிர்ணய உரிமையை வென்றுடுப்பது தான். வர்க்க ஆட்சி ஒழிக் கப்பட்ட பிறகு, முழுமையான சுதந்திரம், சமத்துவத்தின் அடிப் படையில்தான். இந்த உடனடி வேலை நிறைவேற்றப்பட்ட பிறகு தான் இறுதியான இணைவும், ஒருங்கிணைப்பும் சாத்தியமாகும்.

இம்முடிவை எட்டுவதற்குமுன், பல கடுமையான யுத்தங் களை நடத்தி வெற்றி காண வேண்டி இருக்கும்.

□ □

படிப்பகம்

www.padippakam.com

# சான்றெண் குறிப்புகள்

(நூல்களின் ரோமன் எண் அதன் தொகுப்பு எண்ணிக்கையையும் அராபிய எண் அதன் பக்க எண்ணிக்கையையும் குறிக்கும்)

1. ஜவஹர்லால் நேருவின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள். தொகுப்பு ஆசிரியர் (தொ. ஆ) எஸ் கோபால் (இதற்குப் பின்பு நே. தே. ப. என்று குறிக்கப்படும்.) புதுடில்லி, XIV, 324; மேலும் பார்க்க XV, 35.

2. சேத்தி ஜே டி., ''திட்டமிடல், வெளிவிவகாரக்கொள்கை'' எக்கனாமிகல் டைம்ஸ், 7, டிச. 1989.

3. லெனின், ''புரட்சிகர பாட்டாளி வர்க்கமும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும்,'' திரட்டப்பட்ட படைப்புகள் (இனி மேல் தி. ப. எனப்படும்), மாஸ்கோ, XXI, 408 — அழுத்தம் மூலப் பிரதியில் உள்ளது.

4. Ibid, 413 — அழுத்தம் ஆசிரியருடையது.

5. மா-சே-துங், ''தேசிய யுத்தத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கு'', தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் (இனிமேல் தே. ப. என குறிக்கப்படும்), பீகிங், II, 1967.

6. லெனின், ''தேசங்களின் சுயநிர்ணய உரிமை,'' தி. ப, XX, 412, அழுத்தம் மூலப்பிரதியில் உள்ளது.

7. லெனின், ''தேசியப் பிரச்சினை மீதான விமர்சன குறிப்புகள்''. தி. ப., XX, 50.

8. லெனின், ''புரட்சிகர பாட்டாளி வர்க்கமும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும்.'' தி. ப., XXI, 410 — அழுத்தம் ஆசிரியருடையது.

9. லெனின், ''சோசலிச புரட்சியும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும்,'' தி. ப, XXII, 146 - 7.

10. லெனின், ''புரட்சிகர பாட்டாளி வர்க்கமும், தேசங்களின் சுயநிர்ணய உரிமையும்'', தி. ப, XXII, 413 — 4. அழுத்தம் மூலப்பிரதியில் உள்ளது.

11. பி. டி. ரணதிவேயால் மேற்கோள் காட்டப்பட்டது, ''மார்க்சியமும் இந்தியாவின் தேசிய இனச் சிக்கலும்'' The Marxist (புது டெல்லி), அக் - டிச, 1983, 47.

படிப்பகம்

www.padippakam.com



12. Ibid, 32.

13. Ibid, 29

14. Ibid, 20, ரணதேவ் லெனினிடம் இருந்து மேற்கோள் காட்டப்பட்டது, "நமது புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்" அழுத்தம் மூலப் பிரதியில் உள்ளது.

15. லெனின், Ibid, அழுத்தம் ஆசிரியருடையது.

16. Ibid, அழுத்தம் ஆசிரியருடையது.

17. சுனிதி குமார் கோஷ், "இந்தியாவும், பிரிட்டிஷ் ராஜ்ஜியமும் 1919 — 1947; புகழ், அவமானம், அடிமைத்தனம்" தொகுப்பு I, கல்சுத்தா. தொகுப்பு II பம்பாய், 1995, II, பகுதி 9(ப. 322 - 5)

18. மாவோ, "மக்கள் சனநாயக சர்வாதிகாரம் பற்றி', தே. ப. IV, 422, 421.

18a. மாவோ, தே. ப. I, 273.

19. லெனின், "தேசங்களின் சுயநிர்ணய உரிமை", தி. ப, XX, 412.

20. கோஷ், "இந்தியாவும் பிரிட்டிஷ் ராஜ்யமும்" II, 306 — 12.

21. பிலிப்ஸ். சி.எச்., "இந்தியாவின் பிரிவினை", லண்டன் 1970, 11-12.

22. மோரேஸ், 'ஒரு சகாப்தத்திற்கான சாட்சியம்", லண்டன், 1973, 295.

23. காந்தியின் திரட்டப்பட்ட படைப்புகள் (கா. தி. ப.) புதுடில்லி, LXXXVII, 446.

24. நே. தே. ப, XIV, 385, 300.

25. மென்சர்ங். என். (தலைமை ஆசிரியர்), பிரிட்டனுக்கும், இந்தியாவிற்கும் இடையிலான அரசியல் அமைப்பு உறவுகள்; 1942-7இல் அதிகாரத்தின் மாற்றம், I-XII, லண்டன், 1971-1982, X, 159.



படிப்பகம்

www.padippakam.com



26. மேனன் வி. பி. , இந்தியாவில் அதிகாரத்தின் மாற்றம், கல்கத்தா, 1957, 468.
27. கூப்லேண்ட், இந்தியாவில் அரசியல் அமைப்புச் சிக்கல், பகுதி III., 88.
28. கா. தி. ப. LXVII, 325.
29. சென், ராஜ்ஜியத்திலிருந்து சுயராஜ்யம் வரை, கல்கத்தா, 1954, 218
30. மார்க்ஸ், இந்தியாவில் பிரிட்டன் ஆட்சியின் எதிர்கால விளைவுகள்: கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், காலனியம் பற்றி, மாஸ்கோ, 2வது பதிப்பு, 84.
31. டிக்காவோ, இந்தியாவில் (ரசியாவில்) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் தேசியச் சிக்கலும், மாஸ்கோ, 1948, 47 சிலிக் எஸ். ஆரிஸன், இந்தியாவின் மோசமான அபாய பத்தாண்டுகள், சென்னை, 1960, 157.
32, சவுத்ரி கே.பி., இந்தியப் பள்ளிகளில் வரலாறு பற்றிய உள்ளடக்கம் (கல்வி அமைச்சகம், GOI, சுற்றறிக்கை 9, 1952), 43, ஆரிஸனின் மேற்கோள, OPcit, 83.
33. சுனிதிகுமார் கோஷ், இந்தியப் பெருமுதலாளி வர்ககம், கல்கத்தா, 1983, இந்தியாவும் பிரிட்டன் ராஜ்ஜியமும் 1919-47.
34. மொழிவாரி பிரதேசக் குழுக்களின் அறிக்கை, 1948, புது டில்லி, 1948.
35. மாநில மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கை 1955, டில்லி 1955, 16.
36. AICC பேப்பர்கள், பைல் G-66/ 1946-47 (நேரு நினைவு நூலகம், புதுடில்லி)
37. மாநில மறுசீரமைப்புக் குழு 1955, 43.
37a. மிக்கேல் ப்ரோசர், நேரு; ஒரு அரசியல் சரிதை, லண்டன், 1959, 375, 377, கோஷ், இந்தியாவும் பிரிட்டன் ராஜ்ஜியமும், II 280-4; 293-302.
37b. கோபால் எஸ், ''ஜவஹர்லால் நேரு'' II டில்லி, 1979, 267.

படிப்பகம்

www.padippakam.com



38. Diakov, opcit,45: cited in Harrison, opcit, 158.
39. ''இந்திய அரசியல் அமைப்பு நகலின் மீளாய்வு'' marxist miscellany (பம்பாய்) மே 1949, 12.
40. புது அரசியல் அமைப்பின் மீதான கம்யூனிஸ்ட் கட்சியின் மையக் குழுவின் அறிக்கை.
41. ஆரிஸன், opcit, 15.
42. மாநில மறுசீரமைப்புச் குழுவின் அறிக்கை, 1955.
43. மஜூம்தார் ஆர். சி., இந்தியாவில் சுதந்திர இயக்கத்தின் வரலாறு, II, கல்கத்தா, 1975, 27.
44. Ibid
45. இந்தியா மீது சைமன் குழு அறிக்கை, Iv, பகுதி I, டில்லி, 1988, மறுபதிப்பு, 500-2.
46. ஜீவிட் ஆலம், ''வர்க்கம் சமுதாயம், தேசிய இன உருவாக்கம்'' சமூக அறிவியல் கல்வி மையம், கல்கத்தா, 1985. 9, 57 குறிப்பு. 21.
47. மாங்கிரஸ். என், 1942-7இல் அதிகார மாற்றம், X 709,
47a. முன்ஷி கே. எம்., சுதந்திரத்திற்கான யாத்திரை, பம்பாய் 1967, 230
48. இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தேர்தல் அறிக்கை. பி. சி. ஜோஷி, 82-4, 89-90.
49. இந்தியாவின் ஆண்டு அறிக்கை, என். என். மித்ரா, 1944, II, 180-1, கா. தி. ப. Lvxxiii , 85, 89; ப்யாரிலால் ''மகாத்மா காந்தி இறுதிப் பயணம்''—I, அகமதாபாத் 1956, 89.
50. பி. சி. ஜோசி, ''அதிகாரத்திற்கான இறுதியான துணிவு மிக்க திட்டம்'' 10-11, இந்த துண்டறிக்கை 1945 இறுதி அல்லது 1946 முதலில் வெளியிடப்பட்டது.
51. ஆயிஷா ஜலால், The sole spokesman,, கேம்ப்பிரிஜ், 1985, 124.
52. மாங்கிரஸ், என். 1942-7இல் அதிகார மாற்றம் VII. 675.
53. கோஷ், இந்தியப் பெரு முதலாளிவர்க்கம்.
54. வாடியாவும் மார்செந்தும், நமது பொருளாதாரப் பிரச்சினை, பம்பாய், 1957, 503-4.

படிப்பகம்

www.padippakam.com



55. இராமன் மகாதேவன், "மலேசியாவில் செட்டியார்கள் 1880-1930 ஓர் ஆய்வு" எக்னாமிக்ஸ் அண்டு பொலிடிகல் வீக்லி, ஜன 28-I, பிப் 4, 1978, 146- 52.
56. இராமன் மகாதேவன், "இந்தியாவில் வர்த்தகமும் அரசியலும்" இந்திய நிர்வாக இயல், ஆமதாபாத், 29-31, மார்ச், 1989.
57. ஆந்திர வர்த்த சபை, ஆண்டு அறிக்கை, 1935, 13-4.
58. மகாதேவன், Ibid 27.
59. Ibid, 27, note 75.
60. SICC, ஆண்டு அறிக்கை; ஜன- டிச, 1947. 150-1.
61. Ibid, 29.
62. SICC, அறிக்கை, ஜன.டிச 1946, 37 Quoted in மகாதேவன் Ibid, 30.
63. அ. ஆ. 2295, வளர்ச்சித் துறை, 24 ஏப். 1949, தமிழ்நாடு ஆவணக் காப்பகம், அ.ஆ. 328, வளர்ச்சித் துறை, 21 ஜன. 1946, தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.
64. தென்னிந்த தொழிற்துறை வர்த்தக மாநாடு நடவடிக்கைகள், 49, மகாதேவன், Ibid. 31.
65. ஆரிஸன் opcit 121-2.
66. FICCI, ஆண்டு அறிக்கை 1946, II, 189.
67. Cited in Ibid, 31.
68. Ibid, 32.
69. காட்கில் டி. ஆர்., பொருளாதாரக் கொள்கையும், வளர்ச்சியும், பூனா, 1955, 141,
70. இந்திய தேசிய காங்கிரஸ் கலைக் களஞ்சியம், எம் மற்றும் எஸ். ஜி. ஷேடி, புதுடில்லி, Ix, 312.
71. Ibid, I x 262.
72. கா. தி. ப. Lxx viii, பிற்சேர்க்கை x 459.
73. காங்கிரஸ் கலைக் களஞ்சியம், xii 531.
74. தே. தே. ப. xv, 36, 49-50,111.
75. மாநில மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கை, 38.
76. கோஷ், இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்ஜியம் 1, 277-85.
77. ரஞ்சித் ராய், "பஞ்சாபின் புனித (அற்ற) அரசியல்" பிசினஸ் ஸ்டேண்டர்டு, 30. அக், 1981.

படிப்பகம்

www.padippakam.com



78. மன்கேகர் டி. ஆர், ஹாமி மோடி: பலரின் வசதியான வாழ்க்கை, பம்பாய் 1968, 233.4; பிராக்மோரேஸ், ஸ்ரீ புருசோத்தம் தாஸ், தாக்குர்தாஸ், பம்பாய், 1957, 238.
79. டைம்ஸ் ஆப் இந்தியா, பிப். 11, 1955, Cited in ஆரிஸன், opcit, 117.
80. முன்ஷி கே.எம்,, சுதந்திரத்திற்கான யாத்திரை, 128.
81. 1942—7இல் அதிகார மாற்றம், X 497-99, 551-2.
82. கோஷ், இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்யம் II, 297-8.
83. மேனன், இந்தியாவில் அதிகார மாற்றம், 358-9, அழுத்தம் ஆசிரியருடையது.
84. அழுத்தம் ஆசிரியருடையது
85. மிச்ஷேல் பிரேஷர், நேரு, லண்டன், 1959, 424.
86. இந்திய அரசின் அறிக்கை, இந்தியாவின் அரசியல் சட்ட அமைப்பு, டில்லி, 1972 தொகுப்பு, 87—93, 98-9, 113-4.
87. சரத் சந்திரபோஸ், "ஓர் அரசியல் அமைப்பின், மாயையும் மறுப்புகளும்" சரத் சந்திரபோஸ் நினைவுத் தொகுப்பு, கல்கத்தா, 1982, 427.
87a. அழுதத்ம் ஆசிரியருடையது.
88. கோஷ், இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்ஜியம், II, 127-8.
89. Ibid II 278-9
90. காட்கில், "போர்க்கால கட்டுப்பாடுகளும அமைதிக்கால முடிவுகளும்" in opcit, 80-1.
91. ஜவஹர்லால் நேரு, டிஸ்கவரி ஆப் இந்தியா, லண்டன், 1956, 545.
92. Ibid, 550 அழுத்தம் ஆசிரியருடையது.
93. நே. தே. ப, XII, 134— அழுத்தம் ஆசிரியருடையது.
94. நேரு, டிஸ்கவரி ஆப் இந்தியா, 548.
95 Ibid, 550.
96. நே. தே. ப, xv, 562, 566, அழுத்தம் ஆசிரியருடையது. Ibid 123; ixv, 160, 187, 474-5, 477.
97. Ibid, xiv, 325, அழுத்தம் ஆசிரியருடையது.
98. Ibid xiv, 325, அழுத்தம் ஆசிரியருடையது.

படிப்பகம்

www.padippakam.com



99. Ibid, 440— 41-2, xil 332.
100. Ibid, 2வது வரிசைகள், I, 311 அழுத்தம் ஆசிரியருடையது.
101. Ibid, 198 439, xiv, 228.
102. சகிய் பி.டி. சர்தார் வல்லபாய் படேல் வாழ்க்கையும் படைப்புகளும், பம்பாய், 89.
103. கா. தி. ப. Lxxxvii, 216.
104. மைக்கேல் பிரேஷர், opcit 377—8; அப்துல்கலாம் ஆசாத், "இந்தியா சுதந்திரத்தை வென்றது" கல்கத்தா, 1959, 207; துர்க்காதாஸ், சர்தார் படேல் கடிதங்கள், 1945-50, ஆமதாபாத், V, 113.
105. நே. தே ப. xiv, 450; xv, 458; x, 32; xi, 788-9.
106. Ibid, 2வது வரிசை II, 470,
107. செஸ்டர் பவுல், "தூதரின் அறிக்கை" லண்டன், 1954, 280
108. நே தே.ப. xv, 279.
109. கோபால், opcit, 208.
110. போஸ். ஏ. சி. "ஜே & கேபின், சேர்க்கை—II "ஸ்டேட்ஸ்மேன், 20, டிசம். 1995.
111. 19 2-7இல் அதிகார மாற்றம், xi, 416-8.
112. போஷ், opcit.
113. நே.தே.ப. xv, 367.
114. கோஷ், இந்தியாவில் பிரிட்டிஷ், ராஜ்ஜியம், II, 304-5.
115. லேனார்ட் மோர்ஸ்லே, "பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் கடைசி நாட்கள், 1916, 21—2.
116. கா. தி. ப. Lxxx ix 8.
117. ஜவஹர்லால் நேரு, "சுதந்திரமும் அதன் பிறகும்", டில்லி, 1949, 5. 7. 59.
118. Ibid 65,
119. Ibid 89; நேரு; ஜவஹர்லால் நேரு உரைகள், 152, 341-2, 345, 352,
120. Ibid-361, அழுத்தம் ஆசிரியருடையது.

படிப்பகம்

www.padippakam.com



121. கோபால், op cit 122.
122. டியுல்சுடன் பேட்டிகள் மீதான நேருவின் குறிப்புகள், 22, மே 1953; 128.
123. Ibid 127
124. Ibid 272
125. Ibid 131-3
126. 1942-7இல் அதிகார மாற்றம் x, 157.
127. Ibid 430
128. கோபால், op cit 176.
129. கருணாகர் குப்தா, "மக்மோகன் கோடு, 1914-45 பிரிட்டன் மரபுரிமை" சீனா காலாண்டு இதழ் (லண்டன்)— ஜூலை செப். 1971.
130. துர்க்காதாஸ் x, 337-8, 340.
131. நே. தே. ப. 2வது வரிசை, 581-2.
132. பாமிதத், இந்தியா டுடே, பம்பாய், 1949, 575.
133. நேரு, சுதந்திரமும் அதன் பிறகும், 275.
134. Ibid, 280—அழுத்தம் ஆசிரியருடையது.
135. நேரு, ஜவஹர்லால் நேரு உரைகள், 1949—1953, 116, 126.
136. நியூயார்க் டைம்ஸ், 28 ஏப். 1949; கோபால், op cit 54.
137. கோஷ், இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்ஜியம் II, 319.
138. நே. தே. ப. 2வது வரிசைகள், II, 527.
139. Ibid, 548.
140. பாமி தத், op cit 576,
141. கோபால், op cit 236-7.
142. அம்பேத்கர், மொழிவாரி மாநிலங்கள் மீதான சிந்தனைகள் பம்பாய், 1955, 14.
144. Ibid
145. அரசியல் நிர்ணய சபை விவாதம். ix, எண் 33, ப. 1370.
146. Ibid. 1430. Quoted in Harrison, op cit 283.
147. கோபால், op cit 222.

OO

படிப்பகம்

www.padippakam.com

## எமது பிற வெளியீடுகள்

- ☐ இந்தியப் பெரு முதலாளி வர்க்கம் — ரூ. 80-00
- ☐ சரித்திரத்தை மாற்றிய சதி வழக்குகள் — ரூ. 90-00
- ☐ சாதியும் வர்க்கமும் — ரூ. 50-00
- ☐ நமது மருத்துவ நலப் பிரச்சினைகள் — ரூ. 45-00
- ☐ கடவுள் என்பது என்ன? — ரூ. 45-00
- ☐ பறிமுதல் — ரூ. 40-00
- ☐ இந்திய விடுதலையின் இறுதி நாட்கள் — ரூ. 50-00
- ☐ பிராமணமதம் (தோற்றமும் வளர்ச்சியும்) — ரூ. 40-00
- ☐ பகவத்கீதை: ஓர் ஆய்வு — ரூ. 35-00
- ☐ வேதங்கள்: ஓர் ஆய்வு — ரூ. 25-00
- ☐ மகாபாரதத்தில் பெண்ணியம் — ரூ. 25-00
- ☐ திராவிட இயக்கத்தில் பிளவுகள் — ரூ. 20-00
- ☐ சகாராவின் தாகம் — ரூ. 20-00
- ☐ பிணத்தை எரித்தே வெளிச்சம் — ரூ. 32-00
- ☐ போராளிகள் காத்திருக்கின்றனர் — ரூ. 20-00
- ☐ அடிமைகள் — ரூ. 40-00
- ☐ கோவிந்தன் — ரூ. 35-00
- ☐ ஏழு கார்ட்டூன்களும் ஒரு வண்ண ஓவியமும் — ரூ. 30-00

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## சுனிதி குமார் கோஷ்

இன்றும், தனது முதுமைக் காலத்திலும் புரட்சிகரப் பணியைச் செய்துவரும் சிறந்த மார்க்சிய-லெனினிய சிந்தனையாளர் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த தோழர். சுனிதி குமார் கோஷ். இவர் தனது இளமைக்காலத்திலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்தவர். சி.பி.எம் உருவானபோது அதனுடன் இணைந்த இவர் நக்சல்பாரி எழுச்சியில் தன்னை இணைத்துக் கொண்டவர். மே, 1967 இல் உதயமான கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் அனைத்திந்திய ஒருங்கிணைப்புக் குழுவிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிய-லெனினிய) யின் மையக் குழுவிலும் உறுப்பினராக இருந்து புரட்சிகர இயக்கத்தை வழி நடத்தியவர். இக்கட்சியின் லிபரேசன் (ஆங்கிலம்), தேசாபிமானி (வங்காளம்) இதழ்களின் ஆசிரியர் குழுவில் முக்கிய பங்காற்றியவர். பல ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை நடத்திய உறுதியான புரட்சியாளர்.

மிகச்சிறந்த எழுத்தாளரும், மார்க்சிய பொருளாதார அறிஞருமான இவர் இந்தியப் பெருமுதலாளிவர்க்கம், இந்தியாவும் பிரிட்டிஷ் இராஜ்ஜியமும் 1919-1947: புகழ், அவமானம், அடிமைத்தனம் (இரண்டு தொகுதிகள்) ஆகிய புகழ் பெற்ற ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். 'வரலாற்றுத் திருப்புமுனை: லிபரேசன் இதழ் திரட்டு' (இரண்டு தொகு திகள்) என்ற தொகுப்பு நூலை துணை ஆசிரியர்களுடன் இணைந்து எழுதியுள்ளார். தொடர்ந்து இந்தியாவின் வரலாறு அரசியல் பொருளாதாரம் பற்றிய நூல்களை மார்க்சிய வழியில் எழுதி வருகின்றார்.

# அலைகள்

*முகப்போவியம் : மாரிமுத்து*

படிப்பகம்